Reg. No. M. 2911.

ஸ்ரீமுக-ஆவணி
1933-ஸு ஆகஸ்ட்டு-செப்டம்பர்மீ

# பாரதி




17 NOV 1933
MADRAS

மாலை 5. மணி 5.

ஓர் செந்தமிழ்
## மாதப் பத்திரிகை.

காலிகோ- கிலட் ப...
ரா. நாராய...ம் ...க்கு விலை ரூ.

ஆசிரியர்.
ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

பிரசுராலயம்:-
...த்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

29811
33.5.5
197813

# சுப்ரமண்ய பாரதியார்

அல்லது

## தமிழ் நாட்டின் தேசிய கவி.

(ஓர் அரிய ஆராய்ச்சி நூல்.)

திரு. சுத்தானந்த பாரதியார் அவர்கள் எழுதியது.

"பாரதி" ஆசிரியர்

திரு. ரா. நாராயணஸ்வாமி அவர்கள் பதிப்பித்தது.

கவிச் சக்ரவர்த்தி பாரதியாரின் வாழ்க்கை வரலாறு, கவிதா விலாசம்
தேசாவேசம், இயற்கை ரசனை இவைகளை யறிய இதைவிட
வேறு சந்தர்ப்பம் வாய்க்கப்போகிறதா?

கிரௌன் $\frac{1}{8}$ சைஸ் கிளேஸ் பதிப்பு.

**240** பக்கங் கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ *1*.

தபாற் செலவு வேறு.

---

# "பாரதி"

# பைண்ட் வால்யம்

'தமிழ் நாட்டு மாடேன் ரேவியூ' வெனப் புகழப்பெற்று,
சென்ற 1929-ம் ஆண்டு முதல் வெளிவந்து கொண்டிருக்கிறது.

இந்த பைண்ட் வால்யங்களில் பல பெரியோர்கள் சரிதைகளும்,
தேசாபிமானச் செல்வர்களின் ஜீவியக் குறிப்புகளும்,
அவர்தம் படங்களும் நிறைந்திருக்கின்றன.


நேர்த்தியான காலிகோ- கில்ட் பிரிண்ட்.

| | | | |
|---|---|---|---|
| 1-ம் வருட வால்யம் | 1-க்கு விலை | ரூ. | 3—0—0. |
| 2-ம் ,, | ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் ,, | ,, | ரூ | 2—8—0. |
| 4-ம் ,, | ,, | ரூ. | 2—8—0. |
| 3-ம் வருட அனுபந்தம் | | ரூ. | 0—4—0. |

தபாற் செலவு பிரத்தியேகம்.

வெளி நாட்டிலுள்ளோர்க்குத் தபாற் செலவுடன்
வால்யம் 1-க்கு ரூ $3\frac{1}{2}$ அல்லது $5\frac{1}{2}$ ஷிலிங்.

'பாரதி' ஆலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.



சிறந்த செந்தமிழ் மாலிகை.

## பொருள் அடக்கம்.

மாலை **5.** ஸ்ரீமுக௵ ஆவணி௴ மணி **5.**


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஒற்றுமையின் உயிர் நிலை— பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் ... | 321 |
| 2. | நமது பத்திரிகை—ஆசிரியர், "பாரதி." ... | 323 |
| 3. | ஜோதிபாய்—திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள் ... | 325 |
| 4. | ஜனநாயகக் கொள்கைகள்—திரு. **K.** வெங்கட ராவ் அவர்கள் | 332 |
| 5. | பெற்றோர்களின் ஒற்றுழைப்பு— திரு. என். வேங்கடரமணன் அவர்கள் ... | 335 |
| 6. | பத்திரிகா தருமம்—பண்டித திரு. பெ. இராமாநுஜம் அவர்கள் | 342 |
| 7. | எச்சில் மாம்பழம்—திரு. **S. V.** வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், **B. A., B. L.** ... | 350 |
| 8. | **தாமரையின் காதல்**—(காளிதாசன்) ... | 354 |
| 9. | மகாத்மா காந்தியும் தற்கால நாகரீகமும்— தீனபந்து ஸீ. எப். ஆண்ட்ரூஸ் அவர்கள் ... | 357 |
| 10. | செஞ்சிக் கோட்டை—திரு. **O. P.** தேசிகன் அவர்கள் ... | 367 |
| 11. | பாரதியார் பாமணம்— பண்டித ஜனாப் **K.** அப்துல் சுகூர் அவர்கள் ... | 373 |
| 12. | மைந்தன் வரம்—திரு. பெ. தூரன் அவர்கள் ... | 375 |
| 13. | ஹரிஜன இயக்கம்—திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், **M. A.** | 382 |
| 14. | கற்பின் கண்ணியம் அல்லது அமா விநாயகர்— ஸ்ரீவை. திரு. குஞ்சு அவர்கள் ... | 389 |
| 15. | ஆசிரியக் குறிப்புகள்— ... ... ... | 395 |


படங்கள்:—


1. மகாத்மா காந்தி.
2. அன்னி பெசண்ட் அம்மையார்.



மகாத்மா காந்தி.

தமிழ் நாடு" உதவியது.

# பாரதி

ஓர் செந்தமிழ் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம்,
எல்லாரும் இந்தியா மக்கள்;
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை,
எல்லாரும் இந்நாட்டு மன்னர்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.

ரா. சுப்ரமண்யம்,
பொறுப்பாசிரியர்.

| | | |
|---|---|---|
| மாலை 5 | ஸ்ரீமுக-ஆவணி<br>1933-ஆ ஆகஸ்ட்டு-செப்டம்பர் ௴ | மணி 5 |


## ஒற்றுமையின் உயிர் நிலை.

பண்டித திரு. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்.

ஒற்றுமையாக உழைத்திடுவோம்—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்
வெற்றுரை பேசித்திரிய வேண்டாம்—இன்னும்
வீணாய்ப் புராணம் விரிக்கவேண்டாம். (1)

கூடி விருந்துண்ண வேண்டவில்லை—பெண்ணைக்
கொண்டு கொடுக்கவும் வேண்டவில்லை
நாடி யெவரோடும் நட்பினராய்த்—தேச
நன்மைக் குழைப்பதில் நஷ்டமுண்டோ? (2)

---

கடவுள் தனது மூல சக்தியில் எல்லாம் தோன்றி அதிலேயே அடங்கச் செய்கிறார். உலகம் அச் சக்தியின் நடனசாலை. முத்தொழிலும் அது புரியும் விளையாட்டுகளே.

கீரியும் பாம்புமாய்ச் சண்டையிட்டு—ஜாதி
கீழென்றும் மேலென்றும் நாட்டிவிட்டு
பாரதத் தாய்பெற்ற மக்களென்று—நிதம்
பல்லவி பாடிப் பயனெதுவோ? (3)

வேதன் முகத்தி லுதித்தவரே—இங்கு
மேலா யெழுந்த குலத்தினராம்!
பாதமதில் வந்த பாதகரே—இந்தப்
பாரிலிழிந்த அடிமை களாம்! (4)

வாயில் விஷமுண்டு பாம்பினுக்குக்—கொட்டும்
வாலில் விஷமுண்டு தேளினுக்குத்
தாயிற் சிறந்த பிரமனுக்கும்—இரு
தாளில் விஷமுண்டோ சாற்றுவீரே. (5)

உச்சி மரத்தில் சுவைக்கனியும்—தூரில்
ஓடிப் பரந்தெழும் வேரதனில்
நச்சுக்கனியும் பழுத்த பலாமரம்
நானிலத் தெங்குமே கண்டதுண்டோ? (6)

ஜாதி யிரண்டலால் வேறுளதோ—ஔவைத்
தாயினுரையும் மறந் தனிரோ?
ஆதி இறைவன் வகுத்ததுவோ—மக்கள்
ஆக்கிய கற்பனை தானிதுவோ? (7)

நாயனார் வந்த திருக்குலத்தை—உயர்
நந்தனார் வந்த பெருங்குலத்தை
தீய குலமெனத் தள்ளுவமேல்—அது
தெய்வம் பொறுக்கும் செயலாமோ? (8)

வேதியராலே மழை வருமேல்—வயல்
வேலை செய்யாது விளைந்திடுமோ?
வாதமெலாம் கட்டி வைத்திடுவோம்—ஒத்து
வாழ்வதை மேற்கொண் டுழைத்திடுவோம் (9)

வீட்டுக்குள் சண்டைகள் போடுவதேன்—கூரை
வெந்து விழுவதும் கண்டிலிரோ?
நாட்டுக்கு நன்மையை நாடுபவர்—இந்த
நாடக மாடல் நகைப்பலவோ? (10)

---

நமது வாழ்வின் வினையைச் செயற்குரிய காலமே ஆயுள். நமது வினையின் அளவே ஆயுளும் ஆகும்.



மானமே வாழ்வின் உயிர்நிலையாம்—அதை
மாசுறச் செய்தல் கொடுங்கொலையாம்.
ஈனஜா தியெனும் பேச்சினைப்போல்—நெஞ்சை
ஈர்ந்திடும் வாளொன்று வேறுளதோ? (11)

மன்னுயிர்க் காக உழைப்பவரே—யிந்த
மாநிலத் தோங்கும் குலத்தினர்கள்
தன்னுயிர் போற்றித் திரிபவரே—என்றும்
தாழ்ந்த குலத்தில் பிறந்தோரம்மா. (12)

---

# நமது பத்திரிகை.

நா. நாராயணஸ்வாமி, ஆசிரியர் "பாரதி."

"பாரெல்லாங் கோயி லென்ப தறிந்திடுவோம்—அருட்
பணியெனும் யோகத்தைப் பயின்றிடுவோம்!
ஊரெல்லாஞ் சிற்றுலக மாக்கிடுவோம்—அந்த
உம்பரின் இன்ப மிங்கு கொணர்ந்திடுவோம்."



அன்னை பரா சக்தியின் இன்னருளால் "பாரதி" தேச சேவை செய்யத் தனது ஐந்தாம் ஆண்டில் கிளம்பி யுள்ளாள். அருட் பணி யாற்றத் தோன்றும் பத்திரிகைகள் எல்லாவற்றிற்கும் எண்ணிலா இடுக்கண்கள் தோன்றுவது இயல்பு. "பாரதி"யின் பாதையிலும் பல்வகை இடையூறுகள் தோன்றினும், நமது பத்திரிகை, அன்பே மதமாகவும், மாந்தரே நடமாடுங் கோயில்களாகவும், தேசமே தெய்வமாகவும், பொது ஜன சேவையே வாழ்வின் குறிக் கோளாகவும் கொண்டுள்ளதை யறிந்த சக்தித் தாயின் திருவருளால் தடைக் கல்கள் அனைத்தும் நற நறவென்று நொறுங்குகின்றன. நடைபெறும் ஆண்டிலும் அடுத்து வரும் ஆண்டுகளிலும் "பாரதி" புத்துயிரும் புது வாழ்வும் பெற்று, பொது ஜன சேவையில் ஆற்றல் மிகுந்த தேசப்பணி செய்யும் திறனளிக்குமாறு உலகத் தாயாகிய பரா சக்தியைப் பிரார்த்திக்கிறோம்.

---

வினை முடிந்து, கடவுளின் அருளால் எல்லா உயிர்களும் முக்தி யின்பம் பெறலாம். வினை யறிந்தாற்றலே விடுதலை வழியாகும்.

மழலைச் சொற்களுடன் "பாரதி" அவ்வப்போது சிறிது சிறிது தாமதித்து வரவேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பினும், தான் கொண்ட கொள்கையைக் கைவிடாது, ஏற்படுத்திக்கொண்ட பாதையைச் சற்றும் விட்டகலாது, சீரிய பணியையே செய்து வந்துள தென்பதை வாசக அன்பர்கள் கவனிக்க வேண்டுகிறோம். சுதந்திர சக்தியின் சுடரெனவும் தேச பக்தியின் குழவியெனவும் நமது பத்திரிகை திகழ்ந்து வந்தது, திகழ்ந்து வருகிறது. தன் சக்திக் கெட்டிய மட்டில் அறிவின் பேரொளியாய் பிரகாசித்து வந்தது, வருகிறது. தேச மக்களின் சுதந்திர நாடி அடிக்கும் வேகத்தைக் குறித்துக் காட்டி வந்தது, வருகிறது. முதன் முதலில் "பாரதி" தாய்ப் பாலில் சிறந்து விளங்கிற்று. தாய்ப் பால் சுரப்பது நிற்க, அன்பர்தம் ஆதரவு போதியளவு கிடைக்காது சற்று மெலிய ஆரம்பித்தது. சக்தி யற்ற நாட்களிலும் "பாரதி" சற்றேனும் பின் வாங்காது, சளைக்காது உழைத்து வந்ததற் கிணங்க, அன்பர்தம் ஆதரவும் வேண்டியளவு கிடைத்திருந்தால், பத்திரிகா உலகில் நமது மாஸிகை ஓர் வீர விளக்கென இந்நாள் பிரகாசிக்கு மன்றோ? இனியேனும் வாசக அன்பர்கள் "பாரதி"யின் நிலையைப்பற்றி அனுதாபமுற்று, அன்பு செலுத்தி ஆதரவளிக்கும் மனங் கொள்ள அருள் புரிய வேண்டுமென்று எல்லாம் வல்ல வல்லவனை இறைஞ்சுகின்றோம்.

உலகிற்கு—உலக மக்களுக்கு ஓர் அருட் பணி யாற்றவே பத்திரிகைகள் நடத்தப்பட வேண்டும். வியாபார உத்தேசத்தைக் கொண்டு பத்திரிகைகளை நடத்த இயலாது, பத்திராதிபர்கள் எண்ணிறந்த கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தல் கண்கூடு. ஒரு சுப்ரமண்ய சிவத்தை ஆசிரியராகக் கொண்ட "ஞான பானு"வும், ஒரு சுப்ரமண்ய பாரதியாரை ஆசிரியராகக் கொண்ட "இந்தியா"வும், ஒரு கல்யாணசுந்தர முதலியாரைக் கொண்ட "தேச பக்த"னும் "நவ சக்தி"யும் **உண்மையான உயர்தர தேசீய பத்திரிகைகள்.** நமது "பாரதி"யும் இவைகளை யொட்டியே வெளிவருவ தென்பதைக் கவனிக்கற்பாலதாகும். க்ஷீணதசை யிலிருக்கும் ஓர் பத்திரிகைக்குப் புத்துயிரளித்துப் பொது ஜன சேவை செய்ய உதவுவது மகத்தானதோர் இணையிலா தேசீய கைங்கர்ய மாகும். இந்நாள் வரை எவ்வளவோ உயர்தரப் பத்திரிகைகள் தகுந்த ஆதரவின்றி மறைந்துள்ளது நம் நாட்டின் துர் அதிர்ஷ்டமே யாகும். நம் நாடு சுதந்திரப் பாதையில் முனைந்து நிற்கையில், தேசாபிமானம் ததும்பும் பத்திரிகைகள் ஆதரவின்றித் தவிக்கவிடலாகா தென்பதை நாட்டு நலங் கருதும் ஒவ்வோர் அன்பரும் கவனிக்க வேண்டும்.

---

ஆண் பெண் இருவரும் ஒரே கடவுளாலேயே உண்டானவர்கள். பிறப்புரிமையில் இருவரும் ஒத்தவர்களேயாம்.

# ஜோதிபாய்.

## திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை அவர்கள்.



மேவாடின் சூரியனாகிய ராணா பிரதாபனின் சரித்திரத்தை அநேகர் அறிந்திருக்கக் கூடும். இவனுடைய அரசாட்சியின் கடைசி காலத்தில் சில ராஜத் துரோகிகளான ஜனங்கள் மகம்மதியர்களின் பக்கம் சேர்ந்து இவன் ராச்சியம் நசிப்பதற்குக் காரணமானார்கள். ராணா பிரதாபன் மகமதியர்களில் சம்பந்தம் விளைவிப்பதை எவ்வளவுக் கெவ்வளவு வெறுத்து வந்தானோ, அவ்வளவுக் கவ்வளவு அச் சம்பந்தம் விசேஷம் வாய்த்ததென்று தீர்மானித்த ராஜபுத்திரர்களும் இருந்தனர். அவர்களில் இக் கதையில் கூறப்

---

அன்னை பரா சக்தியின் திருவடிக் கமலம் போற்றித் "தாயே நீயே கதி" என்று அல்லும் பகலும் சிந்தித்த வண்ணமாயிருக்கும் எமக்கு எத்துணை கஷ்ட நஷ்டங்களும் நீடித்து நிற்பதில்லை. சிற்சில சந்தர்ப்பங்களில் நம் பாதை முன் தோன்றும் இடையூறுகளோ நம்மை பிரமிக்கச் செய்கின்றன. இந் நிலையோ இருளடர்ந்த கானகத்தில் துணையின்றி—திக்கின்றி தவிப்பதுபோல் காணினும்—நாம் கலங்கினும், திடீரென்று பளிச்சென்னும் ஒளி வீசுவதைக் காண்கிறோம். "கலங்கேல்! மனத் தளர்வு கொள்ளேல்! என்னருள் உனக் குள்ளளவும் யாது குறை!" என்று யாரோ கனிவொன்று இன்னிசை பாடுவதைக் கேட்கவே திரும்பிப் பார்த்தால், ஆஹா! அது தெய்வீகக் காட்சி—தாயின் இன்னொளி. இது என்ன கனவோ, நினைவுதானோ என ஐயுற்றுக் கண்ணைத் துடைத்துத் துடைத்துப் பார்த்தாலும் சற்று முன் பார்த்தது ஒன்றுமே யில்லாமற் போயினும், அக் காட்சியோ மனதை விட்டு அகலுவதே கிடையாது. அன்னையின் கட்டளைப்படி எது வரினும் கவலாத மனத்துடன், மனத் தளர்வென்பதே யின்றி, பொது ஜன சேவையே நமது வாழ்க்கையின் லட்சியமாகும் என்னும் திடமுடன் நம் கடனாற்ற விரைந்து செல்கின்றோம்.

---

சாதி நிற வேற்றுமைகள் மனிதன் மாயையால் உண்டானவை. இதனால் உலகில் எவ்வளவு செருக்கும், பொறாமையும் சச்சரவும் வளருகின்றன.

படும் ராஜா மான்சிம்மனும் ஒருவன். தன் தங்கையாகிய **ஜோதி பாயை** அக்பருக்கு விவாகம் செய்துகொடுத்து அதனால் சக்ரவர்த்தியின் தயவைப் பெற்றிருந்தான். ஒரு நாள் சூரியாஸ்தமன வேளையில் இவன் தனிமையாக ராஜஸ்தானத்திலிருக்கும் ஆரவலி மலையின் அடிவாரத்திற் தனது சௌரியப் பிரதாபங்களைத் தானாகவே புகழ்ந்துரைத்த வண்ணம் உலாவிக்கொண்டே நிமிர்ந்து நோக்கினான். எதிரில் ஒரு ஸ்திரீ ரத்னம் வருவதைக் கண்டான்.

இந்த ரமணி யார்? இவள் அடிகள் செழிமையாக வளர்ந்து பனியில் தோய்ந்து அருகம் புல்லின்மேல் பெருங்காற்றினாலடிபட்டு வீழ்த்தப்படும் புஷ்பராசி போன்று மிக மிருதுவாயிருக்கின்றனவே. இவளின் மெல்லிய நடை சேனா வீரர்களின் முறட்டு அடிகளினால் கிளரப்பட்டிருக்கும் இக் கானகப் பாதைக்கு மெத்த அழகைத் தருகின்றதே. இவள் என்னைக் குறித்தே நடந்து வருவதாகத் தெரிகின்றது. இதென்ன ஆச்சரியம்! இல்லை, இல்லை. ஒருக்கால் இவள் இவ் வன தேவதையோ! பின் யாராயிருக்கக்கூடும்? இவள் விசனத்திற்கே இருப்பிடமானவளாகக் காணப்படினும், இவள் மனத்துள்ள துயரமே இவளின் அழகை இன்னும் அதிகரிக்கச் செய்கின்றதென்பதில் தடை என்ன? என்றிவ்வாறு யோசித்துக்கொண்டிருக்கும்போதே அவ் வனிதா ரத்னமும் எதிரில் வந்து நின்றாள்.

**மான்சிம்மன்:**—அம்மா! அருகில் வா, நானொரு ராஜபுத்திரன். ஸ்திரிகளை எவ்விதம் கௌரவிப்பதென்பதை ராஜபுத்திரன் நன்கறிவான். ஆகையால் நீ சிறிதும் அச்சப்பட வேண்டியதில்லை.

**ஸ்திரி:**—இச் சொல் முழுப் பொய்.

**மான்:**—ஏ! அதிகப் பிரசங்கி! என்ன சொன்னாய்? மான்சிம்மனைப் பொய்யனென்று தைரியமாய் மறுபடியும் சொல்வாயா?

**ஸ்திரி:**—ஆம் இவ்வளவு மாத்திரமல்ல! இதிலும் அதிகமாகவே சொல்வேன்.

**மான்:**—உன் தைரியங் கண்டு எனக் களவற்ற வியப்புண்டாகின்றது. மான்சிம்மனின் வாள் ஸ்திரிகளின் தேகத்தைப் பரிசிக்காதன்றோ? அதனால் பெண்ணே நீ ஆபத்தில்லாது உயிர்த்திருக்க ஏதுவுண்டு?

---

ஒவ்வொரு ஜீவனும், தன் ஆயிளில் உலகிற்கு ஒரு நல்வினை செய்யும் நோக்குடனேயே கடவுளால் படைக்கப்பட்டது. ஜீவன் அந்த அருட் பணியையே அணிந்துள்ளான். அவ்வருட் பணியாற்றி ஆண்டவனைக் களிப்பித்தால் ஜீவன் முக்தியடையும். இல்லேல் பிறப்பும் இறப்புந் தொடரும்.



**ஸ்திரி.**—ஆயின் உடன் பிறந்தானின் இரத்தம் அதினும் தாழ்ந்ததோ? உன் வாளானது சகோதர ரத்தத்தினால் கறைபட்டிருக்கவில்லையா?

**மான்:**—மாதே! நீ ஏதோ புதிர் போடுகிறாயே. இதன் அர்த்தம் என்னவென்று தெரிந்துகொள்ளக்கூடிய சாமர்த்தியம் என்னிடத்தி லில்லை.

**ஸ்திரி:**—(வீராவேசத்துடன்) உன் வாள் களங்கமுறவில்லையா? உன் வாளை உன் சகோதரர்களான ராஜபுத்திரர் மீது நீ உபயோகிக்கவில்லையா? மேவாட் ராச்சியத்தின் சூரியனும் பாரத மக்களால் பரிசுத்தனென்றும் பூஜிக்கத்தக்கவனென்றும் விளங்கும் பிரதாபனுக்கு விரோதமாக மொகலாயருடன் நீ சேர்ந்திருக்கவில்லையா? இதைக்காட்டிலும் வேறென்ன வேண்டுமென்கிறாய்?

**மான்:**—அவன் பெயரை இனி ஒரு முறை என் முன்னிலையில் உச்சரிப்பாயானால் நீ பெண்பால் என்பதைக்கூட மறந்துவிடுவேன். தெரியுமா? ஜாக்கிரதையாய்ப் பேசு!

**ஸ்திரி:**—(அலட்சியமாய் சிரித்துவிட்டு) இதில் சற்றும் ஆச்சரியமே இல்லை. தாய் நாட்டின் துரோகிக்குப் பெண் வதையில் அச்சமேது.

**மான்:**—நிறுத்து, நிறுத்து. என் கோபத்தை உன் சொற்களாலதிகப்படுத்தாதே. (உறையிலிருந்து வாளை உருவுகிறான்.)

**ஸ்திரி:**—உன் உடை வாள் என்னைப் பயமுறுத்தக்கூடிய சக்தி வாய்ந்ததன்று. பளபளவென்று மின்னும் உன் வாளை உற்று நோக்கு. ஐயோ! அதில் படிந்திருக்கும் உன் அன்னையின் ரத்தக் கறை சிறிதும் அழியாமலிருக்கின்றதே! ,

**மான்:**—மூடமே! பைத்தியக்காரி! என்ன சொன்னாய்?

**ஸ்திரி:**—என்ன சொன்னேனென்றா கேட்கிறாய்? இதைத்தான் சொன்னேன். மொகலாயர்களுக்காக நீ காட்டும் சூரத்தன்மை ஒவ்வொன்றும், செய்யும் உபகாரமனைத்தும் உன் ஜன்ம பூமிக்கு நீ காட்டும் கொடுமைகளன்றோ? இந் நன்றி மறந்த பாதகனை தேச மாதா என்றேனும் மன்னிப்பாளோ? மறந்துவிடுவாளோ?

**மான்:**—வாயை மூடு. உன் அழகு உன் உயிரைக் காப்பாற்றாதென்பதைத் தெரிந்து பேசு. உன் அழகைக் கண்டு மயங்கி உன்னை சிட்சியாமல் விடுவதற்கு நான் யவனனல்ல.

---

தன்னயமும், தேவைக்கு மேல் சிலர் சேர்ப்பதும், சோம்பலும் பலரை ஏழையாக்குகின்றன. இவ் வேற்றுமைகள் கடவுளின் கண் முன் இல்லை.

**ஸ்திரி:**—(ஆச்சரியத்துடன்) என்ன! நீ யவனர்களை வெறுக்கிறாயா? அவ்விதமாயின் உன் தங்கையை யவனனுக்கு ஏன் விவாகம் செய்வித்தாய்? மொகலாயர்களுக்கேன் சகாயம் செய்தாய்?

**மான்:**—இவை யெல்லாம் என் நாட்டில் ரத்த ஆறு பெருகாதிருப்பதற்கே.

**ஸ்திரி:**—பிரதாபன் உனக்குச் செய்த துரோகம் என்ன? அவனை ஏன் பகைக்கிறாய்? உன்னிடம் நிலைத்துள்ள கபடமும் துரோக சிந்தையும் அவனிட மில்லாமையால் நீ இவ்வாறு செய்கிறாய் போலும்?

**மான்:**—(வாளை உருவிய வண்ணம்) பெண் பேயே! உயிரிழக்கத் தயாரா யிரு. இனியும் உன் கடுஞ் சொல்லைச் சகிக்க மாட்டேன்.

**ஸ்திரி:**—(தைரியத்துடன்) ரஜபுத்திரப் பெண் மரணத்திற்கு ஒரு நாளும் பயப்படவே மாட்டாள்.

**மான்:**—(வியப்புடன்) என்ன! நீ ரஜபுத்திரியா?

**ஸ்திரி:**—ஆம். ஒரு காலத்தில் களங்கமற்ற ரஜபுத்திரப் பெண்ணாகவே நானிருந்தேன்.

**மான்:**—இருந்தேன் என்றால்? இப்போதும் நீ ரஜபுத்திரப் பெண்தானே. உன் அதிகப் பிரசங்கத் தனத்தை மன்னித்து விட்டேன். ரகசிய நிலைமையிலுள்ள உன் முகத்தைத் பார்ப்போம். வெளிச்சத்தில் வந்து நில். உன் குரல் எனக்கு முன் பழகியதாகத் தோன்றுகிறது. டில்லி பாதுஷா மொகலாய சக்ரவர்த்தி அக்பர் கூட அஞ்சும் மான்சிம்மனை மிரட்டிப் பேசக்கூடிய ஸ்திரி ரத்னமாகிய நீ யார்?

**ஸ்திரி:**—அப்படி யல்ல! அப்படி யல்ல! "அக்பரும் துவேஷிக்கக்கூடிய மான் சிம்மன்" என்று சொல்.

**மான்:**—அவனுக் கவ்வளவு தைரிய மேது? அவனுடைய சிங்காதனத்திற்கு ஆதாரம் நானே என்பதை அவன் நன்கறிவான். இவ்வித மிருக்க அவன் என்னைக் கண்டு அஞ்சவேண்டியதுதானே.

**ஸ்திரி:**—ஐயோ உன் புத்தி இவ்வளவுதானா? ஜயமடைந்த அரசன், தான் ஜெயித்ததாகப் பெருமை பாராட்டுவா னன்றி

---

அருட்பணி, தவம், முத்திநெறி முயலல், பிரம்மசரிய மிருத்தல், கற்றல் முதலியன ஆண் பெண் இருவருக்கும் உரியது. சீதை, வள்ளி, சாவித்திரி, மைத்ரேயி, ஔவை, மீரா பாய், ராணி லக்ஷ்மீ பாய் முதலியோர் உதாரணத்தைப் பார்க்கவும்.



ஜெயிக்கச் செய்தவனை மதிக்கவே மாட்டான். தன் வாளுக்கு அஞ்சித் தப்பித்தவனை கௌரவப் புத்தியுடன் நோக்குவா னென்று நீ நினைப்பது முழுத் தவறு. அக்பர் உன் முதுகைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்த போதிலும், வீரனும் தேசாபிமானியும், பௌருஷம் வாய்க்கப்பெற்றவனும், சுய மதிப்பை இழக்கச் சகியாதவனும் ஆகிய எதிரியையே (பிரதாபனையே) அவன் தன் மனதில் புகழ்ந்து கௌரவிக்கின்றான்.

**மான்:**—(ரோஷத்துடன்) நில், நில். மனிதன் பொறுமைக்கு எல்லையுண்டு. நீ உண்மையில் பிரதாபனால் அனுப்பப்பட்டிருக்கும் வேவுகாரி என்பதில் தடையில்லை. க்ஷத்திரிய தர்மப்படி நீ தண்டிக்கத் தக்கவள்தான்

(என்றிவ்வாறு கர்ச்சித்து வாளை யுருவிக் கை ஓங்கும்போது ஸ்திரீயானவள் தன்மீது போர்த்திருந்த போர்வையை எடுத்தெறிகிறாள்.)

**மான்:**—(திடுக்கிட்டு) என்ன, என்ன! **ஜோதிபாய்! என் தங்கை!** இதென்ன நான் காண்பது கனவா?

**ஸ்திரி:**—கனவல்ல. ஆம். உன் தங்கை ஜோதிபாய் நானே.

**மான்:**—தங்காய்! எனதன்புள்ள சகோதரீ! பரத கண்டத்து எதிர்கால சக்கிரவர்த்திக்கு அன்னாய்! என்னை மன்னித்துவிடு. நான் செய்த பிழையைப் பொறுத்துக்கொள். நிற்க, நீ துயரப்படுபவளாகக் காணப்படும் காரணம் யாதோ?

**ஜோதி:**—ரஜபுத்திர வீரனாகிய உனக்கு நான் துயரடையும் காரணம் தெரியாதது யாதோ?

**மான்:**—தங்காய்! உன் மொழிகள் எனக்குத் திகைப்பை விளைவிக்கின்றனவே. எவளின் ஆக்ஞா சக்கரத்தினால் இப் பாரத வர்ஷம் சுழன்று வருகின்றதோ, எவள் மிதமிஞ்சிய ஐசுவரியம், சுகம், போகம், பாக்கியம் இவைகளாகிற பெருங் கடலில் ஆழ்ந்தெழுந்து கொண்டு வருகின்றனளோ அத்தகையவளின் வாயினின்றும் துயரமென்ற சொல் புறப்படுமாயின் நான் திடுக்கிட மாட்டேனா?

---

மண் முதல் மனிதன் மட்டும் தக்க காலத்தில் சுத்தனை யடையலாம் நந்தன், சோகமேளன், கனகன், கபீர் துகாராம் முதலியோர் வரலாற்றைக் காண்க

**ஜோதி:**—உன் சுயநலப் பேய்க்கு என்னைப் பலியிட்டுவிட்டாய்.

**மான்.**—படபடக்காதே, தங்காய்! மனதைச் சாந்தப்படுத்திக் கொள். உன் மனம் கவலைகொண்டிருக்கிறது. சமாதானப்படுத்திக் கொள். உன் சொற்கள் எனக்கு விளங்கவே இல்லையே. எனக் கர்த்தமாகும்படி கூறு.

**ஜோதி:**—விளங்கவில்லையா? சொல்லுகிறேன் கேள். என்னைப் பிற மதத்தினனுக்கு ஏன் விவாகம் செய்துகொடுத்தாய்?

**மான்:**—என்னுடன் பிறந்தவளின் க்ஷேமத்தை நான்தானே கோரவேண்டியவனா யிருக்கிறேன். இதை யனுசரித்து நீ சக்கிர வர்த்தியின் மனைவியாய் அகண்ட ஐசுவரியத்தில் அளவற்ற போக பாக்கியங்களுடன் சுகமாக வாழ்வதன்பொருட்டே உன்னை இவ்வாறு மணக்கச் செய்தேன்.

**ஜோதி:**—(கோபத்துடன்) நான் சுகமாக வாழ்வது என் புருடனின் அன்பினாலும் எனது நற்குணத்தினாலுமன்றி, உனது நிலைமையை முன்னேற்றமடையச் செய்வதற்காகவென்றே இக் கலியாணத்தை நீ நிச்சயப்படுத்தவில்லையா?

**மான்:**—தங்காய்! நீ இவ்வாறு என்னை தூஷிக்கலாமா?

**ஜோதி:**—நீ உன் சுயநலத்தை மட்டும் கவனித்தாயன்றி, உன் ஏழைத் தங்கையின் சுகம்பற்றி நீ சிறிதேனும் சிந்தித்துப் பார்த்தாயா?

**மான்:**—(பரிகாசத்துடன்) ஐயோ பாவம்! டில்லியின் அரசி மெத்த ஏழையன்றோ?

**ஜோதி:**—எல்லாவற்றினும் ஐசுவரியமே முக்கியமா? அவ்வித மாயின் அத்தகைய போதனையை எனதிளமைப் பருவமிருந்து எனக் கேன் உபதேசிக்கவில்லை? ஐசுவரியத்தை மதியாத ஹிந்து குலத்தில் நான் ஏன் பிறந்தேன்?

**மான்:**—தங்காய், எல்லா மதங்களுடைய சாராம்சமும் முடிவி லொன்றே. மொகல் சக்கிரவர்த்தியே சுயமாக இக் கொள்கையை யனுஷ்டித்து நடத்துகிறானன்றோ?

**ஜோதி:**—இதுபற்றி உன்னுடன் சர்ச்சை செய்ய நான் விரும்ப வில்லை. எனது இளமைப் பருவத்திய சிந்தனைக்குத் தற்கால நிலைமை சிறிதும் ஒவ்வாததா யிருக்கின்றது. நீ என்னை உன் ராஜ்யத்தி

---

ஆன்ம கோடிகள் எல்லாம் கடவுளின் உடல். உலகம் அவன் நடமாடுங் கோயில். எவ் வுயிருள்ளும் அவ்வுயிராய் இறைவன் விளங்குகிறான். எவ் வுயிர்க்குந் தீங்கு செய்யினும் ஆண்டவனுக்குத் தீங்கு செய்த தொக்கும்.



லுள்ள ஓர் ஏழை ராஜபுத்திரனுக்கு ஏன் அளித்திருக்கக் கூடாது? உனது சுயநலத்தைப் பெரிதென மதித்துத் தங்க நாணயங்களுக்காக என்னை விற்றுவிட்டாய். இக் கவலை என்னை இராப் பகலாக வருத்துகிறதென்பதை நீ எங்ஙனம் அறிவாய்?

**மான்:**—தங்காய் எனக் கிப்பொழுதே ஞானோதயமாயிற்று. இதுபற்றி நீ முன்னதாகவே ஏன் சொல்லாதிருந்தாய்?

**ஜோதி:**—பெற்றோரளிக்கு மிடத்தில் மணந்து, கணவனுக்குக் கீழ் பணிந்து, கிடைத்தது கொண்டு ஒருவாறு சமாதானத்துடன் காலங் கழித்தலே பாரதப் பெண்களின் தர்மமாகும். இப்பொழுதேனும் உன் பாபத்திற்குப் பச்சாத்தாபமடைந்து மன்னிக்கும்படிக் கடவுளை வேண்டிக்கொள்.

**மான்:**—அன்னாய்! என்னை மன்னித்துவிடு! மன்னித்து விடு. நான் செய்த பெரும் பிழையை மன்னித்துவிடு. (முழந்தாளிட்டு வேண்டுகிறான்.)

**ஜோதி:**—நான் என்னவோ உன்னை மன்னித்தே இருக்கிறேன். ஆனால், உன் ராஜ்ய லட்சுமி உன்னை மன்னிப்பாளா?

**மான்:**—(கண்ணீர் விட்டவண்ணம்) அப்படிக்காயின் நான் இனி என்ன செய்வேன்? இவ்வளவு பாடுபட்டும் நான் என் பெயரை மணலின் மீது வரைந்துள்ளேன் போலும்!

**ஜோதி:**—ஆம், ஆம். சுயநலக்காரனாகிய உன் பெயர் மணல் மீதும், தாய் நாட்டுத் தொண்டனாகிய பிரதாபனின் பரிசுத்தப் பெயர் ஒவ்வொரு கற்பாறைகள் மீதும் வரையப்பட்டுள்ளன.

**மான்:**—(தலைமீது கை வைத்து மெத்த மன வருத்தத்துடன்) ஐயோ! பாழும் விதியே! என் ஒப்பற்ற காரியங்கள் முழுதும் இவ்வாறு முடிந்தனவோ?

**ஜோதி:**—இக் கேள்விக்கு நான் ஏன் பதில் கூறவேண்டும்? சரித்திர நூல்கள் விஸ்தாரமாகக் கூறப்போகின்றன.

மான்சிம்மன் இம் மொழி கேட்டு நடு நடுங்கினான். ஒன்றுந் தோன்றாதவனாக மௌனத்துடன் குறுக்கும் நெடுக்குமாகத் திரிய வாரம்பித்தான்.

ஜோதிபாய் மேற்றிசையை நோக்கி "ஆஹா எவ்வளவு ரமணீயமான நிழல் பூமிக்கு இறங்கிக்கொண் டிருக்கின்றது! அந் நிழல்

---

ஒவ்வொரு நாட்டின் நலந்தீதும் தன் நாட்டிற்குற்றது போல் எண்ணித் தக்கது செய்வதே உலக சமரஸத்திற்கு வழியாகும்.

# ஜன நாயகக் கொள்கைகள்.

திரு. *K*. வெங்கட ராவ் அவர்கள்.

விடுதலை! விடுதலை!! விடுதலை!!! நான் வேண்டுவது விடுதலை!

என்னிட உடல், மனம், ஆன்மா இவற்றை எதை விலங்கிலிட எண்ணினாலும் நான் அதற்கு ஒருக்காலும் சம்மதியேன்.

மனிதனுக்குண்டான அறிவிற்கும், பகவான் அருளிய பஞ்சபூதங்களுக்கும் எதிரிடையாகத் தோன்றும் எக் கொள்கையையும், எம் மார்க்கத்தையும் நான் எதிர்த்துப் போராடச் சற்றேனும் தயங்கேன்.

சைத்தான் ஏற்படுத்திய அர்த்தமற்ற புரோகிதக் கூட்டத்தையும், உண்மை யறியாத சமூகத்தையும் நான் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன்.

நான் ஆன்ம பரிசுத்தத்தைக் கோருபவன். பரிசுத்த வாழ்வை அடிப்படையாகக் கொண்ட அரசியலை நான் வேண்டுகிறேன். நான் சமத்துவம் கோருகிறேன். சமத்துவமென்றால் சமத்துவமான கடமைகளை நான் கோருகிறேன். நான் சமத்துவக் கொள்கைகளை மட்டும் கொண்டிருக்கவில்லை. ஆண், பெண், சிறுவர், பெரியோர், நம் தாய் நாட்டினர் பிற நாட்டினர் அனைவரையும் சமத்துவப் பார்வையால் பார்க்கவேண்டு மென்பது என் ஆன்மாவோடியைந்து நிற்கிறது.

---

ராஜபுதனத்தின் ஒவ்வொரு பாறைகள்மீது எவ்வளவு அழகை உண்டாக்குகின்றது! மேவாடின் சூரியனாகிய ராணா பிரதாபனின் கீர்த்தியொன்றே இனி விளங்கப்போகிறது. அண்ணா! சுயநல ஆசையால் முன் யோசனை சிறிதுமின்றி நீ செய்துவிட்ட பெரும் பிழையால் ரஜபுத்ர வம்சமும் ராஜ்யமும் வேரோடு நாசமாகி, இனி இப் பாகங்களில் இருள் கவிழ்ந்துவிடப் போகின்றதே. ஐயோ! என்று கண்ணீருதிர்த்து நின்றாள்.

---

கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலியவைகள் எல்லோருக்கும் பொது.



ஏற்றத் தாழ்வு, உயர் குலத்தோன், தாழ்ந்த குலத்தோன், ஜாதியால் பாகுபாடு இவைகளெல்லாம் ஓர் நாட்டை வாட்டும் பிணிகள்—மக்கள் மனதிலுள்ள புண்கள்—மக்கள் நல் வாழ்வை சிதைக்கும் கோடரிக் காம்புகள்.

ஜாதி வித்தியாசம், மத வேற்றுமைகள் அனைத்தும் பொய்களே.

சுதந்திரம் என்பதை நான் மனமாறப் போற்றிப் பணிகிறேன்.

சுதந்திரமே எனது உயிர் நாடி—எனது மூச்சு—என் குல தேவதை.

முக்தி—சுதந்திரம்—விடுதலை அனைத்தும் ஒன்றே.

சுதந்திரத்தைவிட உயர்ந்த பொருள்-பூசிக்கத் தகுந்த கொள்கை வேறெதுவுமில்லை.

சகோதரத்வக் கொள்கையில் நான் திடமான நம்பிக்கை கொண்டவன். மக்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு நடந்துகொண்டாலும் மனிதனுக்கு மனிதன் சகோதரனே யாவன். அறிவின்மையாலோ, அறியாமையாலோ வேற்றுமை பாராட்டி மனத் தாங்கல்கள் விளைவித்துக்கொள்கிறான். இவை கண்டிக்கத்தக்கன.

அரசியல், சமூகம், பொருளாதாரம் இத் துறைகளில் சுத்தம், சுதந்திரம், சமத்துவம் இக் கொள்கைகள் பரவியிருக்க வேண்டும்.

பாரமார்த்திகம், கல்வி, அரசியல் இத் துறைகளில் விபரீத மாறுதல்களை நான் வரவேற்கிறேன்.

பொது ஜனக் கிளர்ச்சி எதுவாயினும் அவைகளில் நான் ஈடுபட்டுழைக்க எக்காலும் தயாரா யிருக்கிறேன். பொது ஜனக் கிளர்ச்சி யனைத்தும் தெய்வ சம்மத முடையன. பொது ஜன வாக்கே தெய்வ வாக்கு.

சுதந்திரமே சமுதாயத்தின் உயிர். அடிமை யானவன் உயிரற்ற பிணம்—நடைப் பிணம்.

சுதந்திர தாகம் தணியவில்லை என்று எத் தேசத்தினரேனும் கூற முன் வருவரோ? சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட ஒவ்வோர் தேசத்தினரும் சுதந்திரம் பெற்றுச் சுக வாழ்வு வாழ்ந்தன ரென்றே உலகச் சரித்திரம் குறித்துக் காட்டுகிறது.

---

பூமியே அனைவரையும் வளர்ப்பதால் புவியோர் சகோதரராவர். மனித சமூகம் முழுவதும் ஒரு உடல். அதில் எங்கு துன்புறினும் உடல் முழுதும் அதை உணர வேண்டும்.

அரசாங்கம் "எனது, என்து" என்று ஒவ்வொருவனும் சொல்ல வேண்டும். அரசாங்க வரவு செலவில் என் பேச்சிற்கும் ஒரு மதிப்புண்டு என்று ஒவ்வொருவனும் சொல்ல வேண்டும். அதுதான் ஜன நாயகம்.

அரசியலுக்கு "நாயகன்" யாரெனின் "ஜனங்களே" யென்று கூற வேண்டும்.

உழைப்பில் உளது பிழைப்பு. உழைப்பவனே பிழைப்பவன். உழைப்பின்றேல் பிழைப்பில்லை.

கிராமவாசிகள் இஷ்டப்படி கிராம பரிபாலனம் நடக்கிறது; கிராம சௌகரியங்கள் கவனிக்கப்படுகின்றன. இதுபோலவே ஜில்லாவின் பரிபாலனம், மாகாண பரிபாலனம், நாட்டு அரசியல் அனைத்தும். இதுதான் ஜன நாயகம்.

நாட்டு மக்களிட ஆதரவு பெற்றதே அரசியல். மக்களிட நம்பிக்கையை யிழந்த அரசியல் மறு கணமே மாற்றப்படும்.

---

"பாரதி"ப் பத்திரிகையும்,
நமது வெளியீடுகளான புஸ்தகங்களும் மலேயா நாடுகளில்
கீழ் குறிப்பிட்டுள்ளவர்களிடம் கிடைக்கும்.

**Messrs. T. Subramanyam & Co.,**
**7, Batu Road,**
**KUALA LUMPUR, F. M. S.**

---

**The Manager, "India Novel Depot,"**
**71, Serangoon Road,**
**SINGAPORE, S. S.**

---

போக்கு வரவு என்பதற்கு இறப்பு பிறப்பு என்னும் ஜன நெருக்கம் அதிகமானால் ஜனங்கள் குறைந்த நாடுகளிற் குடியேறல் என்பதும் பொருளாம்.

# பெற்றோர்களின் ஒற்றுமைப்பு.

## திரு என். வேங்கடரமணன் அவர்கள்.

(இம்மாதம் 18—3—33 தேதியில் சேலத்தில் ஸ்ரீமதி பீகம் சுல்தான் மீர் அமிருத்தீன், பி. ஏ. (ஹானர்ஸ்) அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்ற சேலம் ஜில்லா முதலாவது ஆசிரிய மானேஜர்களின் மகாநாட்டில் செய்த பிரசங்கத்தின் சுருக்கம்.)

**பெருமை தங்கிய தலைவியவர்களே! சகோதர, சகோதரிகளே!!**

இன்று இப் பேரவையின்கண் சொற்பெருக்கிடுமாறு எனக்குப் பணித்துள்ள விஷயம் "பெற்றோர்களின் ஒற்றுமைப்பு" (Parental Co-operation) என்பதாகும். இச் சொற்றொடரைக் கேட்ட மாத்திரத்திலேயே பெற்றோர்கள் என்றால் யார்? எவரது பெற்றோர்கள்? அவர்தம் ஒற்றுமைப்பு யாருக்குத் தேவை? என்பது போன்ற வினாக்கள் எழுகின்றன. இவ்வினாக்களுக்கு விடை காணுமுன் "நீங்கள் யார்? நீங்கள் எதற்காக இங்கு கூடி யிருக்கின்றீர்கள்?" என்பதை சிந்தித்தல் வேண்டும். நீங்கள் நாட்டில் ஆரம்பக் கல்வியைச் சிறுவர் சிறுமிகளுக்குப் புகட்டும் புனிதமான கடமையை மேற்கொண்ட ஆரம்ப ஆசிரியர்கள் ஆவீர்கள். உங்கள் கடமையில் வெற்றி யுறுவதற்கான துறைகளையும், முறைகளையும் ஆராய்ந்து முடிவு காண்பதற்கே மகாநாடு என்ற பெயரால் ஈண்டு குழுமி யிருக்கின்றீர்கள். ஆகவே, ஆரம்பப் பாடசாலைகளை ஆங்காங்கே நிறுவி, அறியாமையில் ஆழ்ந்துள்ள சிறுவர் சிறுமியர்க்கு ஆரம்பக் கல்வியை அறிவுறுத்தி, அம் முறையில் மக்களைக் கவர்ந்துள்ள அஞ்ஞான மென்னும் அந்தகாரத்தை யகற்றுவதற்குத் துணிந்த உங்களுக்கு ஊரிலுள்ள படிக்கும் வயது வாய்ந்த பிள்ளைகள் அனைவரையும் உங்கள் பாடசாலைகளுக்கு வந்து கல்வி கற்குமாறு தூண்டுவதற்கு அப் பிள்ளைகளின் பெற்றோர்களின் ஒற்றுமைப்பு மிகவும் அவசியமல்லவா? ஆதலால் நகரப் புறங்களில்

---

வியாபாரப் போட்டியும், பொறாமையுமின்றி ஒன்றுக்கொன்று துணையாக நாடுகள் சேர்ந்து வாழ்ந்தால் உலக சமாதானமாகும்.

ஏற்பட்டுள்ள பாடசாலைகளுக்கு அப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கும் வார்டுகள் என்ற பிரிவுகளில் வசிக்கும் பிள்ளைகளின் பெற்றோர்கள் எனவே வயது வந்த ஆடவர் பெண்டிர் அனைவரது ஒற்றுமைப்பும், அவ்வாறே கிராமங்களில் தோன்றியுள்ள பள்ளிகளுக்கு அக் கிராம வாசிகளாகிய மக்களின் ஒற்றுமைப்பும் இன்றி யமையாததாகும். இதுகாறும் ஆராய்ந்ததன் பயனாய் பெற்றோர்களின் ஒற்றுமைப்பு என்றால் ஆசிரியர்களாகிய உங்களுக்கு உங்கள் பாடசாலையில் வாசிக்கக்கூடிய பிள்ளைகளின் பெற்றோர்களின் ஒற்றுமைப்பு என்று பொருள் காண்கிறோம்.

அவ்வாறாய பெற்றோர்களின் ஒற்றுமைப்பு அவசியந்தானா? அதனால் என்ன பயன்? அவ்வித ஒற்றுமைப்பைப் பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டுவன யாவை? என்ற வினாக்களைக் கிளத்தி, அவற்றிற்கு விடை காணா முகத்தால் சிறிதாராய்ந்து முடித்தலே எனது சொற்பொழிவின் சாரமாக வமையும்.

## பெற்றோர்களின் ஒற்றுமைப்பின் அவசியம்

நமது இந்திய நாட்டில் சற்றேறக் குறைய 6,85,665 கிராமங்களும், 2,316 நகரங்களும் உள. இந்தியாவின் ஜனத் தொகை 35 கோடிக்கு மேற்பட்டிருக்கிறது. இந்திய மக்களில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் நாட்டுப் புறங்களில்—கிராமங்களில் வசித்து வருகின்றனர். நூற்றுக்குப் பதின்மர் மட்டுமே நகரவாசிகளாயிருக்கின்றனர். இந் நாட்டில் கல்வியைப் பரவச் செய்வதற்கென இந்திய துரைத்தனத்தார் செய்து வரும் முயற்சிகளின் பயனாய் இன்று நம் மாகாணத்தைப் பொறுத்த அளவில் ஆடவர்களில் நூற்றுக்குப் பதின்மர் வீதமும், பெண்களில் நூற்றுக்கு மூவர் வீதமுமே எழுதப் படிக்கக் கற்றுக்கொண் டிருக்கின்றனர். இதனால் கல்வியில் நம்மவர்கள் எவ்வளவு பிற்போக்கடைந் திருக்கின்றனரென்பது தெரியவரலாம். மேற்கண்ட விகிதத்தின்படி படித்தவர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளவர்களிலும் பலர் உண்மையில் தங்கள் கையெழுத்தை மாத்திரம் இடத் தெரிந்தவர்களே யன்றி, எழுதப் படிக்கத் திறமைப் பெற்றவர்களல்லர். இப்படிப்பட்டவர்களும் கல்வி கற்றவர்களெனக் கணக்கிடப்பட் டிருக்கின்றனர். எனவே, நமது நாட்டின் நிலைக்குக் கல்வியின் அவசியம் எவ்வளவு என்பதை ஊகித்தறியலாம். மேலும் நந் நாட்டில் பாடசாலைகளுக்குச் சென்று படிக்கக்கூடிய வயதுடைய பிள்ளைகளிலும் ஏறக் குறைய நகரப்

---

உலகிற்கு அருட்பணி செய்யவும், வாழ்வின் வினை யறிந்தாற்றி விடுதலை பெறும் உண்மை யறிந்து தத்துவந் தேர்ந்து சாதகஞ் செய்து கடவுளுடன் ஈறறக் கலக்கவுமே நமது பிறப்பு வந்தது.



புறங்களில் நூற்றுக்கு 50 பிள்ளைகளும், நாட்டுப் புறங்களில் நூற்றுக்கு 25 பிள்ளைகளும் மாத்திரமே பள்ளிகளுக்குச் சென்று கல்வி கற்று வருகின்றனர். ஏனைய பிள்ளைகள் அனைவரும் கல்வி கற்பதற்குச் சிறிதும் அவகாசமின்றி அவமே காலங் கழித்து வருகின்றனர். இத்தகைய நிலையில் இனி வரும் ஜன சமூகம் எத்தகையதா யிருக்குமென்பதைச் சிந்திக்க வேண்டும். ஒரு ஊரில் ஒரு பாடசாலையை ஸ்தாபித்து விட்டால் போதாது. அவ்வூரிலுள்ள வயதுடைய பிள்ளைகள் அனைவரும் பள்ளிக்கு வந்து கல்வி கற்கும்படிச் செய்ய வேண்டும். பெரும்பாலான பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்று, படிப்பதற்கின்றி குறுக்கிடும் தடைகள் என்ன வென்பதைக் கவனியுங்கள். பொருளாதாரக் கஷ்டம் ஒன்றும், பெற்றோரின் அறியாமை மற்றொன்றும் ஆம். ஏழை மக்கள் மலிந்த நம் நாட்டில் பெற்றோர் செய்யுந் தொழிலுக்கு அவர்தம் சிறு குழந்தைகளும் துணைபுரிய வேண்டி யிருக்கிறது. சிலர் சிறு தொகையைச் சம்பளமாகச் செலுத்தவும் இயலாதவர்களாகலாம். ஆயினும் இக் காரணத்தைவிட பெற்றோர்களுக்குத் தங்கள் குழந்தைகளைப் படிப்பிக்க வேண்டுமென்ற அறிவின்மையே பலமான காரணமாகும். விருப்பமுண்டேல் வழியுண்டன்றோ? இவை யனைத்திற்கும் பரிகாரமாகக் காலஞ் சென்ற 'கோபால கிருஷ்ண கோகலே' அவர்கள் இந்தியாவில் "கட்டாய இலவச ஆரம்பக் கல்வி" முறைத் திட்டத்தையே வகுக்க வேண்டுமென வற்புறுத்தினார்கள். இப் பெரியாரது நல்லெண்ணத்தின் பயனாலும், தேசத் தலைவர்களின் இடைவிடாத முயற்சியாலும் நம் மாகாணத்தில் 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக் கல்வி மசோதா பிறந்திருக்கிறது. அதன்படி ஸ்தல ஸ்தாபனங்கள் முன்னின்று உழைக்குமாயின், கட்டாய இலவசக் கல்வித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரச் சாதனங்களேற்படும். எனினும் திடீரென்று நம் மாகாண மெங்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி முறை தோன்றிவிடுமென் றெதிர்பார்ப்பதற்கில்லை. உங்கள் அதிர்ஷ்ட வசமாக இம் மகாநாட்டின் தலைவராக அமர்ந்துள்ள **ஸ்ரீமதி பீகம் சுல்தான் மீர் அமிருத்தீன் அம்மையார்** இந்த ஜில்லாவில் கல்வி வளர்ச்சியைச் சாதிக்குங் கருத்துடன் "ஜில்லாக் கல்வி ஊழியச் சங்கம்" என்ற பெயரால் ஒரு சங்கம் கண்டு வேலை செய்ய முற்பட்டுள்ளார்கள். அவரது முயற்சியின்

---

உலக அன்னை அனைவர் நலமுங் கருதிக் கருணையுடன் பல வளங்களை விளைவிக்கிறாள். தேவைக்குத் தக்கபடியே மக்கள் அனுபவிக்க வேண்டும். இல்லையேல் பிறர் அனுபவிக்க வேண்டியதை அபகரித்து உலகை ஏழையாக்குவதாகும்.

பயனால் விரைவில் இந்த ஜில்லாவில் கட்டாய இலவசக் கல்வி முறையேற்படுமென்றெதிர்பார்ப்போமாக. எனினும் இன்றைய நிலையில் ஒவ்வொரு ஊரிலும் ஏற்பட்டுள்ள பாடசாலைகளில் அவ்வூரிலுள்ள வயதுடைய பிள்ளைகள் அனைவரும் வந்து கல்வி கற்குமாறு தூண்ட வேண்டியிருக்கிறது. அவ்வாறு செய்வதற்குப் படிப்பின் மதிப்பை அவர்தம் பெற்றோர்களுக்கு அறிமுகப்படுத்தவேண்டும். கிராமாந்தரங்களில் பெற்றோர்கள் அநேகர் தங்கள் "பிள்ளைகள் படித்து என்ன உத்தியோகம் செய்யப்போகிறார்களென்றும், கணக்கும், மணியமும் தண்ணியமாகப் பெறுபவர் கல்வி கற்கட்டு" மென்றும் இன்றுங் கூறுவதைக் காணலாம். இதற்குக் காரணம் கல்வியின் அவசியத்தையும், அதன் பயனையும் அவர்கள் பிழைபட அறிந்திருத்தலேயாகும். கல்வியின் பயன் அறிவு விளக்கமடைதலாம். மேலும் ஜீவனோபாயத்தை எளிதில் பெறச் சாதனமாதலுமாம். ஆங்கில நாட்டுப் பேரறிஞராகிய பிஷர் (Fisher) என்ற பெரியார் "ஒரு தேசத்தில் குடியாக வாழ்பவர் அத் தேசத்தின் அரசியலிலும், மற்ற துறைகளிலும் தமக்குள்ள கடமைகளையும், உரிமைகளையும் நன்குணருமாறு செய்தலே கல்வியின் பயனாக விருத்தல் வேண்டும்" என்று கூறியுள்ளார். எனவே பெற்றோர்களுக்கு உலகியலறிவை யூட்டி, கல்வி கற்பதின் பயனை விளக்கிக் காட்டி, உலக அற்புதங்கள் பலவற்றை யறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலை அவர்களிடத்தே மீட்டி, அவர்தம் ஒற்றுமைப்பை யீட்டி வேலை செய்யவேண்டிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சார்ந்ததாகும். மேலும் ஒரு பாடசாலைக்கும் அக் கிராம வாசிகளாகிய பொதுஜனங்களுக்கும் தொடர்பு ஏற்பட்டிருத்தல் அவசியம். இம் முறையில் போர்டு பாடசாலைகளைவிட பிரைவேட் மானேஜ்மெண்டுகளுக் குட்பட்ட பாடசாலைகள் நேர் முறையில் கிராமவாசிகளாகிய பெற்றோர்களின் கூட்டுறவை அதிகமாக விரும்பி நடந்துவருகின்றன வென்பதை யாரால் மறுக்கமுடியும்? எனவே பொதுவாக ஆரம்பப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், பிள்ளைகளின் கல்வி யபிவிருத்திக்கும், ஆசிரியர்களின் நன்மைக்கும் அக் கிராம வாசிகளாகிய பெற்றோர்களின் ஒற்றுமைப்பு இன்றியமையாததாகும்.

## பெற்றோரின் ஒற்றுமைப்பால் யாது பயன்?

பெற்றோரின் ஒற்றுமைப்பு உங்களுக் கேற்பட்டிருக்குமாயின் உங்கள் பாடசாலைகளில் தீர்க்கமுடியாத வகையில் நடைபெற்றுவரும் பலவித ஒழுங்கீனங்களும் மறைந்து போய்விடும். முதற்கண் கிராமங்களிலுள்ள பிள்ளைகள் அனைவரும் வந்து படிக்க முற்படுவர். அதனால் பிள்ளைகளின் சங்கியை அதிகமடையும். பிள்ளைகள் காலந் தவறாமலும், நாள் தவறாமலும் ஒழுங்காகப் பாடசாலைகளுக்கு வந்து சேருவர். அடிக்கடி ஆசிரியர்களின் அனுமதி பெறாமல் பிள்ளைகள் வீட்டில் நின்றுவிடும் கொடிய வழக்கம் நீங்கிவிடும். பெற்றோர்களில் பெரும்பாலாரது தொழில் முறைக்கேற்ற சௌகரியமான நேரத்தில் பாடசாலையை நடத்தலாம். அதற்கேற்பவே விடுமுறை நாட்களையும் ஏற்படுத்திக்கொள்ளலாம். உபாத்தியாயரும் கிராமப் பொது வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட ஒருவராக விருக்கலாம். பொதுமக்களிடையில் ஆசிரியருக்கு நன்மதிப்பும், செல்வாக்கும் தோன்றக் காரணமாகும். ஆசிரியர்கள் பிள்ளைகளின் தேக சௌக்கியத்தைப் பற்றியும், கல்வி யபிவிருத்தியைப்பற்றியும் பெற்றோர்களுக்கு அறிவிக்கும் அறிக்கைகளும் பயன்படுவனவாகும். இன்னோரன்ன நன்மைகள் பலவாம். ஆகவே,

## பெற்றோரின் ஒற்றுமைப்பைப் பெறுவதற்கு நீங்கள் செய்யவேண்டுவன யாவை?

என்பதைச் சிறிதாராயலாம். பாடசாலைகளின் ஆசிரியர்கள் ஒவ்வொரு கிராமத்திலும் அக் கிராமத்தின் சார்பாகப் பெற்றோர் சங்கங்களை ஏற்படுத்தலாம்; அவ்வாறே நகரப் புறங்களில் வீதிகள், வார்டுகள் என்ற பிரிவுகளுக் கேற்றபடி பெற்றோர் சங்கங்களைக் காண வேண்டும். அச் சங்கத்தின் சார்பாக வாரத்திற் கொருமுறை, அன்றி மாத மிருமுறை, அல்லது மாத மொருமுறை பாடசாலைகளிலேயே கூட்டங்கள் கூட்டுவிக்கவேண்டும். அக் கூட்டங்களில் ஆரம்பத்தில் ஆசிரியர்களும், அவர்களது துணையாளர்களும் உலக வர்த்தமானங்களைப்பற்றியும், கல்வியின் பயனைப்பற்றியும், நீதிக் கதைகளைப் பற்றியும், தேச சரித்திரங்களைப்பற்றியும், பூத பௌதிக சாஸ்திரங்களைப்பற்றியும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றியும், நாட்டில் நடைபெறும் துரைத்தன முறைகளைப்பற்றியும் உபந்யாசங்கள் புரிந்துவரவேண்டும். வேண்டிய விஷயங்களை விளக்கிக் காட்டுவதற்கு ஏற்ற சித்திரப் படங்களையும், கரும்பலகைச் சித்திரங்களையும் உபயோகிக்கவேண்டும். முற்காலத்தில் நமது நாட்டில் பொதுஜனங்கள் எழுதப் படிக்க அறியாதிருந்திருப்பினும் கேள்வி வாயிலாக இராமாயணம், பாரதம் முதலிய இதிகாச புராணக் கதைகளை அறிந்திருந்தனர். அதுபோல் உங்கள் முயற்சி சரிவர நடைபெற்று வரு

---

வீடுகளே கிராமமாகவும் முடிவில் தேசமாகவும் விரிகின்றன. வீட்டின் காரியங்களைக் கவனிப்பது போல நாட்டின் நலத்தையுங் கவனித்தல் வேண்டும். மனையறமும் மனையற யாட்சியும் ஒழுங்கா யிருந்தால் நாட்டறமும் ஒழுங்குறும்.

ஒரு நாட்டில் தொழில், கல்வி, அத்யாத்ம முயற்சி யிருக்க வேண்டும். அறவழி நடந்து, அறம் பரப்புவோர் மிகுதியாயிருக்க வேண்டும்.

மாயின் இரண்டோ ராண்டுகளுக்குள் ஒரு கிராமத்திய ஜனங்களில் பெரும்பாலாரிடையில் தற்கால உலகியலறிவைச் சுலபத்தில் ஊட்டி விடமுடியும். பொது மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளாமலேயே பூகோள அறிவையும், சரித்திர ஞானத்தையும், நவீன விவசாய முறைகளையும், சுகாதாரச் சாதனங்களையும், கூட்டுறவு இயக்க நன்மைகளையும், ஸ்தல ஸ்தாபனங்கள் முதலிய அரசியல் சுதந்திரங்களையும், ஓட்டு வழங்குந் தகுதிகளையும், பொது ஜன உழைப்பில் ஊக்கத்தையும், தின வாழ்க்கைக்கு வேண்டிய அளவு கணித ஞானத்தையும் கேள்வி வாயிலாகவே பெறமுடியுமென்பதை யாரே மறுக்கின்றவர்? இதை முன்னிட்டன்றோ “செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்—செல்வத்துளெல்லாந் தலை” என்றார் தமிழ் மறையாசிரியரும்.

அவ்வாறு அடிக்கடி பெற்றோர்களைக் கூட்டுவித்து அவர்களுக்கு அறிவு கொளுத்தும் நல்லுரைகளை வழங்கிவருவதோடு, வர்த்தமானப் பத்திரிகைகள், மாத சஞ்சிகைகள், நல்ல நூல்கள் முதலியவற்றை அவர்களுக்குப் படித்துக்காட்டி வரவேண்டும். அதனால் விஷயங்களைத் தொடர்ந்து கேட்கும் ஆவல்கொண்டு மக்கள் அதிகமாகத் திரண்டு தொடர்ச்சியாக வருவர். நாளடைவில் அம் மக்களில் பலருக்குத் தாமும் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை எழலாம். அவ்வாறு ஆசை கொண்ட மக்களுக்கென இரவிலோ, அன்றிப் பகலிலோ, ஒழிந்த நேரங்களிலோ தனிப்பட்ட வகுப்புகளை நடத்தலாம். சாதாரண பாடசாலையின் வேலையையன்றி இவ்வாறு விசேஷமாக நீங்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப துரைத்தனத்தாரிடத்தினின்றும் அதிகமான உதவியைப் பெறுவதுங் கூடும். ஒவ்வொரு பாடசாலையிலும் கூடுமானவரையில் நல்ல அறிவு தரும் நூல்களைச் சேகரித்து ஒரு புத்தகசாலை ஏற்படுத்த வேண்டும். அப்புத்தகங்களைப் பாடசாலைப் பிள்ளைகளுக்கேயன்றிப் படிக்கத் தெரிந்த கிராமப் பொது ஜனங்களுக்கும் இரவலாய்க் கொடுத்துப் படிக்கச் செய்யவேண்டும். பாடசாலைப் பிள்ளைகளைக் கொண்டும், பாடசாலையை விட்டுச் சென்ற பழைய மாணவர்களைக் கொண்டும் சாரணச் சிறுவர் சங்க ஸ்தாபனத்தை ஏற்படுத்தலாம். நல்ல அறிவு தரும் கதைகளை அப் பிள்ளைகளைக்கொண்டு நாடகமாக நடிக்கச் செய்யலாம். ஆரம்பத்தில் உதவி என்ற சிகிச்சைகளையும் பொது ஜனங்களுக்கு அறிவிக்கலாம். தெய்வங்களின் கோபத்தால் வியாதிகள் உண்டாகின்றன என்பதுபோன்ற பல மூட நம்பிக்கைகள் பொது மக்களிடையில் வேரூன்றியிருக்கின்றன. நீங்கள் செய்துவரும் முயற்சி

தவத்தோர் கண்ட அறத்தைக் காப்போர் இல்லறத்தோரே. உலகும் உலகின் பணியும் இல்லறத்தாலேயேஇயலும்.



களின் பயனாய் நாளடைவில் அத்தகைய மூடக் கொள்கைகள் நீக்கப்படவேண்டும். ஆண்டுக்கொருமுறை வரும் சுகாதார வாரக் கொண்டாட்டம், மகா நவமிக் கொண்டாட்டம், பாடசாலையின் வருஷாந்தர விழா, ஊர்த் திருவிழா முதலிய சந்தர்ப்பங்களை, பெற்றோர் சங்கங்களைச் சிறப்பு வகையில் நடத்துவதற்கேற்ற சமயங்களாகக் கொள்ளலாம்.

தற்போது சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் அரசியற் சொற்பெருக்காளர்கள் கண்மூடித்தனமாகத் தற்காலக் கல்வி முறையையடியோடு கண்டித்து வருவதோடு, அகர முதல் நெடுங் கணக்கைக் கற்காமல் டப்பி, பாப்பா, அம்மி என்று முதலில் எழுத்துக்களைக் லற்பிக்கின்றனரென்றும், கால் இல்லாதவன் நொண்டி, கண் இல்லாதவன் குருடன் என்பது போன்ற குருட்டுக் கல்விப் பாடங்களைக் கற்பிக்கின்றனரென்றும் ஆசிரியர்களாகிய உங்களை மறைமுகமாகப் பரிகாசம் செய்து வருகின்றனர். அவ்விதப் பிரசங்கத்தைக் கேட்கும் பொது ஜனங்கள் கரகோஷம் செய்து ஆரவாரிக்கின்றனர். அவர்களிற் சிலர் எளிய ஆசிரியர்களை நேரில் பழிக்கவும் முற்படுகின்றனர். அத்தகைய அரசியல் வாதிகளின் கூற்றுக்களை அடியோடு கண்டித்து உண்மையைப் பொது மக்களுக்கு உணர்த்தவேண்டிய கடமை உங்கள் மீதிருக்கிறது. தமிழ் நெடுங்கணக்கைச் சுலபத்தில் கற்பிக்கும் சாதனமாகக் கைக்கொள்ளும் நவீன முறைகளின் மேன்மையையும், நொண்டி, குருடன் என்ற சாதாரண வார்த்தைகளையே அறியாத பருவத்தினராகிய சிறுவர்க்கு எழுத்துக்களுடன் வார்த்தைகளையும் கற்றுக்கொடுக்கிற உண்மைகளையும் பொது ஜனங்களுக்கு நீங்கள் எடுத்துக் கூறவேண்டும். பெற்றோரின் சங்கம் என்பது வயது வந்த ஆடவர் பெண்டிர் அனைவருங் கூடிய சங்கமென்றே பொருள் தரும். ஆகவே கூடியவரையில் சங்கக் கூட்டங்களுக்கு ஸ்திரீகளையும் அதிகமாக வரவழைக்க முயலவேண்டும். ஆரம்பத்தில் அவ்வக் கிராம நிலைமைக்கேற்பப் புராண காலக்ஷேபத்தோடு உங்கள் வேலையைத் தொடங்கலாம். தற்போது கிராமப் புனருத்தாரணத்திற்கெனவே ஆங்காங்கு சில ஸ்தாபனங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றின் கூட்டுறவையும் நீங்கள் பெறலாம். உங்கள் பாடசாலைகளைப் பார்வையிடுவதற்குக் கல்வியதிகாரிகள் வரும் சமயங்களில் பெற்றோரின் சங்கக் கூட்டங்களைக் கூட்டுவித்து, அவ்வதிகாரிகளைக்கொண்டும் அறிவுரைகள் வழங்கச் செய்யலாம். அவ்வவ்விடங்களின் பொது ஜனங்களின் விருப்பத்திற்கும், தொழிலுக்கும், தேவைக்கும் ஏற்றபடியும் உங்கள் பாட முறைகளை வகுத்துக்

கடவுளின் இன்னருள் பெற்றது இல்லறமேயாகும். உலகில் இன்னுயிர் இருப்பதற்கும் பெருகுவதற்கும் இல்லறமே அடிப்படை.

# பத்திரிகா தருமம்.

## பண்டித திரு. பே. இ ராமாநுஜம் அவர்கள்.

உலகத்திலே மக்கள் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதன உணவு, உணர்வு என்னும் இரண்டுமேயாகும். நம் நாட்டைப் பொறுத்தவரையில் உணவுக்குக் கவலையடைய வேண்டியதில்லை. பல்லாயிரம் வருடங்கட்கு முன்பிருந்து இன்றுவரை நம் நாட்டில் பெரும்பாலார்க்கு விவசாயமே முக்கிய தொழிலாக இருந்துவருகிறது. அறிவு விளக்கம் அடைவதற்கு ஆசிரியனை யடைந்து கல்வி பயிலுதல்போல, பயிர்த் தொழிலில் தேர்ச்சியடைவதற்கு அந் நாளில் அதற்கென ஆசிரியர்களும் இல்லை; கலாசாலைகளும் இல்லை. ஒவ்வொரு குடியானவனும் பரம்பரைத் தொழிலால் அவனே ஆசிரியனாக இருந்தான்; அவனவன் கழனியே விவசாயக் கல்லூரிகளாக இருந்தன. இப்பொழுது விவசாய அபிவிருத்திக்காக அரசாங்க ஆதரவில் பிர்மாண்டமான கட்டிடங்களிலும், மிகச் செழித்த நிலப் பரப்பிலும் இருந்து பலர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர். குடியானவர்களை முன்னேற்றும் எண்ணத்தோடு, ஒரு நெல்லில் இரண்டு அரிசிகள் உண்டாக்கும் சிந்தனையில் ஆழ்ந்து அவர்கள் வேலை செய்துவரினும், அவர்கள் சோதனையாற்

கொள்ளலாம். இன்னும் இதுபோன்ற கடமைகளைப்பற்றி மேலும் கூறிச் செல்லலாம். ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு உழைக்கத் தலைப்படுவீர்களாயின் காலத்திற்கேற்பப் புதிய கருத்துக்களும், முறைகளும் பல தோன்றிவரும். ஆகவே, இச் சொற்பெருக்கில் பெற்றோர்களின் ஒற்றுழைப்பு ஆரம்பாசிரியர்களுக்கு மிக அவசியமென்பதையும், அதனால் உண்டாகத்தக்க சாதனங்கள் யாவை யென்பதையும், பெற்றோரின் ஒற்றுழைப்புக்கென எவ்வாறு சங்கங்கள் கண்டு வேலைசெய்ய வேண்டுமென்பதைப் பற்றியும் சுருங்கக் கூறினேன். இதுகாறும் இச் சிறு மொழிகளுக்குச் செவிமடுத்துத் தங்கள் அரிய காலத்தைக் கொடுத்துதவிய உங்கள் அனைவருக்கும் எனது வந்தனங்கள்.

---

இல்லறம் நல்லறமாக பெண்மை அத்யாவசியம். பெண்மையின்றேல் இல்லை யிவ்வுலகம்.



கண்ட முடிபுகளிற் பெரும்பாலன பணக்காரனைப் பெரும் பணக்காரன் ஆக்குவதற்கு அமைந்தனவாகவே தோன்றுகின்றன. அவர்கள் சிபார்சு செய்யும் விவசாயக் கருவிகளிற் பல ஏழைக் குடியானவர்கட்குத் தகுதியற்றனவாகும். "பயிருக்கு நீர் இறைக்கவேண்டி எருதுகளை முன்னும் பின்னும் இழுத்துக் கிணற்று நீரை மேடேற்றுவது எவ்வளவு துன்பமான வேலை" என்னும் வாதம் மிக நியாயமாகவே தோன்றுகிறது. ஆனால், இயந்திரங்களை உபயோகிப்பதென்பது ஏழை மக்கட்கு என்றைக்கும் ஏற்றதல்ல.

இனி உணர்வு என்னும் அறிவைப் பண்படுத்துவதற்குக் கலைநூற் பயிற்சி இன்றியமையாதது. அந்நாளில் கலைநூற் பயிற்சி பெறுதற்பொருட்டு நல்லாசிரியன் இருப்பிடம் தேடியடைந்து, அவன் அருள் பெற்றுக் கல்வி பயின்றனர். அக் கல்வி மக்கள் மனத்தைப் பண்படுத்திச் செம்மை நெறியில் நடக்குமாறு செய்தது. இன்று கல்வி பயிற்றும் ஆசிரியரென ஊருக்கு ஒருவர் இருப்பினும், அவர் கற்பிப்பன பயனற்றனவாகவே முடிகின்றன. அந்நாளில் அன்பின் பரிசிலாக வழங்கப்பட்ட கல்வி இன்று பணத்திற்கு விற்கப்படுகிறது. பணத்தை யிறைத்துக் கல்வி பயிலும் மாணவர்கள் தாம் பெற்ற கல்வியை, இழந்த பணத்தை மீட்கும் வழியெது என்ற சிந்தனைக்கே அர்ப்பணமாக்குகின்றனர். அப்படித்தானாகட்டும், இழந்த பணத்தை மீட்பதற்காவது இக் கல்வி பயன்படுமா என்ற ஐயம் இன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே நம் நாட்டில் இப்பொழுது தொழிற் கல்வி வேண்டும் என்னும் குரல் சில இடங்களில் கேட்கப்படுகிறது. "மாணவர்களே, கிராமத்திற்குத் திரும்புங்கள்; உங்களைப் பூமி தேவி இரு கையாலும் வாரியணைத்துத் தழுவ எதிர்பார்த்து நிற்கிறாள்; ஆகையால் அடிமைத் தொழிலில் மோகத்தை விட்டு, விவசாயத்தில் இறங்கி அதை வளம்பெறச் செய்யுங்கள்" என்று நம்மவர் பலர் பேசியும் எழுதியும் வருகின்றனர். அவருட் சிலர் பேசுபவையும் எழுதுபவையும் உண்மை யனுதாபம் பொருந்தியவையா யிருக்கலாம். வேறு பலர் "சாத்திரி மகன் சாத்திரி" என்பதுபோலத் தாம் வகிக்கும் அதிகாரப் பதவியைத் தம் சந்ததிகளும் போட்டியின்றி வகித்துவர வேண்டுமென்னும் பேராசையால் கூறுவனவாகவே தோற்றுகின்றன. எனவே உணர்வை விருத்தி செய்வதற்கு என்று பயிலும் கல்வி, உணவைத் தேடுவதற்கே பயன்படுகின்றது. மக்கள் வளம்பெற வேண்டி, விவசாய அபிவிருத்திக்கென்று நோபல் என்னும் துரைமகனார் கண்டுபிடித்த "டைனமைட்" என்னும் வெடி, அவர் கண் முன்னேயே மக்களை வதை செய்வ

---

ஆண்மையும் பெண்மையும் அழகுடன் கூடி, கடவுட் பணிகள் சுடருறச் செய்து, தாமும் வாழத் தருமமும் வாழ, தாரணி வாழத் தாங்கிய இல்லறம்.

தற்குப் பயன்படுவதைக் கண்டார். ஒருவனுக் கெழுந்த புண்ணைக் கீறி ஆற்றுவதற்குரிய கத்தியே அவன் உயிரைப் போக்குவதற்கும் கருவியாகிறது. வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் வேண்டுமென்பதற்கு அமைந்த கல்வியே இன்று வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஏதுவாக இருக்கிறது.

ஒரு காலத்தில் மனிதன் ஒரு இடத்தையடையக் காலால் நடந்து செல்லுதல் போதுமென நினைத்திருந்தான். பின்பு காட்டில் அலைந்துகொண்டிருந்த மாட்டையும் குதிரையையும் பழக்கி, அவற்றின்மீது சவாரிசெய்தான். அவன் மனம் அமைதி பெறவில்லை. விரைந்து செல்லும் மோட்டார்காரைக் கண்டுபிடித்து அதில் ஏறிச் சென்றான். மலைகளையும் ஆற்றையும் கடப்பது கடினமாக இருப்பதாலும், மோட்டார் செல்லுவதற்குரிய வழிகளைச் செப்பனிடுதல் மிகப் பிரயாசையாக இருக்கின்றமையாலும், இத் தொல்லைகளற்ற சுலப வழி இல்லையோ என்று தத்தளித்தான். ஆனால் இன்று ஆகாயத்தில் பறக்கின்றான்! ஒருவன் வாழ்க்கைக்கு இவ்வளவு போதும் என்ற அளவே கிடையாது. அந்த அளவு ஏற்படுகிறவரையில் மனித வாழ்க்கையில் அமைதியும் கிடையாது. உருசிக்காக உண்பது என்ற தற்கால மயக்கம் நீங்கிப் பசிக்காக உண்ணல் என்ற பழைய எண்ணம் எழவேண்டும். இவற்றிற்கெல்லாம் மனதைப் பண்படுத்தும் மெய்க் கல்வி வேண்டும்—காவியப் பயிற்சி வேண்டும். மெய்க் கல்வியால், காவியப் பயிற்சியால் ஒருவன் அன்பு நிறைந்த மனத்தினன் ஆதல் கூடும். ஒவ்வொருவரும் அன்பு நிறைந்த மனத்தினராக மட்டும் இருப்பது போதாது. அவரவர் உடலைப் போஷிப்பதற்காவது தொழில் அறிவும் பெற்றிருக்க வேண்டும். "சுவரை வைத்துச் சித்திரம் எழுது," "உடம்பாரழியின் உயிராரழிவர்" என்னும் பழைய மொழிகள் உடம்பை வளம்பெற வைத்திருக்க வேண்டுமென்பதை வற்புறுத்துவனவாகும். உடம்பு அழியின் இவ்வுலகில் நமக்கு உயிர் வாழ்க்கைதான் ஏது?

விவசாயமே ஜீவநாடியாக இருந்த நம் நாட்டில் இதுபொழுது பலர் தாம் உண்ணும் உணவு எத்தகைய பயிரில் விளைகின்றது என்பதை யறியார். எனவே நமக்கு இப்போது விவசாய ஆசிரியர்கள் வேண்டியிருக்கின்றனர். அன்றியும், அக் காலத்தில் ரயில் வண்டி வசதி யில்லாமையால் அங்கங்கே விளைந்த தானியங்கள் அவ்வவ்

அறநெறிக் காதலர் ஒரு மனப்பாட்டுடன் தத்தம் நெறியறிந்து புவிப் பணி போற்றின் இல்லறம் நல்லறமாகும். இத்தகைய இல் வாழ்வு வாழ்வதைவிட மேலான இன்பம் இல்லை. அது இவ் வுலக வாழ்வையே அமர வாழ்வாக்கும்.



விடத்திலேயே செலவழிந்து வந்தன. ஆனால் பணத்திற்குப் பிரதானம் கொடுத்திருக்கும் இந் நாளில், ஒரு ஊரில் விளைந்த தானியம் அவ் வூரிலேயே சிலர் உணவின்றிப் பசித்திருக்கப் பல்லாயிரம் மைலுக்கு அப்பால் அனுப்பப்படுகின்றது. ஆகையால் முன்பு இரண்டு ஏகராவில் விளைந்த தானியம் இப்பொழுது ஒரு ஏகராவில் உண்டாக்கித் தர விவசாய நிபுணர்கள் தேவையாகின்றனர். எவ்வளவு விளைந்தாலும் விவசாயத்தால் மட்டும் பணம் திரட்டிவிட முடியாது எனக் கண்ட நமக்கு, "வேறு சில வழிகளிருக்கின்றன; அவைதாம் இரும்பை யுருக்கும் வித்தை, கருங்கல்லைப் பளிங்கு போலாக்கும் தொழில், மரங்களை யறுத்து மனதிற்கேற்ற கருவிகளாகச் செய்தல்" என்பனவாதியாக அறிவுறுத்திச் செய்து காட்டத் தொழில் நிபுணர்கள் வேண்டியிருக்கின்றனர். முற்காலத்தில் நல்லாசிரியன் இருப்பிடம் அடைந்து, அவன் அருள் நோக்கம் பெற்ற பின்னர்க் கல்வி பயில முடிந்தது. இன்றோ தாம் செலவு செய்யும் பணத்தை மீண்டும் பெற முடியுமா என்ற சந்தேகத்திற் கிடமான பள்ளிக் கல்வியைப் பெறுவதற்கே ஏராளமான பணம் வேண்டியிருக்கிறது. இந் நிலையினராகிய நாம் பல்வேறு வகையான தொழிற் கல்வியையும், காவியப் பயிற்சியையும் எங்ஙனம் பெறக்கடவோம்?

இந்தக் கவலையையும் அயர்வையும் ஒழிக்க எழுந்தவைகள் தாம் பத்திரிகைகள். மோட்டார்கள் உற்பத்தி செய்து விற்பதில் பெரும் பொருள் திரட்டிய ஹென்றி போர்டு தம் வாழ்க்கையின் அனுபவங்கள் சிலவற்றை அமெரிக்காவில் ஓரிடத்திலே பேசுகிறாரென்று வைத்துக்கொள்ளுவோம். அந்தப் பேச்சு எவ்வளவு விலையுயர்ந்ததும் சிறந்ததுமாகும்? அவ் வரிய சொற் கருத்தைக் குறைந்த செலவில் நம் சமயமறிந்து, நாம் வேண்டும்போது எடுத்துக் கூறக் காத்து நிற்பது பத்திரிகையேயல்லவா? அவ்வளவு தூரமேன்? அமெரிக்கா வேண்டாம்; அவரைப்போல் மோட்டார் உற்பத்தி செய்து பணம் குவித்தல் நம்போன்றோர்க்கு இயலுமோ என்ற ஐயமும் வேண்டாம். நம் நாட்டிலே ஜகதீச சந்திர போஸின் அதியற்புத தாவர சாஸ்திர ஆராய்ச்சித் திறமையையும், பேருள்ளம் படைத்த அறிஞர் பிரபுல்ல சந்திரசேயின் ரசாயன ஆராய்ச்சியையும், அவர் துறவியாக வாழ்க்கையையும் அறிந்துகொள்ளல் நமக்கு எவ்வளவு பயன் தருவனவாகும்? நமது ஊரில் "ரைஸ் மில்" ஓட்டும் எஞ்ஜின் டிரைவரை யணுகி,

மனம் வேறுபடின், ஆண் பெண் இருவருள் மாச்சர்யம், வீண் சந்தேகம்; வெறுப்பு குடிகொண்டால் அவ் வாழ்வு நரக வாழ்விற் கொப்பாகும். இந் நரக வாழ்வு வாழ்வதைக் காட்டிலும் அக்கணமே துறவறம் பூணல் மேன்மையாகும்.

"ஐயா, இந்தக் கருவிகள் எவ்வெவ்வாறு வேலை செய்கின்றன? இவற்றின் பெயரென்ன?" என்று கேட்டால், அவன் மிக அலட்சியமாக ஏதோ ஒன்றிரண்டு சொல்லுகிறான்; சில சமயம் அதுவும் சொல்லாமல் மௌனம் சாதித்துவிடுகிறான். இங்ஙனமாக அப் பேரறிஞர்களின் அருகே நின்று பேசுவதற்கும் அருகதையற்ற என்போன்றோர் அவர்களையணுகி, அவர்களுடைய மனப்பான்மையை அறிந்துகொள்ளுவதெப்படி? உலகத்திலேயே கலைப் பயிற்சியில் சிறந்தவர் என ரவீந்திரநாத தாகூர் போற்றப்படுகிறார். "ஆஹா, அப்படியா! அவர் செய்த காவியங்கள் எவ்வாறு இருக்குமோ?" என்று அதையறிய நமதுள்ளம் விரும்புகின்றது. அவ் விருப்பத்தை பூர்த்தி செய்வதெப்படி? தாகூரும் வேண்டாம், வங்க மொழியும் வேண்டாம். தமிழனாகிய நான் கம்ப ராமாயணத்தின் பா நயங்களை யறிய விரும்பிக் கம்ப ராமாயணப் பிரசங்கியான, எனது ஊருக்கு அடுத்த அரசமங்கலம் அண்ணாவையரை யடைந்து "சுவாமிகளே, இராமபிரானுக்கும் வாலிக்கும் நடந்த சம்பாஷணையைக் கம்பர் அழகுபெறப் பாடியிருக்கிறாராமே; அதைக் கொஞ்சம் அடியேனுக்கு அருளவேண்டும்" என்றால், அவர் ஈர வேஷ்டியையெடுத்துக் கொடிக் கயிற்றில் உலரப்போடுவது, உலர்ந்த வேஷ்டியை எடுத்து மடித்து வைப்பதுபோன்ற சில பல சில்லரை வேலைகளையெல்லாம் முடித்துவிட்டுத் திண்ணையில் அமர்ந்து, இறுமிக் கனைத்து ஆரம்பிக்கின்றார். இதற்குள் இரண்டு மணி நேரமாவது காத்திருக்க நேரிடுகிறது. அதன் பின்னர், அவர் சில பாக்களையும், அவற்றின் நயங்களையும் எடுத்துக் கூறி முடித்ததும், நான் அவரிடம் விடை பெற்று எனது வீட்டிற்குச் செல்ல முயல்கிறேன். அப்பொழுது அவர், "எருமை மாட்டிற்குத் தீனியில்லை; புல் ஒரு கட்டு பெருங் கட்டாக அனுப்பிவை" என்கிறார். "போகிறது, எருமைக்குத்தானே" என்று அன்று மாலை ஒரு கட்டுப் புல் அனுப்பி வைக்கிறேன். உருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? கம்பன் பாச்சுவை மறுநாளும் அவரிடத்தில் செல்லுமாறு என்னைத் தூண்டுகிறது. மறுநாள் அந்தச் சில்லரை வேலைகளையெல்லாம் அவர் செய்வதில்லை. என்னைக் கண்டதும் வந்து அமர்ந்து, அவரே ஆரம்பித்துவிடுகிறார். "நேற்று இராமனுக்கும் வாலிக்கும் நடந்த சம்பாஷணையையா கேட்டாய்? அதிலென்ன அருமை யிருக்கிறது! சூர்ப்பநகைக்கும் இராமனுக்கும் நடந்த சம்வாதத்தைக் கேட்டிருக்கிறாயா?" என்கிறார். "இல்லை சுவாமிகளே" என்கிறேன். "நல்லது" என்று தொடங்கி முடிக்கிறார். நான் எழுந்து நின்றதும், "வீட்டில்

ஒரு புஸ்தகத்திலோ—மனிதனிடத்திலோ தவறுதல்கள் காணுவது வெகு சுலபம். நன்மை காணல் வெகு கடினம். நாம் சுலபமானதையே கைக்கொள்ளுகிறோம்.



விறகில்லாமல் கஷ்டமாக இருக்கிறது; ஒவ்வொரு சுமையாக வாங்குவதென்றாலும், சில சமயத்தில் கிடைப்பதில்லை; சௌகரியப்பட்டால் ஒரு வண்டி விறகு அனுப்பிவை" என்கிறார். என்ன செய்வது? செல்வமும் தாராள சிந்தையும் படைத்தவர்கள் கொடுக்கலாம். எளிமையும் உலோபியுமான நான் எவ்வாறு கொடுப்பேன்? அதற்குப் பின்பு கம்பன் கவி நயத்திற்கு முற்றுப் புள்ளி கொடுத்துவிடுகிறேன். "கூரையேறிக் கோழி பிடிக்காத குருக்களா வானத்தைக் கீறி வைகுந்தங் காட்டப்போகிறார்" என்பதற்கியைய, எனது ஊருக்கு அருகேயிருக்கும் ஒருவரிடத்தில் புல்லையும் விறகையும் கொடுத்துக் காவியச் சுவை யறிந்துகொள்ள வியலாத என்போன்றோர் நெடுந்தூரத்தே வசிக்கும் பேரறிஞர்களை யணுகிப் பயிற்சி பெறல் எங்ஙனம் இயலும்? இத்தகைய துயர நிலையை ஒழித்து, மனிதருக்கு இன்ப வாழ்க்கை நல்க எழுந்தவைகள்தாம் பத்திரிகைகள்.

இப்பொழுது நம் நாட்டிலே மூலை முடுக்குகளில் வசிக்கும் ஒவ்வொரு கிராமவாசியும் மகாத்மா காந்தியடிகளின் தூய வாழ்க்கையை அவரோடு நெடுநாள் பழகித் தெரிந்துகொண்டவர்போலப் பேசுகிறார்கள். அடிகள் அவ்வப்பொழுது அறிவுறுத்தும் தருமோபதேசங்களை நேரேயிருந்து கேட்பவர் போலச் சொல்லுகின்றனர். இங்ஙனம் பேசியும் சொல்லியும் வருவதோடு அவர்கள் நிற்கவில்லை; கூடியவரை அப் பெருமானின் புத்திமதிகளையொட்டி நடக்க முயல்கின்றனர்; நடந்தும் வருகின்றனர். இத்தகைய நிகழ்ச்சி நம் நாட்டில் என்றும் நிகழ்ந்ததில்லை. பகவான் உலகை உய்விக்கவேண்டித் தசரதன் மதலையாகத் தரணியில் தோன்றிய அந் நாளில், அப் பெருமானின் கருணாவிலாசத்தை யறிந்து நடந்தவர்களின் தொகை, இன்று காந்தியடிகளை யறிந்து, அவர் கருத்திற்கியைய நடப்பவரின் தொகைக்கு மிகக் குறைந்தனவாகவே யிருந்திருக்கும். இத்தகைய பெரும் மாறுதலுக்குக் காரணம் என்ன? பத்திரிகைகள்தாம். இங்கே பத்திரிகைகள் என்று என்றால் குறிக்கப்படுவனவற்றுள் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் பெரும்பாலும் தினப் பதிப்புத் தாள்கள் ஒழிந்தவையேயாகும். தமிழ் நாட்டிலே தமிழ் மொழியில் நாள்தோறும் வெளிவரும் பத்திரிகைகள் ஒன்றிரண்டுதான் நடைபெறுகின்றன. என்போன்ற ஏழைக் குடியானவர்கள் அதிகச் சந்தா கொடுத்து அத்தகைய பத்திரிகைகளை வாங்கிப் படிக்க இயல்வதில்லை அதற்காகப்

புராணங்களையும், நம் ஆன்றோர் வினைகளையும் பொய் பொய் என்று நிரூபிக்க முயற்சிப்பதைக் காட்டிலும், அவற்றுள் பொதிந்து கிடக்கும் நன்னெறிகளை மக்கட்கு ஊட்ட வேண்டும்.

பலபேர் சேர்ந்து ஒரு பத்திரிகை வாங்கிப் படிக்கலாமென்றால், கிராமவாசிகள் அறிந்து நடந்து நலம் பெறுதற்குரிய விஷயங்கள் மிகச் சொற்பமாகவே யிருக்கின்றன. பகல் முழுவதும் வயலில் வேலை செய்து மீளும் மந்த மதியினனாகிய நான் அன்றன்று தினப் பதிப்புத் தாள்களில் வரும் அரிய செய்திகள் சிலவற்றைச் சிலநாள் வரை மனதில் வைத்திருந்து பின்பு மறந்துவிடுகிறேன். பல நாட்களுக்கு முன் வெளிவந்த, வங்க அறிஞர் ராய் அவர்களது கதரின் தத்துவத்தைப் பற்றிப் பேசிய செய்தியை மீண்டும் அறிந்துகொள்ள என் மனம்விழைகின்றது. இச் சமயத்து அத் தினசரித் தாள்கள் எவ்வளவு தூரம் உதவிசெய்யக் கூடும்? நாட்டில் அரசியல் கொந்தளிப்பு அதிகமாகுங்காலத்து, அரசாங்கத்தாரின் அதிகார அமுல் நிலைதடுமாறி நிற்கும்பொழுது, முற்கூறிய தினசரிகள் மைசூர் தோல் பதனிடும் தொழிற்சாலையைப் பற்றியும், ஸஹாரா பாலைவனத்தைக் குறித்தும், திபேத்து நாட்டுத் தலைலாமாவைப் பற்றியும் எழுத ஆரம்பித்துவிடுகின்றன. அவைகளிற் சில அவ்வளவோடு நிற்பதில்லை. ''குதிரை கீழே தள்ளியதல்லாமல் குழியையும் பறித்தது'' என்னும் கதைபோல், ''காந்தி இப்பொழுது தொடங்கியிருக்கும் செயலால் ஜனங்களுக்கு அளவிறந்த கஷ்டமும் நஷ்டமும் வருமென்று நாம் அப்பொழுதே சொன்னோம்; இனியாவது அவர் புனராலோசனை செய்து நடப்பாராக'' என்று எழுதி, நமக்கு இருக்கும் அற்ப சொற்ப அறிவையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் மழுங்கச் செய்துவருகின்றன.

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் ஆசிரியராக இருந்த காலத்துத் ''தேசபக்தன்'' சிறந்த தொண்டு செய்தது. உதவி மறுத்தல் என்றும் ஒத்துழையாமை யென்றும் இன்று கிராமவாசிகளில் எவரேனும் சொல்லுவாராயின் அது ''தேசபக்தன்'' கற்பித்த சொல்லேயென்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இங்கே ஒன்றை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியா என்னும்போது வெறுங் கல்லையும் மண்ணையுங் கருதாது, அதில் வசிக்கும் மக்கள் என்று அறிந்துகொள்ளுவது போல, பத்திரிகை யென்னுங்கால் அச்சுப் பொறியினின்று வெளிவரும் கருப்பு கலந்த தாள்கள் என்று கருதாது, முக்கியமாக அதன் ஆசிரியரை அறிந்துகொள்ளுதல் வேண்டும். என்னால் முற்கூறப்பட்ட முறையில் சிறந்த தொண்டு செய்துவருவன வார மாதப் பதிப்புகள் தாம். இப்பொழுது மாதம் ஒரு முறை, இரு முறை, மும் முறைப்

ஸ்ரீ கிருஷ்ணரின் பராக்ரமத்தை நீங்கள் உணர வேண்டுமாகில், உபநிஷத்துகளின் உண்மைகளை சரிவர உணர வேண்டுமாகில் உடல் நலம் பெற்ற உண்மை மனிதர்களாகத் திகழல் வேண்டும்.



பத்திரிகைகளிற் சில ''பூழிக்குப் பிழி'' வாங்கத் தலைப்பட்டுள்ளன. தமிழ் நாட்டிலே முற்குறித்த பத்திரிகைகளிற் சில தம்மைத் தமிழர்கள் தக்கவாறு ஆதரிக்காது ஏமாற்றிய சூழ்ச்சிக்காக அழகிய மாய வலைகளை வீசி, அவற்றில் அகப்படுமாறு முயன்று வெற்றி பெற்று வருகின்றன. ''அவன் கிடக்கிறான் குடிகாரன், எனக்கு ஒரு மொந்தை போடு'' என்பதுபோல, குதிரைப் பந்தயங்களாலும் பிற சூதாட்டங்களாலும் விளையும் தீமைகளை யெடுத்துக் கூறிக் கண்டித்துவந்த அப் பத்திரிகைகள், இப்பொழுது தாமே அத்தகைய துறையில் இறங்கி வேலை செய்கின்றன.

முற்குறித்த நலங்களெல்லாம் பொருந்தி, பிற்கூறிய குறைகள் எவையுமின்றி உயர்ந்த தொண்டு செய்துவரும் சிறந்த மாசிகைகளில் ''பாரதி'' பிரதானமாக விளங்குகிறது. இங்ஙனம் விளங்குவதற்கு அதன் ஆசிரியர்தான் காரணம். அவர்களொடு நேரேயிருந்து பழகியவர்கள் எனது உரையைப் புகழுரையென்று கருதார்கள். ''பாரதி'' யென்னும் இச் சீரிய மாதப் பத்திகையே ஆசிரியரவர்களின் உயர்ந்த எண்ணங்களையும், சிறந்த தொண்டையும் வெளிப்படுத்தி வருகையில் அவரொடு பழகித் தெரிந்துகொள்ள வேண்டுமென்பது அவசியமில்லை.

''நல்லாறொழுக்கின் றலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார்—பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்துந் தின்னாவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்''

[பல புள்ளிகளையும், சிவந்த கண்களையும் உடைய ஆண் புலிகள் மிகப் பசித்தபோதும் குளிர்ந்த வயலிடத்ததாகிய பசிய புல்லை மேயாவாம்; அஃதேபோல் நன்னெறி யொழுக்கத்தின் கண்ணே எப்பொழுதும் நின்றவர் வறுமையடைந்த காலத்திலும் பாவஞ்செய்தற்கு உடம்படார்.] ஆதலின் சிறந்த மாசிகையாகத் திகழும் இப் ''பாரதி''யைத் தமிழ் அன்பர்கள் பலரும் ஆதரித்தல் அவரவர் கடமையல்லவா?

நாம் நெடுநாட்களாய் அழுதுத் தீர்த்தாய்விட்டது. இனி அழுகை வேண்டாம். நாங்களும் மனிதர்களே என்று மார்தட்டி முன் வாருங்கள். உண்மை மனிதர்களாக்கும் கொள்கைகள் வேண்டும். உண்மை மனிதர்களாக்கும் கல்வி வேண்டும்.

# ஏச்சில் மாம்பழம்.

திரு. S. V. வெங்கட்டநாராயண சர்மா அவர்கள், B.A., B.L.

ராஜத்தின் முகத்தில் சதா புன்சிரிப்பே. நான் எத்தனை கேள்விகள் கேட்ட போதிலும் அந்த ஒரே பதில்தான். அவளது புன்சிரிப்பிலிருந்தே நான் என் மனதிற்குகந்த பதிலை தேடி எடுத்துக்கொண்டு சந்தோஷத்தை அடைவேன்.

நான் குடியிருந்தது ஒரு பாழடைந்த குடிசை; ராஜத்தினுடைய மாளிகை அதற்கு எதிரிலேயே இருந்தது. அம் மாளிகையின் மூன்றுவது மாடியின் வெளித் தாழ்வாரத்தில் தட்டிகள் கட்டப்பட்டிருந்தன. ஆனால் அத் தட்டிகளின் மூலைகள் சிறிது உடைபட்டிருந்தன ஒருவேளை ராஜம் வேண்டுமென்றே தன் மெல்லிய கரங்களால் உடைத்து விட்டாளோ என்னவோ! அதே துவாரத்தின் வழியாக, அவள் அஜாக்கிரதையாய் இருக்கும் சமயத்தில் நான் அவளைப் பார்த்துவிட்டேன். மற்றொரு நாள் அவ்விடத்திற்கு வந்தாள். நானும் கண்ணுரப் பார்த்தேன். நாளடைவில் அவளுக்கும் எனக்கும் இப் பார்வை மட்டில் பழக்கம் ஏற்பட்டு விட்டது. நானும் அவளை நன்கு அறிந்துகொண்டேன். அவளும் என்னை நன்கு அறிந்துகொண்டாள்.

பிறகு ராஜம் தினந்தோறும் சிறிது நேரமாவது மூன்றுவது மாடியின் தட்டியினண்டை வந்து நிற்பாள். நானும் எனது மற்ற காரியங்களையும் விட்டுவிட்டு அவளுடைய வருகைக்காக மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்திருப்பேன். ஆனால் ஒரு நாளாவது என் பேரவா பூர்த்தி யடையாமல் இருந்ததில்லை.

நான் அவளது தைவீகமான அழகை எத்தனை முறை காண்கின்றேனே, அத்தனை முறையும் ஒரு தடவையைக் காட்டிலும் மற்ற தடவை புதிய புதிய அழகைக் கண்டுகளித்தேன். என் மனதையே கொள்ளைகொண்ட அவளது புன்சிரிப்பு என் இருதயத்தினின்றும்

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸ தேவர் ஸ்வாமி விவேகானந்தரைப் பார்த்து "என்னைப் பார்! என் செய்கைகளைக் கவனி" என்றார். இதில் உலகளவு அர்த்தமிருக்கிறது.



சிறிதளவேனும் மறையவில்லை. என் பெயர் எனக்கு எவ்வளவு தெளிவாக ஞாபகமிருக்கிறதோ அதைக்காட்டிலும் தெளிவாக அவள் ஹாஸ்யம் என் மனதில் பதிந்திருக்கிறது. ஆனால் அவளது குரல் எவ்வளவு மென்மையோ எவ்வளவு இனியதோ என்பது எனக்குச் சிறிதும் ஞாபகம் இல்லை. அது எப்படி இருக்கும் என்றே அறிந்ததில்லை.

நான் அவளது குரலோசையைக் கேட்க மிகுந்த ஆவல்கொண்டிருந்தேன். ஆனால் அந்த கல் பிரதிமை—அல்ல! அல்ல! பொற் பிரதிமை ஒரு நாளேனும் பேசவே இல்லை. நான் எவ்வளவோ கோளாறுகள் செய்து பார்த்தேன். ஆனால் கோவைக் கனிபோன்ற அவளது உதடுகளில் புன்சிரிப்பு மலர்ந்ததே யொழிய குரலோசை சிறிதும் வெளிவரவில்லை. சித்திரத்தை—உருவத்தைக் கண்டேன்; ஆனால் இன்னிசையைக் கேட்கவில்லை. மனப்பான்மையைக் கண்டேன்; ஆனால் அதன் பொருளை நான் அறியவில்லை. என் கண்கள் கிருதார்த்தர்கள் ஆயின. ஆனால் என் செவிகளோ பெரும் பாவத்தைச் செய்திருந்தன போலும்! சிற்சில சமயங்களில் என் காதுகள் என்னேடு இரகசியமாகச் சொல்லும் "நீ செவிடனே! என்னவோ!"

2

அது எப்படியோ போகட்டும். ஒரு மனிதனுக்கு உலகத்தில் எல்லாவற்றைக் காட்டிலும் பிரியமான வஸ்துவோ, அல்லது இனிமையான நிகழ்ச்சியோ, அல்லது எதுவோ நன்றாக மனதில் பதிந்திருக்கும் என்று உலகத்தோர் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஆனால் எனக்கோ அப் பயங்கரமான மாலை நேரம் இப்பொழுதுதான் நிகழ்ந்ததே போல இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

ஆஹா! அன்றையதினம் முது வேனிற்காலத்து மாலை நேரம். சூரிய வெப்பத்தினால் சூடடைந்த பூமியின் மேல் குளிர்ந்த தண்ணீரைத் தெளித்து நான் சமையல் செய்துகொண் டிருந்தேன். திடீரென்று சூர்யோதயமாயிற்று! "அடே பயித்தியக்கார மனமே! மாலை நேரத்தில் எங்காவது சூர்யோதயம் உண்டாமோ? உன் பிரமையேத் தவிர வேறில்லை. இந்த ஜோதிக்குக் காரணம் நான் சொல்லுகிறேன் கேள். அதோ பார் திரைக்குப் பின்னல் ராஜம் நின்றுகொண்டிருக்கிறாள்" என்று இருதயத்தில் ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ராஜம் நின்றுகொண்டு ஒரு மாம்பழத்தைக் கடித்துச் சப்பித் தின்றுகொண்டிருந்தாள். மாம்பழம் மிகுந்த

விவேகாநந்தர் ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பார்த்த ஒரு பார்வையிலேயே வேதாந்த பொக்கிஷத்தைக் கொள்ளை கொண்டார். இது சத்தியமாயென்றால், இவர் [illegible]த வினை இதுதான்.

19893

இனிமையாயிருந்த தென்பதற்குச் சிறிதும் சந்தேகமே இல்லை. ஆனால் அவளது புன்முறுவல் அதைக்காட்டிலும் ஆயிர மடங்கு மதுரமா யிருந்தது. தனது அதரங்களில் அவ்வளவு இனிமையை வைத்துக்கொண்டிருந்தும் ராஜம் ஏன் இந்த அற்ப மாம்பழத்தை உறுஞ்சிக்கொண் டிருந்தாளோ தெரியவில்லை.

மாம்பழத்தைச் சப்பி உறுஞ்சியான பிறகு அதன் தொலி களைத்தூர வீசி எறிந்தாள். அந்த எச்சில் மாம்பழத்தின் தோல் சிறிதளவேனும் என் சமையலில் விழுந்து விட்டால் என் சமையல் முழுதும் அசுத்தமாகி விடும் என்று அவள் நினைத்திருந்தாள். ஆனால் நான் நினைத்தது என்னவெனில், அவளது எச்சில் மாம் பழத் தோலின் ஒரு துளியாவது என் சமையலில் விழுந்தால், என் சமையல் புனிதம் அடையும் என்று.

தோலை எறிந்த பிறகு ராஜம் கொட்டையைச் சுவைத்துக் கொண்டிருந்தாள். திடீரென்று மாம்பழக் கொட்டை அவள் வாயி லிருந்து நழுவிவிட்டது. கொட்டை நழுவி என் சமையலில்தான் விழும் என்று அவள் மனதிற் பட்டுவிட்டது. அதற்குள் அந்தக் கொட்டையைப் பிடித்துக்கொள்வதற்காக எட்டினாள். மாங் கொட்டை விழுந்தது. அதோடு ராஜமும் வீழ்ந்தாள். ராஜத்தின் அஜாக்கிரதையினால் கொட்டை நழுவிற்று. இயற்கை மாதாவின் அஜாக்கிரதையினால் ராஜம் நழுவினாள். ஐயோ! இயற்கையே! இந்த ராஜம் உனக்கு என்ன கேட்டை விளைவித்துவிட்டாள்? இந்த ராஜம் என்னும் புஷ்பம் இன்னும் நன்றாகக்கூட மலரவில்லையே! அந்தோ!

மாங்கொட்டையும் ராஜமும் என் பக்கத்தில் கடினமான தரை யில் வீழ்ந்தார்கள் அதே சமயத்தில் என் இருதயத்திலும் பேரிடி விழுந்தது. ராஜம் மூர்ச்சித்துப் போனாள்.

ஒரு நொடியில் அவளது தாய் தந்தையர் அவ்விடத்திற்கு ஓடி வந்தார்கள். கொஞ்ச நேரம் சைத்தியோபசாரம் செய்த பிறகு ராஜம் மெதுவாகக் கண்ணைத் திறந்தாள். எல்லோருக்கும் பிராணன் வந்தது. ராஜம் தன் கமலம் போன்ற வாயைத் திறந்தாள். எனக் கும் உயிர் வந்தது. அவளது உதடுகள் நடுங்கின.

அவள் மெல்லிய குரலில் "அந்த மாம்பழக் கொட்டை எச்சில் இல்லை" என்றாள். அதற்குப் பிறகு ராஜம் வாயை மூடிக்கொண் டாள். கண்களையும் மூடிக்கொண்டாள். அதற்குப் பிறகு ராஜம் பேசவில்லை. அதுவே அவளுடைய கடைசிச் சத்தம். ராஜம்,

---

தமிழர் இயக்கமொன்று தோன்ற வேண்டும். தமிழ்க் கொடி உயர வேண்டும்.



மாயம் நிறைந்த உலகத்துத் தன் மாய உடலை நீத்து உண்மை உலகுக் குச் சென்றாள்.

பிறகு நான் எந்தப் பக்கம் திரும்பினாலும் "அந்த மாம்பழக் கொட்டை எச்சில் இல்லை, அந்த மாம்பழக்கொட்டை எச்சில் இல்லை" என்ற சத்தமே என் காதுகளில் எதிரொலித்தது. உயி ருள்ளவை, உயிரில்லாதவை, மரம், செடி, கொடி, மான், மயில், குயில் முதலியன எல்லாம் என்னிடம், "அந்த மாம்பழக்கொட்டை எச்சில் இல்லை" என்று சொல்ல ஆரம்பித்தன.

ராஜத்தை எங்கு தேடியும் பிறகு நான் காணமுடியவில்லை. வெகுநாள்வரை நான் ராஜத்தைத் தேடிக்கொண்டே பயித்தியக் காரனைப் போல் அலைந்து திரிந்தேன். ஆனால் ராஜத்தைக் கண்டு பிடிக்கமுடியவில்லை.

எப்பொழுது ராஜம் இல்லாமல் இவ்வுலகத்தில் எனக்குச் சிறிதும் பற்றில்லாமல் போய்விட்டதோ, அப்பொழுது நானும் ஜன சமூகத்தினிடையே வசிப்பதை விட்டு விட்டு ஜன சஞ்சாரமற்ற காடுகளில் வசிக்க ஆரம்பித்தேன். ராஜத்தின் அந்த எச்சில் மாம் பழக்கொட்டை ஒன்றே என் துணை. ராஜத்தை அடையும் பொருட்டு எவ்வளவோ அரும் பாடுபட்டேன். ஆனால் ராஜம் அகப்படவில்லை. சாந்தியைத் தேடித் திரிந்தேன். அதுவும் கிடைக்கவில்லை.

3

ஒருநாள் இருண்ட மேகம் ஆகாயத்திலிருந்து மெல்லிய நீர்த் துளிகளை பூமியின் மேல் தெளித்துக்கொண் டிருந்தது. நான் என் பொங்குகிற ஆசையையும், மோகத்தையும், துக்கத்தையும் ஒருவாறு அடக்கிக்கொண்டு அம் மாங்கொட்டையை பூமியில் நட்டேன். சில நாட்களுக்குப் பிறகு முளை கிளம்பிற்று. நான் இடைவிடா முயற்சி யோடு அதைக் காப்பாற்றி வந்தேன். பிறகு அந்த முளை பெரிய மரமாகிவிட்டது.

திடீரென்று ஒரு வஸந்த காலத்தில் அதில் அரும்புகள் தோன் றின. ராஜம் தன் இனிய ஹாஸ்யத்தோடு வந்து விட்டாற்போல் என் கண்களுக்குப் புலப்பட்டன. அம் மரத்தின் கிளைகளின் மேல் குயில்கள் கூ......கூ...... என்று கூவ ஆரம்பித்தன. அது ராஜத் தின் இன்னிசையே போல் இருந்தது. நாளடைவில் அரும்புகளி

---

தமிழர் ஒரு குல மைந்தராக வாழ வேண்டும். தமிழ் நாட்டன்பு தழைக்க வேண்டும்.

# தாமரையின் காதல்.

(காளிதாசன்.)

[காபிரைட்.]

மலரின் தேவியே! மாயச் சிரிப்பே!
கலவியின் களிப்பே! காதலின் விரிவே!
நீல நீரினில் நீந்தும் ராணியே!
கோலமே! திருமகள் குலவிய பதுமமே!
வண்டுக்கு நிதமும் வான்மது கொடுக்கும்

---

விருந்து மாம்பிஞ்சுகள் உண்டாயின. அவைகளைப் பார்த்தால் ராஜம் "இந்த மாம்பழங்கள் எச்சில் இல்லை" என்று சொல்லுவது போல் இருந்தது.

இப்பொழுது இம் மரத்தினடியிலேயே என் குடிசை இருக்கிறது. நான் பக்ஷிகளுக்கு இம் மரத்தின் மேல் கூடு கட்டவும், இளைப்பாறவும் இடை கொடுத்திருக்கிறேன். கீழே என் குடிசையில் சிறிது நேரம் இளைப்பாறிச் செல்ல வேண்டுமென்று களைத்த வழிப்போக்கர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஒவ்வொரு மாம்பழக் காலத்திலும் வழிப்போக்கர்களுக்கு ஒவ்வொரு மாம்பழம் கொடுத்து வருகிறேன். அவர்கள் பழத்தை அன்போடு சாப்பிடும்போது, அப் பழங்கள் எச்சில் இல்லை என்று நான் நினைத்துக்கொள்ளுகிறேன்.

வருஷத்தில் ஒரு முறை ராஜம் மாமரத்தின் நடுவிலிருந்து எட்டிப் பார்த்து எனக்குக் காட்சி கொடுக்கிறாள். நானும் அன்போடு "ராஜம்" என்று கூப்பிடுகிறேன். அவள் உடனே வெட்கி, இலைகளாகிய முகமூடியால் தன் முகத்தை மறைத்துக் கொள்ளுகிறாள்.

"ஏன் ராஜம்! ஏன் இவ்வளவு வெட்கம்?" என்று நான் கேட்கிறேன்.

"இப்பொழுது எனக்குக் கலியாணம் ஆய்விட்டது" என்று ராஜம் பதில் சொல்லுகிறாள்.

---

தமிழ் வேதம் சிறக்க வேண்டும். தமிழர், சீக்கியர் போன்று ஒரு வீர ஜாதியாக வாழ வேண்டும்.



கண்டவர் களிக்கும் காட்சிக் கினியோய்!
நின்னைப் பணிவேன், நின்னைப் பாடுவேன்.
நின்னருள் காண நித்தம் தவம் கிடப்பேன்
நின்னை யொருவன் நெஞ்சகம் இல்லோன்
தன்னை அணிசெயத் தாவிப் பறிப்பனேல்
அன்னவன் தன்னொடும் அமர்செய் துன் மேனி
சின்ன முறாமல் தினந் தினம் காப்பேன்.

ஆயினும்

நின்னருள் தெரியேன், நின்மன மறியேன்,
நின்னுறு வாழ்வின் நெறியதும காணேன்,
நின்னுறு ரகசிய நினைவுகள் பூணேன்,
நின்னையே யேனோ நெஞ்சகம் விரும்பும்.
தாயே! தனையயே! தையலே! தண்மையே!
நீயே யன்பின் நிலயமென் றுரைப்பார்.
வையத்துப் பிறந்தாய், வான் காதலித்தாய்,
பொய்யைக் கடிந்தாய், புன்னகை பூத்தாய்,
இருளை மருண்டாய், ஒளியை மகிழ்ந்தாய்,
இரவிற் குவிவாய்ப் பகலில் விரிவாய்.
நீபெறுஞ் சிறுமிகள் ஆயினும் நின்மலர்
வாய்பெறுங் கவிதை வழங்குவ தாகையால்
அக்கரு மதலைகட் கமுத மூட்டுவாய்.
புக்க நல்லன்னம் புகழ்ந்திடப் பஞ்சணை
தருவாய். ஆயினும் தழுவிநின் காம்பை
அசைக்கும் தண்டினை யரைக்கணம் கருதாய்.
மசக்கைத் தவளை மோதுதல் மதியாய்.
நின்னைப் பெற்றதாய் நீர் அது பொங்கி
நின்னைத் தழுவிட முயன்றிடில் நீங்கி
மேலுறக் கிளம்புவாய், மின்னொளித் தேவனை
மாலுற நோக்குவாய், மதிமயங் கிடுவாய்.
ஆசைக் கதிர்களை அள்ளிக் குடிப்பாய்.
வீசும் காற்றில் வியன்நடம் புரிவாய்.
தாய்தன் னுயிரின் தன்மை சிதறிடில்
ஆய்முத் தமுதமா யுருக்குவாய். என்னே!
நீவளர் நெறிதான்? நிராக ஜெபங்கள்?
பாவளர்த் திடுவாய்ப் புகச்சொல வறியாய்
ஆசையின் கனல்நீ! ஆவலின் குறை!

---

பத்திரிகையென்பது மக்களின் அறிவையும் ஆன்மாவையும் வளர்த்து நாட்டின் இருளைப் போக்கும் ஒரு சக்தி.

தண்மையிற் பிறந்தும் வெம்மையை வேண்டுவாய்
தண்மையிற் கருமையின் செம்மலர் பணிகீய
நீரிடை யிருந்தும் நெருப்பினை உண்ணுவாய்
யாரிடை யிந்த அதிசய முரைப்பேன்!
ஒளியும் கனலும் ஓய்ந்திடில் தாய்ஜலம்
அளியற் றன்னை யழுகவைத் திடுமால்

அஃதான் று

நீரை விடுக்கில்நின் நெருப்புக் கணவன்
ஈர மின்றியுனை யெரிய வைத்திடுவான்
தாய்மடி நீங்காய்த் தழல்மது நீங்காய்.
வையமா மலர்நீ; வானமா மலரவன்.
எரியாக் கனல்நீ; எரியும் கனலவன்.
காற்றில் அசைவைநீ; காற்றசைப் போனவன்.
இருளவன் தந்தை. இருளிடைத் தோன்றுவான்
இருளினைக் கொன்றான். இவனோ புதல்வன்?
நீயவன் மனைவி; நீர்அவன் மாமி
நீரினை யவன் தினம் நெஞ்சுற வுறிஞ்சுவான்
பாதகன், கொலைதொழிற் படைபல உடையோன்
பாதுநீ யவன்மிசை மையலேன் கொண்டாய்?
நானுனைத் தினமும் நம்பித் தொழுவேன்,
மானுறு மாதர் மாய்ப்பதைத் தடுப்பேன்,
என்னுயி ரின்றதி யாவையும் புரிவேன்,
என்னு லியலா திருந்திடி லன்றே
என்னைக் கொல்வேன், எதற்கெனில் காதலி!
நின்னைத் தழுவியென் நெஞ்சுற வணையவே
வருவாய், முத்தம் தருவாய், போதும்.”
என்று பற்பலவும் எண்ணி நின்றனனால்.
அன்பாய்க் காற்றெனும் தூதுவன் அன்னவள்
தன்னை மெதுவாய்த் தள்ளினன் என்புறம்.
தாமரைத் தையலும் தழுவினள் என்பதம்
குனிந்தோர் முத்தம் குலவினேன் ஆ! ஆ!
அப்போ தவள்சொன ஆசை வார்த்தைகள்
எப்போ தேனும் மறந்திட வியலுமோ?
“ஆசைக் காதல! அன்பே ஈசன்.
நேசமே கடவுளின் நெஞ்சம். நேசத்து
வாசமே நாமெலாம். வானவன் வளமை;
வைய மெல்லாமவன் வைகும் மலர்வனம்.

ஆதலால்

வானை மகிழ்வேன், வையத்து வாழ்வேன்.
சேற்றினிற் காலும், தேசினிற் சிந்தையும்
கொண்டுநான் வாழ்வேன்; குவலயத் திதுநெறி;
இதுவென் வாழ்க்கை. இதுவென் ரகசியம்.
இன்றுனைக் கண்டேன். இயம்பொணுக் காதல்
கொண்டேன்.” என்று நாணினள், குனிந்தாள்.
ஆசையா வேசத் தருமையி லறியேன்
நேசமா மலரை நெஞ்சமா மலரொடு
சேர்த்தனன், இறுகத் தழுவினன், சிதைந்தாள்.
“காதலன் கையினிற் சாதலே மோட்ச”மென்
றியம்பினள்; இறந்தாள். ஏழையென் செய்வேன்?
அழுதேன்! ஐயோ! அழுதேன்!! அழுதேன்!!!

---


உலகை எவ்வகையிலும் உயர்த்தி நலன் விளைவிக்கும் உண்மைகளை மக்களிடையே பரப்பி அறவுணர்ச்சியைப் புகட்டுவது பத்திரிகைகளின் உண்மையான நோக்கம்.

---

# மகாத்மா காந்தியும் தற்கால நாகரீகமும்.

## தீனபந்து ஸீ எப். ஆண்ட்ரூஸ் அவர்கள்.

(“வீரகேசரி”யில் வெளிவந்தது)



மகாத்மாஜியின் கொள்கைகளைப் பற்றி ஒரு பத்திரிகையில் யாரோ ஒருவர் ஒரு கட்டுரை வரைந்திருப்பதை நான் கண்டேன். அக் கட்டுரையில் மகாத்மாஜியின் அரசியல் கொள்கை சம்பந்தமாகத் தமது கருத்தை மிகவும் தெளிவாக அக் கட்டுரையின் ஆசிரியர் எழுதியிருக்கிறார். தற்கால நாகரீக முன்னேற்றத்திற்கும்

---

பாரத நாட்டின் இளஞ் சிங்கங்களே! முதன்முதலில் நீங்கள் உடல் நலம் பெறுங்கள். மதமென்பது பின்னர் தெரியவரும்.

காந்திஜியின் கொள்கைகளுக்குமுள்ள வித்தியாசத்தை அவர் ஆங்காங்கு விளக்கியுமிருக்கிறார்.

காந்திஜியின் சுயராஜ்யம் என்பது என்ன? என்று மேற்படி கட்டுரை ஆசிரியர் ஒரு கேள்வியைப் பிறப்பித்துக்கொண்டு அக் கேள்விகளுக்கு அவரே பதிலளித்திருக்கிறார். அதாவது:—

காந்தி சுயராஜ்யத்தில் நாமெல்லோரும் நாய்களைப்போல் தான் வாழ வேண்டும் என்பதே. நாய் வாழ்க்கை என்றால் என்ன என்று அக் கட்டுரை ஆசிரியர் கூறுவதாவது:—

காந்தி சுயராஜ்யத்தில் மோட்டார்கள், ஆகாயவிமானங்கள், இராணுவங்கள், ரெயில் வண்டிகள், டாக்டர்கள், சட்டவாதிகள் முதலியன ஒன்றும் கிடையாது. நாகரீக வாழ்க்கைக்கும் அவ் வாழ்க்கையினால் மனிதனுக்குக் கிடைக்கும் சுகங்களுக்கும் காந்தி ஒரு ஜென்ம விரோதியாவார்.

இக்கால இந்தியாவில் நாகரீகக் கல்வி யறிவு படைத்தவர்கள் எனக் கூறப்படும் சிலர் மேற்கூறிய ஆசிரியர் கருத்துக்கு இணங்கியவர்கள் போலவே கருதுகிறார்கள். ஆனால் இக் கனவான்கள் மோட்டார் வாகனங்கள் போன்றவைகளால் மனிதனுக்கு அதாவது பெரும்பான்மையோராகிய ஏழை மக்களுக்கு என்ன பலன் என்பதை ஆர அமர ஆலோசித்து இருக்கிறார்களா? என்று நாம் கேட்கிறோம். நாகரீகத்தில் முதிர்ந்தவை என நம்மில் சிலர் அல்லது பலர் கருதும் தற்கால நகர வாழ்க்கை ஓர் நரக வாழ்க்கை யென்பதை மகாத்மாஜி நமக்குப் பலமுறை அறிவுறுத்தி யிருக்கிறார். பணங் கொழுத்த ஒரு சிலர் நீங்கலாக இந் நகரங்களில் எல்லாம் வறுமை! வீண் டம்பம்! அளவிடற்கரிய துன்பம்! தற்கால நாகரீகத்தின் அனர்த்தத்தைக் கண்கூடாகக் காண வேண்டுமாயின், நித்திய தரித்திரர்கள் வாழும் பாழடைந்த குடிசைகள் செறிந்து, மண்ணும் உணவும் ஒன்றாகக் கருதி உண்ணும் மனிதர்கள் வாழும் இடங்களிற் சென்று பாருங்கள்.

மகாத்மா காந்தி தமது வாழ்நாட்களிற் பெரும் பகுதியை மேற்கூறிய பரம தரித்திரர்கள் வாழும் இடங்களைப் பார்வையிடுவதிலும் அங்குள்ள நிலைமையை ஆராய்ந்து அறிந்துகொள்வதிலும் செலவு செய்திருக்கிறார். ஏழைகளே அவரது நண்பர்கள். அவரது உணவில் பங்குபற்றும் அதிதிகளும் அவர்களே. அவரது உடைமைகள் அனைத்தும் ஏழைகளுடையவைகளே. கூரை மேய்ந்த வீடுகளும்,

எதுவும் சாதிக்க முடியாதென்று நீங்கள் கற்பிக்கப்பட்டிருப்பதால் நீங்கள் நாளுக்கு நாள் அனுமதேயங்களாய் வருகிறீர்கள். ஆதலால் உங்கள் சக்தியில் நம்பிக்கை கொள்ளுங்கள். நமக்கு வேண்டியது வலிமையே.



அரை நிர்வாணமான ஆடைகளும், உடைந்த மட்பாண்டங்களும், எளிய உணவுண்ணும் ஏழ்மையும், மாசுபடிந்த மேனியரும் ஆகிய இவைகளே மகாத்மாஜியின் மனதில் தாண்டவமாடிக் கொண்டிருக்கும் நித்தியக் காட்சி.

* * * * *

தென்னாப்பிரிக்காவிலுள்ள டர்பன் நகரின் ஓர் பாகத்தில் உண்ண உணவின்றி, உடுக்க ஆடையின்றி எண்ணி யெடுக்கத் தகுந்த என்பெழுந்தயாக்கையராய் வறுமைப் பிணியால் வாடி வதங்கி வாழும் இந்தியர்களாகிய ஆண் பெண் குழந்தைகள் முதலியோர் தம்மைச் சூழ்ந்திருக்க, அவர்களுக்கு நடுவே கருணை பொழியும் கண்களும் புன்முறுவல் பூத்தவாயும் அவர்களுக்குத் தேறுதல் கூற, கைகள் உதவி செய்ய, நெஞ்சம் நைந்துருக மகாத்மாஜி அவ் வேழைச் சிறுவர்களுக்கும் ஆண் பெண் முதலிய இருபாலாருக்கும் ஆற்றி வந்த அரும் பணிகள் இன்னும் மனக் கண்களின் முன்பு மறையாமல் தாண்டவமாடுகின்றன. அவ்வேழைத் தொழிலாளர்கள் யார்? கரும்புத் தோட்டங்களில் அல்லும் பகலும் ஓயாமல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ அரும் பாடுபட்டும் அதன் பயனை அனுபவிக்கச் சிறிதளவும் கொடுத்துவைக்காத பரம ஏழைகள். ஐயோ! வாயில்லாப் பிராணிகளைப் போல் களைப்பையும் சிரமத்தையும் வெளிக் காட்டாமல் மென்மேலும் உழைத்ததால் அவர்கள் தேகம் கருகி, சதை உருகி, எலும்பும் தோலுமாகக் காணப்படுகிறார்கள். இவர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுப்போர்கள் இல்லை. விதைப்பவன் ஒருவன் அறுவடை செய்பவன் இன்னொருவனா?

ஏழைத் தொழிலாளி பாடுபட்டு இருள் நிறைந்த நெஞ்சினர்களாகிய தோட்டத்துரைகள் குஷாலாய்க் கும்மாளம் போட்டு மோட்டார் வாகனங்கள் முதலிய எண்ணரிய வசதிகளை அனுபவிக்கவா?

இத்தகைய கேவலமான நிலைமையிலுள்ள ஏழை இந்தியர்களை நமது மகாத்மாஜி ஒன்றுதிரட்டி அவர்களுக்கு உதவி செய்திராவிடில் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் போதாத அற்பச் சம்பளத்துக்கு அவர்கள் தங்கள் தோட்ட முதலாளிகளை நாடியே சென்றிருப்பார்கள். பசியின் கொடுமையை யார்தான் சகிக்கமுடியும்?

பிரிட்டோரியா நகரில் இந்திய ஏழைகள்—வண்ணார்கள், கறிகாய் விற்பனை செய்வோர் முதலியோர்களுடன் வாழ்ந்த காந்திஜியுடன் நானும் காலங் கழித்திருக்கிறேன். இவ்வேழைகள் கேவலம் பறை

வெங்காயத்தின் தோலை உரிக்க உரிக்க தோலே தவிர விதை காணோம். அது போலவே "நான்" என்னும் பொருளைத் தேடத் தேட அது எங்கும் காணக் கிடைக்காமல் திகைக்க வேண்டியதே.

யர்களைப் போல் நடத்தப்படுகிறார்கள். ஆனால் தங்கச்சுரங்க முதலாளிகளோ பிரமாண்டமான மாளிகைகளில் சுகமாக ஜீவிக்கிறார்கள்.

மகாத்மாஜி தென்னாப்பிரிக்காவில் மட்டுமின்றி ஆமதாபாத் ஆலைத் தொழிலாளர்களிடையேயும் நெருங்கிப் பழகியவராவார். தாமும் ஒரு ஏழை போல் வாழ்ந்து ஏழைகளின் துயரம் எவ்வாறிருக்கும் என்பதைத் தாமே அனுபவத்தில் அறிந்திருக்கிறார்.

ஆனால் நாம் ஏழைகளின் கஷ்டங்களை உணராதவர்களாய்த் தற்கால நாகரீகப் பிரகாரம் மோட்டார் வாகனங்களின் சுகங்களை அனுபவித்து வருகிறோம். உலகிலுள்ள ஏழை மக்கள் அனைவரும் நாங்கள் மட்டும் ஏன் பட்டினியால் வாடவேண்டும்? பணக்காரர்கள் சுகமனுபவிக்க நாங்கள் ஏன் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும்? என்று இப்போது கேட்கிறார்கள். இக் கேள்விகளுக்குப் பதில் கூறுபவர்கள் யார் இருக்கிறார்கள்?

மகாத்மாஜி ஏழை மக்களின் நண்பர். ஏழை பங்காளர். எனவே ஏழைகள் அவரைத் தங்கள் தெய்வமாகப் பாவிக்கின்றனர். இதனால் தான் முதல்படைத்த முதலாளிகள் எல்லோரும் அவருக்கு விரோதமாகப் படை திரட்டி யிருக்கிறார்கள்.

ஒரு முக்கியமான விஷயத்தை நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். தற்கால நாகரீக உலகில் எத்தனையோ பெரிய நகரங்கள் இருக்கின்றன. இந் நகரங்களில் செல்வந்தர்கள் வாழும் வீதிகளைக் கடந்து அப்பாலுள்ள ஏழைத் தொழிலாளர்கள் வதியும் தெருக்களைச் சற்றே உற்று நோக்குங்கள். தற்கால நாகரீகத்தின் பயனாகப் பணமுள்ள ஒரு சிலர் விமானங்களில் பறந்து செல்லும்போது, அவ் விமானங்களைச் சிருஷ்டிக்கும் தொழிலாளிமட்டும் கால் நோகக் கரடுமுரடான தரையில் ஏன் பாதசாரியாக நடந்து செல்லவேண்டும்? செல்வந்தன் பஞ்சணை மெத்தையில் துயில் கொள்ளும்போது, அம் மெத்தையை உற்பத்தி செய்தவன்மட்டும் கரடு முரடான தரையில் ஏன் படுத்துறங்க வேண்டும்? எனவே இந்த முதலாளி—தொழிலாளி, எஜமான்—வேலைக்காரன், பணக்காரன்—ஏழை என்ற பாகுபாடு இம் மனித சமுதாயத்தில் இருக்கும்வரையில் நவநாகரீகத்தால் ஏழை மக்களுக்கு என்ன பிரயோஜனம்? ஏழை மக்களுக்கு விரோதமான ஒரு நாகரீகத்தை நாகரீகமென்று எவ்வாறு கூறுவது? ஆகவே மகாத்மாஜி இத்தகைய அநாகரீகத்தையும் அதனால் ஒரு சிலருக்கு மட்டும் கிடைக்கும் சுகங்களையும் கண்டிப்பதனால் முதலாளிகளுக்கும் நாகரீகக் கல்வி கற்ற தற்காலத்தவர்களுக்கும் கோபம் பொங்கி எழுவானேன்?

---

"இவ் வுலகம் அநித்யமானது. தாமரை மீதுள்ள ஜலத் துளி போன்றது" என்று அழுது கொண்டே சோம்பித் திரியும் தன்மை வேண்டாம்.



உலக சரித்திர ஆசிரியர்கள் தோன்றிய காலம் முதல் நாளது வரை, அவ்வப்போது, அவ்வத் தேசங்களில் அரசாண்ட மன்னர்கள், ராஜ தந்திரிகள், மந்திரிகள் முதலியோர்களைப் பற்றியும், அவ்வக் காலங்களில் பொறாமை காரணமாகவும் மற்றும் பற்பல காரணங்களை முன்னிட்டும் நடைபெற்ற மகாயுத்தங்கள், சிறு சண்டைகள், குட்டிக் கலகங்கள் முதலிய சம்பவங்களைப் பற்றியும் நாம் புத்தகங்கள் வாயிலாகவும் பண்டைய ஏடுகள் வாயிலாகவும் அறிந்திருக்கிறோம். அக் காலந் தொட்டு இக் காலம் வரையில் ஜன சமுதாயத்தின் போக்கை ஆராயுங் காலத்து, "முதலாளித்வம்" என்னும் நாகரீகம் தற்காலத்தில் புதிதாக ஏற்பட்டதல்லவென்றே தெரிகிறது. இம் "முதலாளித்வம்" என்பது முற்காலத்தில் இப்போதையவிட மிகக் கடுமையா யிருந்தது என்றே கூறவேண்டும். இது ஒரு உடன்பிறப்பைப்போல் மனித சமூகத்தை அக் காலத்திலும் பாழ்படுத்தி வந்தது. இக் காலத்திலும் பாழ்படுத்தி வருகின்றது. இன்னும் எதிர்காலத்திலும் இப்பீடை ஒழியும் எனக் கூறுவதற்கும் வழியில்லை. "முதலாளித்வம்" என்னும் கொடிய பிளேக் வியாதி பண்டைக் காலத்திய அழகிய நகரங்களையும், தகர்க்கவொண்ணாத கோட்டைகளையும், அக் கோட்டைகளில் வதிந்த முடி சூடிய மன்னர்களையும் அவர்தம் ராணுவ வீரர்களையும் நிர்மூலம் செய்தது. இக் காலத்தும் எண்ணரிய போராட்டங்களுக்கும், இரத்தக் களரிகளுக்கும் காரணமாயிருந்து எங்கும் அதிருப்தியையும் கிளர்ச்சிகளையும் எழுப்பி, உலகில் எங்கும் சலனத்தையே பரப்பிவருகின்றது.

* * * * *

பண்டைக் காலத்தில் எகிப்து நாட்டில் பாரோ என்னும் அரசன் அந் நாட்டை அரசாண்டுவந்த காலத்தில் ஒருவகையான "நாகரீகம்" உற்பத்தியாயிற்று. அக் காலத்திலும் எண்ணரிய ஏழை மக்கள் கேவலம் அடிமைகள்போல் உழைக்க ஒரு சில பணக்காரர்கள் ராஜ போகம் அனுபவித்து வந்தனர்.

இந்த அநீதியைக் கண்டு ஆற்றாத மோசஸ் என்னும் ஓர் மனிதன் ஏழைகள்மீது அனுதாபமும் இரக்கமுங் கொண்டு, பாரோ மன்னரின் கொடுங்கோன்மைக்கு விரோதமாக ஏழைகளின் தெய்வமாக விளங்கினான். இவ்வேழை மக்களிற் பெரும்பான்மையோர் ஹீப்ரு ஜாதியார்களாவர். இக் காலத்தில் கிறிஸ்தவர்களும் முகம்மதியர்களும் தேவதூதனென யாரைப் புகழ்ந்து கொண்டாடுகிறார்கள்? ஏழைகளின் தர்ம தாதாவாகிய மோஸஸ் தான் கொண்டாடப்படுகிறார்.

---

விதவையின் கண்ணீர் இந்திய ஜன சமூகத்தை வாளென அறுக்கிறது.

எகிப்து நாட்டை அரசாண்ட பாரோ மன்னரை யார் விரும்புகிறார்கள்? ஒருவருமில்லை. கிறிஸ்தவ வேதப் புஸ்தகத்தில் பின்வருமாறு கூறப்படுகிறது:—

“மோஸஸ், தான் பாரோவின் பேரன் (அதாவது குமாரியின் குமாரன்) என்று ஒருவரும் தன்னை அழைக்கக் கூடாதென்றான். சொற்ப காலத்துக்குப் பாவத்தின் பயனாகிய பொய்மையான இன்பங்களைத் துய்ப்பதினும், ஆண்டவனின் புத்திரர்களாகிய ஏழைகளை நேசித்து, அவர்களுடன் தானும் துன்பம் அனுபவிப்பதே மேலானது எனத் தீர்மானித்தான். அரசனின் கோபாக்கினிக்கும் அஞ்சாமல் எகிப்து நாட்டை விட்டு வெளியேறினான். ஏனெனில் இவ்வூனக் கண்களால் காணமுடியாத ஒருவனை அவன் உள்ளம் நாடியது.”

* * * * *

மேற்கூறியதைவிடப் பிற்காலத்திய திருஷ்டாந்தமொன்றை இங்கு எடுத்துக்கொள்ளுவோம். ரோமர்களின் ஏகாதிபத்தியம் இறுதியில் வீழ்ந்ததற்குக் காரணம் ஏழைகளை அவர்கள் புறக்கணித்ததேயாகும். எகிப்தியரைப் போன்றும் பாபிலோனியர்களைப் போன்றும் ரோமர்கள் கோடிக் கணக்கான அடிமைகளின் இரத்தத்தையே உண்டு களித்து வந்தனர். பிரபுக்களெனக் கூறப்படும் ஒரு சிலர் சலவைக் கற்கள் பதித்த ஸ்நான அறைகளிலும், ஆஸ்தான மண்டபங்களிலும், உப்பரிகைகளிலும் அடிமைகள் குற்றேவல் புரிய ராஜ போகங்களை அனுபவித்தனர். ஆனால் ஏழை மக்களுக்கு ரொட்டித் துண்டுகளும் ஒரு சில பொது உல்லாசக் காக்ஷிகளுமே உண்டு. புராதன ரோமாபுரியில் பிரபுக்கள் தங்கள் செல்வச் செருக்கை ஆடம்பரமான வாழ்க்கையால் ஏழை மக்கள் மனம் புண்படும்படி துன்புறுத்தியும் வந்தனர்.

அதுசமயம் அநேக நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள யூதேயா நாட்டில் இயேசு பெருமான் அவதாரம் செய்தார். காலிலி கடலோரமாயுள்ள ரோம நகரங்களில் வலிமையுள்ள ஒரு சாரார் வலிமையற்ற மற்றொரு சாராரை அடிமைகளாக்கி அலக்கழிவு செய்ததைக் கண்டு இயேசு பெருமான் அந் நகரங்களைச் சபித்தார். தங்கமும், கற்களும் மின்னும் கனக மாளிகைகள் நிறைந்த அழகிய பட்டணங்களை இயேசு பெருமான் கண்ணெடுத்தும் பாராமல் ஏழை மக்கள்மீது அன்பொழுக உபதேசித்த திருமொழிகள் இங்கு குறிப்பிடத் தக்கவை:—

“நாள் முழுதும் வருந்தி உழைத்துவரும் சகோதரர்களே! இங்கு வருக! நான் உங்கள் சிரமத்தைப் பரிகரிக்கிறேன்”

---

பத்திரிகை கடவுட் டன்மையுள்ளது. சிறந்த அருள் தொண்டு தாங்கியது.



இயேசு பெருமானின் உபதேசம் ஆத்மார்த்த ஆனந்தமாகும். கடவுளுக்குச் சேவை செய்யுங்கள். செல்வத்தை இச்சிக்காதீர்கள் என்றே அவர் உபதேசித்திருக்கிறார்.

கிறிஸ்து பெருமானின் சுவிசேஷம் பரவப் பரவ ரோமர்களின் ஏகாதிபத்தியமும் செல்வச் செருக்கும் படிப்படியாகத் தகர்ந்து இறுதியில் இருந்த இடந் தெரியாமல் மறைந்துவிட்டன. பெரிய சக்கிரவர்த்தியின் பெயர்களெல்லாம் மங்கிவிட்டன. ஆனால் நாஸரத்தில் அவதரித்த ஏழைக் குடியானவராகிய இயேசு கிறிஸ்து பெருமானின் பெயரோ அஷ்ட திக்குகளிலும் பரவியது. இன்னும் பரவிவருகிறது.

* * * * *

ரோமர்களின் ஏகாதிபத்தியம் வீழ்ந்தபின் சில நூற்றாண்டுகளுக்குப்பின் வந்த பைஸன்டைன் ஏகாதிபத்தியத்தைக் கவனிப்போம். இவ்வேகாதிபத்தியத்தின் தலைநகரம் கான்ஸ்டான்டிநோபிள் என்னும் பெரிய பட்டணமாகும். அடுத்த படியாக சிறப்புற்று விளங்கிய துறைமுகப் பட்டினங்கள் அலக்ஸாந்திரியாவும், ஆன்டியாக்கும். இந் நகரங்களின் ஒருபால் மாடமாளிகைகளும், நந்தவனங்களும், நானாவிதக் கற்கள் பதித்த மணிமண்டபங்களும் பொலிவுற்று விளங்கின. ஆனால் இந் நகரங்களின் மற்றோர் பாகத்தில் அடிமைகள் அரைவயிற்று உணவுக்கும் ஆலாய்ப் பறந்துகொண்டிருந்தார்கள்.

இதுசமயம் அரேபியா நாட்டின் நிலைமை என்னவென்று நோக்குவோம். அரேபியா நாடு பாலைவனம் நிறைந்த நாடு. அங்குள்ள மக்கள் சுயேச்சையாய் வாழ்ந்தனர் எனினும் தரித்திரம் என்னும் பீடை அவர்களை விடாது பற்றிக்கொண்டிருந்தது. ஆடம்பரமற்ற இந் நாட்டில் நபிகள் நாயகம் (ஸல்) அவதாரஞ் செய்தார். அராபியர்கள் பிற்காலத்தில் ஸிரியாவையும் எகிப்தையும் கைப்பற்றினார்கள். எத்தனை ஆயிரம் சதுர மைல்கள் கொண்ட நாடுகளைக் கைப்பற்றினாலும் அராபியர்கள் ஆடம்பரமான வாழ்க்கையில் ஈடுபடவில்லை. துன்பங்களைப் பொறுமையுடன் சகிக்கும் மனோவன்மை அவர்களிடம் பூரணமாயிருந்தது. ' நாளடைவில் முஸ்லிம் சகோதரத்வம் எங்கும் பரவியது. முகம்மது நபிகளின் ஜீவிய சரிதையில் ஒரு முக்கியமான சம்பவத்தை இங்கு நாம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. முகம்மது நபிகள் தமது இணை பிரியாத அபூபக்கர் அவர்களோடு ஒரு குகையில் இருந்தார் “எதார்த்தவாதி வெகுஜன விரோதி” என்பதற்கேற்ப சத்தியத் திரு நபிகளின் உபதேசங்கள் அக் காலத்திய பாமரர்களுக்குக் கோபத்தை மூட்டின. உலகில் இனி எவரும் தங்களுக்கு உதவிசெய்ய மாட்டார்கள் என்று இருவரும் கருதினர்.

---

பெண்களை நீத்தல் மட்டும் துறவல்ல.

அதுசமயம் அபூபக்கர் அவர்கள் திரு நபிகளை நோக்கி, "நாம் இருவரும் இவ் வுலகில் தனித்தோம்" என்றார்.

உடனே திரு நபிகள் "இல்லை! நம்மிருவர் நீங்கலாக நமக்குத் துணையாய் ஆண்டவன் ஒருவர் இருக்கிறார்" என்றார்.

இதனால் அறியக் கிடப்பதென்ன? மானிடனாகப் பிறந்த ஒவ்வொருவனும் கேவலம் இவ் வுலகப் பொருட் பெருக்கினால் சர்வ வல்லமையுள்ளவனாகிவிடமாட்டான். ஆனால் இறைவனை அடைய அவன் இயற்றும் தொண்டுகளே அவனுக்குச் சகல சக்தியையும் அளிக்கும் என்பதே.

* * * * *

கேவலம் நாயைப் போன்று வாழாமலிருப்பதற்குத் தற்கால நாகரீக வசதிகளெல்லாம் மிகவும் அவசியம் என்று யார் கருதுகிறார்களோ அவர்களுக்கு ஆத்மார்த்த விடுதலையில் அதிசய சக்தி ஒருக்காலும் தெரியாது. ஆத்ம விடுதலை யடைந்தவர்கள் எத்தகைய இன்பம் துய்க்கிறார்கள் என்பதை அவர்கள் ஒருக்காலும் தெரிந்து கொள்ள முடியாது. வெளித் தோற்றத்தில் காணப்படும் சௌகரியங்களையும் வசதிகளையும் கண்டு சாதாரண மனிதன் சந்தோஷிக்கிறான். அதுவே பரமானந்தம் என்று எண்ணுகிறான். அத்தகையவனுக்கு அரச வாழ்க்கையைத் துறந்து மகா போதி மரத்தடியிலிருந்து உண்மை ஞானம் பெற்ற புத்தபெருமானின் ஆத்ம வெற்றியும், குகையினுள்ளிருந்து ஞானோதயம் பெற்ற முகமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வெற்றியின் தன்மையும் எவ்வாறு தெரியும்?

மேற்கூறிய பெரியார்களிடத்து விலை மதிக்க வொண்ணா ஆத்ம வன்மையும், பிறர் மனத்தில் ஓர் ஆர்வத்தை எழுப்பும் அபூர்வ சக்தியும் வாய்க்கப்பெற்றிருந்தது. மகாத்மா காந்தி மேற்கூறிய அபூர்வ சக்தியின் உண்மையை நாம் கண்டும் கேட்டுமிராத அபூர்வ முறையில் நமக்கு ஞாபகமூட்டுகிறார். அவரது ஞான மொழிகளெல்லாம் கிறிஸ்து பெருமானின் அருண் மொழிகள் போன்று "நீ பகவானுக்கும் பணம் என்னும் தெய்வத்திற்கும் தொண்டு புரிய இயலாது" என்று ஒலிக்கின்றது.

"கடவுள் நம்மிடையே இருக்கிறார்" "கடவுளின் ராஜ்யத்தையே முதலாவதாகத் தேடு." இத்தகைய உண்மை உரைகளையே புதிது

கொடிது கொடிது ஆசை கொடிது. ஓர் பொருளின் பேரில் ஆசை வைக்க ஆரம்பித்தால் அது நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் உறுஞ்சித் தள்ளிவிடும்.



புதிதாகத் தோன்றும் மதங்கள் மனித சமூகத்திற்கு மீண்டும் மீண்டும் போதிக்கின்றன.

இத்தகைய அற வாக்கியங்களிலீடுபட்டு பற்றற்று நின்றாரைப் 'பித்துப் பிடித்தவன்' என்று கூறப்பட்டு வருகிறது. உலகத்தின் மாயை சம்பந்தப்பட்ட சௌகரியங்களையும் இன்பங்களையும் விரும்புபவர்களுக்கு மேற்கூறிய பெரியார் மூடர்கள் போன்றே தோன்றுவர். அவர்களை மூடர் என்று கருதும் மூட மனிதன், தான் மண்ணோடு மண்ணாய்ப் போவதை அறியான். தான் இன்பம் சுகம் என்று கருதுபவை யெல்லாம் பொய்த் தோற்றம் என்பதை உணரான். ஞானிகளைப்பற்றியும் விருப்பு வெறுப்பு அற்றவர்களைப் பற்றியும் 'கடவுளிடத்து அவர்கள் நம்பிக்கை கொண்டார்கள்' 'அவர்களின் ஆத்ம வன்மை கடவுளிடத்தே கொண்டது' 'காணக்கூடாத பரம்பொருளைக் கண்டனர்' என்று எழுதப்பட்டிருக்கிறது.

இவ்விதம் கடவுளிடத்துள்ள நம்பிக்கையை மகாத்மா காந்தி வாய்ச் சொல்லால் மட்டுமின்றி செய்கைகளினாலும் மனிதர்களுக்கு எடுத்துக் காட்டுகின்றார். இந்தியா அவரது நம்பிக்கையை நன்கு உணர்ந்து கொண்டது.

ஆகவே பெரியார் மோசஸ், முகமது நபிகள் நாயகம் (ஸல்), புத்தர், கிறிஸ்து இவர்கள் போன்றவர்களை பித்தன் என்று கூறுவதற்கு முன்னால் சிறிது சிந்தனை செய்வோமாக. தேச சரித்திரங்களிலே மேற்கூறிய பெரியார்களது 'பைத்தியம்' உண்மைத் தத்துவம் என்று கூறப்பட்டிருப்பதை மறந்துவிட வேண்டாம்.

ஏழை மக்களைத் துன்புறுத்தியும் வற்புறுத்தியும் புதிதான ஒரு நாகரீகத்தை முற்காலத்தில் ரோம் நகரத்தார் உண்டாக்கியது போன்று நாம் செய்ய முயற்சிப்போமாயின், ரோம் நகரத்திற்கு அடைந்த துர்க்கதியை நாமே தேடிக்கொள்பவராவோம் என்று மேல் நாட்டாரும், கீழ் நாட்டாரும் கூறுகின்றனர். இயற்கைக்கு விரோதமானதும் பரிசுத்தமற்றதுமான நாகரீக அநாசாரத்திலிருந்து விடுபட்டு உண்மையையும் மெய் ஞானத்தையும் போதித்த நம் மூதாதையர்களைப் பின்பற்ற வேண்டும். முகமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களது பக்தர்களும் சென்ற வழியைப் பின்பற்றுவோமாக. நாஸரத்தில் தோன்றி யருளிய கிறிஸ்து பெருமான் தனது சீடர்களுக்கு உபதேசித்த 'கடவுளிடத்தும் ஆன்மாக்களிடத்தும் 'அன்பு' என்ற ஞான மொழிகளைப் பின்பற்றுவோமாக.

பணமே பத்திரிகை நடத்துவோரின் நோக்கமாகிவிட்டது. இதற்காக எவ்வாறு பத்திரிகையின் சிறந்த நோக்கம் விற்கப்படுகிறதென்பதை எண்ணினால் மனம் புண்ணாகிறது.

பழங்கால இந்திய மகரிஷிகள் ஆன்மா விடுதலை யடைவதற்குரிய உண்மைத் தத்துவங்களை வெளிப்படுத்திய ஆசிரமத்திற்குச் சென்று அவற்றைக் கற்றுக்கொள்வோமாக. புத்த சந்நியாசிகள் வசித்த மடங்களுக்குச் சென்று தீமை செய்தோருக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அறிவுரையையும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல ஜீவராசிகளிடத்தும் அன்புடனிருக்க வேண்டுமென்ற ஞானத்தையும் கற்றுக்கொள்வோமாக.

* * * * *

மனித சமுதாயத்தின் போக்கை ஆராய்ந்து வரும் ஆராய்ச்சியாளர் முற்கால சரித்திரத்தின் வாயிலாக எதிர்காலத்தை நிர்ணயிக்கப் பிரயத்தனப்படுகின்றனர். எனினும் பண்டைய நாகரீகமும் பண்டைய ஏகாதிபத்தியமும் மேற் பார்வைக்கு எவ்வளவோ பகட்டாக இருப்பினும், அவற்றை அவர்கள் புறக்கணித்து வருகின்றனர். சமீபத்தில் நடைபெற்ற மகாயுத்தங்களிலிருந்து ஏழை மக்களைப் பணத்திமிர் படைத்த செல்வந்தர்கள் எவ்வாறு சித்திரவதை செய்தார்கள்; இன்னும் செய்து வருகிறார்கள் என்பதுவும், வலிமை படைத்த ஒரு சிலர் வலிமையற்ற கோடிக் கணக்கான மக்களை எவ்வாறு அடிமைபடுத்தி யிருக்கிறார்கள் என்பதுவும் வெள்ளிடைமலை போல் நமக்கு விளங்குகின்றன. வர வர உலக நாகரீகம் மென்மேலும் ஆடம்பரத்திலேயே ஆழ்ந்துகொண் டிருக்கிறது. இயற்கை அழகு இல்லை யென்றாயது. சத்தியம் உண்மை நேர்மை என்பவை இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளித்துக்கொண்டன.

தற்கால நாகரீகத்தைப் பற்றி இன்னும் சற்றே ஆராய்ந்து பார்த்தால் எல்லாம் கொடுமை என்னும் பதத்தில் அடங்கும். ஒரு ஜாதியாரை மற்றொரு ஜாதியார் அடிமைப்படுத்திக் கொள்ளையடிக்கும் கொடுமைதான் நாகரீகம் போலும். ஒரு தனிப்பட்ட மனிதனை ஆட்டி வைப்பதுதான் நாகரீகமோ? இயற்கையோடிசைந்த ஆடம்பரமற்ற வாழ்க்கையை விடுத்துத் தேவைக்கு ஆயிரம் மடங்கு அதிகமான சுகபோகங்களை ஒரு சாரார் மட்டும் அனுபவித்துக்கொண்டு பெரும்பான்மையோரான ஏழைகளின் வாயிலும் வயிற்றிலும் தெள்ளிய மண்ணை அள்ளிக் கொட்டுவதுதான் நாகரீகமோ? இத்தகைய கொடுமையையும் அநீதியையும் "நாகரீகம்" என்று கருதும் தற்கால மேதாவிகளின் போக்கை என்னென்பது?

(தொடரும்.)

---

அந்தோ! சிறந்த நோக்கமுள்ள பத்திரிகை தற்போது தெருத் திண்ணை வம்பிற்கும், மக்கள் மனதை மாறுபடுத்தும் பிதற்றல்களுக்கும், தற்புகழ்ச்சிக்கும், வீண் தூற்றல்களுக்கும், தூய்மையற்ற மொழிகளுக்கும் நிலையமாய் விட்டது!

# செஞ்சிக் கோட்டை.

திரு. O. P. தேசிகன் அவர்கள்.

தென்னிந்திய சரித்திரத்தில் பண்டைப் பெருமையால் சிறப்புற்று, சமீப காலம் வரையினும் "பெற்றோடி மகளிரும் மைந்தரும் செறிந்து நெற்பொலிநெடு நகராய்" விளங்கிய செஞ்சிமாநகர்க் கோட்டையும் அதன் சுற்றுப் புறங்களும் இதுபோழ்து பாழடைந்து பார்ப்பதற்கு எவ்வளவு துக்ககரமான காட்சியை விளைவிக்கின்றன! எத்தனை சிற்றரசுகளுடையவும், பேரரசுகளுடையவும் ஏற்றத்தையும் தாழ்ச்சியையும்—எழுச்சியையும் வீழ்ச்சியையும்—அது கண்ணுற்றிருக்கிறது! எத்தனை செங்கோல்கள் அதனை யடைந்து, முறிந்து, ஒழிந்து இருக்கின்றன! இதனிடையில் அரசாட்சிச் சக்கரம் உருண்டு உருண்டு எத்தனை முறை கைம்மாறிச் சென்றிருக்கிறது! இரண்டு நூற்றாண்டுகளுக் கதிகமாக தக்காணத்து முகம்மதிய அரசர்களின் போக்கைத் தடைப்படுத்தி, தென்னாட்டில் அவர்களது ஆதிக்கம் மேலோங்க வொட்டாதவாறு தீவிரமாக அரண் செய்து வந்த மகத்தான விஜயநகர ஸாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகள் பலர் ஒருவர் பின் ஒருவராக வீற்றிருந்து அரசியற்றிய அதன் மகத்தான கீர்த்தி என்னவாயிற்று? 'போரில் காலனுமஞ்சக் கலக்கும் மராட்டர்' என்று தமிழ் நாட்டின் கவியரசரால் சிறப்பிக்கும் பேறுபெற்ற மஹாராஷ்டிரர்களின் வெற்றிக் கொடியானது பாரதநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் உன்னதமாகப் பறந்துக்கொண்டிருந்த நாட்களில் சிறிது காலம் அவ்வரசாங்கத்தின் தலைநகராகத் தலைநிமிர்ந்து நிற்கும் பாக்கியம் செஞ்சிக்குக் கிட்டியபோது, அதன் இறைமாட்சி இருந்தவாறென்ன? உலகப் பேரரசுகளில் ஒன்றாக இலங்கிய ஸாக்ஷாத் அந்த முகலாய சர்க்காரின் ஏழாண்டிற்கும் மேற்பட்ட நீண்ட முற்றுகையை யெதிர்த்து நின்றகாலையில், அதனுடைய கோட்டையரண்களின் முஸ்தீப்புகளும் செல்வ மேம்பாடும் அதனை யாண்டு வரும் பாக்கியம் பெற்றவர்களின் கலங்காத நெஞ்சுறுதியும் எவ்வளவு வியக்கத்தக்கதாக இருந்திருக்க வேண்டும்!

---

நாட்டுக் கல்வியை வளர்க்கவேண்டும்.

தனது ஒப்புயர்வற்ற ஆண்மையாலும் பேராற்றலாலும் மக்களின் அளவு கடந்த புகழ்ச்சிக்கும் பாராட்டுதலுக்கும் ஒருங்கே உரியவனாய், இன்றளவும் நாடோடிப் பாடல்களின் வாயிலாக ஸாஹஸம், அன்பு, பராக்கிரமம், வீரம் முதலிய அருங் குணங்களின் உருவமாக நமது அகக் கண்முன்னே காட்சியளிக்கும் அந்தத் தீர புருஷ ஸிம்ஹமாம் தேசிங்கு ராஜனின் வீரப்பிரதாபங்களைப் பற்றி நினைக்குந்தோறும் பரவசமடையாதார் யார்? உண்மையில் ராஜா, தேசிங்கினுடைய வீர வாழ்க்கையும், துணிச்சல் மிகுந்த அவனது அரிய செய்கைகளைப் பற்றிய நினைவும் இன்றைக்கும் மக்களின் ஞாபகத்திலிருந்து அகலவில்லை. தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் அவனுடைய திருப்பெயரானது எவ்வளவு பெருமையோடும், மகிழ்ச்சியோடும் போற்றப்படுகிறது! கடுங் கோடையிலும் மாரியின் குளிரிலும் கிராமாந்தரங்களில் பெரிய ஆலமரத்து நிழலில் ஒதுங்கியிருக்கும் வழிப்போக்கர்களையும், கிராமவாசிகளையும் நாடோடிப் பிச்சைக்காரனானவன் தேசிங்குராஜனைப் பற்றியும், அவனது அற்புத ஸாஹஸச் செயல்களைப் பற்றியும்—அவன் சண்டையிட்டதையும், சமரில் வீழ்ந்து பட்டதையும்—குறித்து எவ்வளவு உருக்கமாகத் தனது பாடல்களால் பாடி மகிழ்விக்கிறான்!

ஆனால் இதுகாலை நாம் செஞ்சியில் காண்பதென்ன? எப்புறம் நோக்கினும் நமது பரிதாபத்தைக் கிளப்பி துக்கத்திலாழ்த்தும் காட்சிகளே நமது கண்களுக்குப் புலனாகின்றன. வெற்றியின் பூரிப்பினால் இறுமாப்படைந்து நிதானம் தவறிய முகம்மதியர்களின் கணக்கற்ற அட்டூழியச் செயல்களை—கோரகிருத்யங்களை—இவ்விடத்திலுள்ள ஒவ்வொரு பூர்வீக சின்னமும்—ஒவ்வொரு சிறிய அடையாளமும்—கதையாக உரைப்பது போல் தோன்றுகிறது.

தென்னாற்காடு ஜில்லாவின் வடமேற்கு மூலையில், திருவண்ணாமலைக்கும் திண்டிவனத்திற்கும் சற்றேறக்குறைய நடு மத்தியில் முக்கோண வடிவான மூன்று குன்றுகளை வளைத்துக் கட்டப்பட்டிருக்கும் செஞ்சிக் கோட்டையானது இயற்கை வனப்புகளுக்கிடையே கம்பீரமான காட்சியை யளிக்கிறது. சற்றேறக்குறைய ஏழு மைல் விஸ்தீர்ணமுள்ள இப் பிரதேசத்தைச் சுற்றிலும் எழுப்பப்பட்டிருக்கும் பிரம்மாண்டமான மதிற் சுவர்கள் சுமார் 60 அடி கனமுள்ளவைகளாக யிருக்கின்றன. கோட்டை யரணைச் சூழ்ந்து அதனை யடுத்தாப்போல் 80 அடிக்கு மேல் அகலமுள்ள அகழியொன்று வளைந்து செல்கிறது.

---

நமது தாய்நாடே கோயில். அதன் உச்சியில் பகவான். கீழே ஒரு குலமான மக்கள் வணக்கம் செலுத்துதல்.



மதிற் சுவர்கள் அதிர்ஷ்டவசமாக இன்னும் நல்ல நிலைமையிலேயே யுள்ளன. அவைகள் உறுதியான கருங் கற்பாறைகளால் கட்டப்பட்டவை. இவ்வாறு வளைத்துக் கட்டப்பட்ட பிரதேசத்திற்கு மலை அடிவாரக் கோட்டை யென்றும், கீழ்க் கோட்டை யென்றும் முற்காலத்தில் பெயர் வழங்கியது. மூன்று குன்றுகளும் இயற்கையிலேயே மூன்று கோட்டைகளுக்கேற்ற மலை யரண்களாக அமைந்திருப்பது பற்றி அவற்றின் மீது மூன்று கோட்டைகள் கட்டப்பட்டிருக்கின்றன போலும். இவற்றில் மேற்கேயுள்ள ராஜகிரி கோட்டையே மற்றவைகளினும் உறுதியும் பலமும் சரித்திர விசேஷமும் பொருந்தியது. எளிதிலே தகர்க்க முடியாதது. அது 800 அடி உயரத்திற்கு மேலிருக்கிறது. அதனுடைய மத்திய பாகத்தில் குன்றானது திடீரென்று அதனுடைய வடக்கு திக்கை நோக்கி ஒரேயடியாகச் செங்குத்தாகக் கிளம்பி யிருப்பதால், அதன் உச்சியை யடைவது மிகவும் சிரமமான காரியம். மிகவும் ஆழமானதோர் நீரோடையைத் தவிர அதை யடைவதற்கு வேறு வழியே கிடையாது. பத்து கஜமே அகலமுள்ள இந் நீரோடையைப் பண்டைக் காலத்தில் செஞ்சிக் கோட்டையைக் காவல் புரிந்து வந்தவர்கள் பின்னும் அதிக ஆழமாக வெட்டுவித்து, பகைவர்கள் உச்சியை யணுகாவண்ணம் திறமையாகப் பந்தோபஸ்து செய்து வந்தார்கள். அப்போதைக்கப்போது அவ் வோடையின் மீது ஓர் மரப் பாலத்தை யுபயோகித்து, உச்சிக்கோட்டைக்கு ஏறுவது வழக்கம். இக் கோட்டையைச் சுற்றி யெழுப்பியிருக்கும் மதிற் சுவற்றில் பீரங்கித் துவாரங்கள் பல அமைக்கப்பட்டிருக்கின்றன. பகைவர்கள் இக் கோட்டையை யணுகி அதன் மீதேறுவதாவது முற்றிலும் இயலாத காரியம். பிரசித்தி பெற்ற சரித்திராசிரியரான ஆர்ம் (Orme) என்பவர் செஞ்சிக் கோட்டையின் இந்தப் பகுதியைக் குறித்து எழுதுங்கால், துணிவுள்ள 10 வீரர்கள் மட்டுமே இந்த இடத்திலிருந்து பதினாயிரக் கணக்கான வீரர்களை அச்சமின்றி எதிர்த்து நின்று, சமாளிக்க முடியும் என்று அதனுடைய மேன்மையைப் புகழ்ந்து கூறியிருக்கிறார். இவ்வாறு அவரால் எழுதப்பட்டிருக்கும் புகழ்ச்சி யுரைகள் மிகைபடக் கூறிய வார்த்தைகளன்று. உண்மையில் ராஜகிரிக் கோட்

---

மண், பெண், பொன் இம் மூன்று பூதங்களுக்கு இணையானவை உலகில் வேறொன்றுமில்லை. இவற்றின் பேரில் சிறிது ஆசை வைக்கத் தொடங்கிவிட்டால் வேறெதன் பேரிலும் நமது நாட்டம் செல்லாமல் தடுத்துவிடும். வெட்கமென்பதை யறியாத ஆசை தட்டிவிடும். சன்மார்க்க நெறியினின்று தள்ளிவிடும். அறம், பொருள், இன்பம், வீடு அனைத்தும் இதுவே என்று நாம் அலைய வேண்டியதே.

டையைச் சுற்றி மிகவும் பலமான சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அச் சுவர்களில் ஆங்காங்கு பீரங்கிகள் மட்டும் நுழைவதற்கான துவாரங்களை அமைத்தும் முக்கியமான இடங்களிலும் பந்தோபஸ்துக் குறைவான மூலைமுடுக்கிலும் கோட்டை வாயில்களைக் கட்டுவித்தும், ஒவ்வொரு செங்குத்தான இடத்திலும் காவல் விடுதிகளை யேற்படுத்தியும் இப் பிரதேசம் முழுவதையும் வரிசை வரிசையாக ஒன்றன்பின் னொன்றாக அரண் செய்திருக்கும் காட்சியானது ஒருங்கே வியப்பையும், பிரமிப்பையும் ஊட்டுகிறது.

வடபுறத்திலுள்ள குன்றுக்குக் **கிருஷ்ணகிரி** யென்று பெயர். ராஜகிரிக் கடுத்தபடியாக அதுவே முக்கியம் வாய்ந்ததாகும். அதுவும் மிகவும் உறுதியாகவும், பலமாகவும் அரண் செய்யப்பட்டிருக்கிறது. அதன் உச்சியிலுள்ள பிரம்மாண்டமான நெற் களஞ்சியங்களும், விசாலமான கூடங்களும் அதனுடைய உபயோகத்தையும், அழகையும் அதிகரிக்கச் செய்கின்றன. இவ்விரண்டு கோட்டைகளுக்கும் செல்வதற்கு சௌகரியமாக இருக்கும்பொருட்டு குன்றின் பாறைகளிலேயே குடைந்து படிக்கட்டுகள் மிகவும் சாமர்த்தியமாகவும் ஆழமாகவும் வெட்டப்பட்டிருக்கின்றன. ராஜகிரியை யடுத்தாப்போல் **சக்கிலி துர்க்க** மென்றும் **சந்திராயன் துர்க்க** மென்றும் பெயர் வாய்ந்த இரண்டு சிறு குன்றுகள் இருக்கின்றன. அவைகள் அவ்வளவு சரித்திரப் பிரசித்தமானவைகளன்று; எனினும் இவைகளும் முற்கூறிய கோட்டை யரண்களின் தொடர்ச்சியாகவே ஓரளவு பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்கின்றன.

கீழ்க் கோட்டையில் வெங்கடராமமூர்த்தியும் **ஸ்ரீ** பட்டாபிராமனும் கோயில்கொண்டிருந்த இரண்டு ஆலயங்கள் இருக்கின்றன. புதுச்சேரியிலிருந்து பிரெஞ்சுக்காரர்கள் செஞ்சியின் மீது படையெடுத்து அதனை யழித்துப் பாழ்ப்படுத்துவதற்கு முன் இக் கோயில்களை அற்புதமான வேலைப்பாடுகள் வாய்ந்த கருங் கற் றூண்களும், மிகவும் நேர்த்தியான சிற்பவடிவங்களும் அழகு செய்தனவாம். இப்பொழுது புதுச்சேரியில் **டியூப்ளேயின்** சிலையைச் சுற்றிலும் நாட்டியிருக்கும் ஐந்து பெரிய கற் றூண்களும் செஞ்சியிலிருந்தே ஆங்கு கொண்டுவரப்பட்டன. இப்போது இந்த ஸ்தலம் செடியுங் கொடியும் புதர்களும் படர்ந்திருக்கிறது. அன்றியும் மிக மிகப் பெரியதான இரண்டு தானியக் களஞ்சியங்களும் இவ்விடத்திலுள்ளன. ஆங்கு ஓர் சிறிய சப்தம் செய்தாலும் அது பலத்த சப்தத்துடன் பிரதித்வனி செய்கிறது. மிகவும் உன்னதமாகக்

சுருட்டு, சாராயம், பொடி முதலிய தீதின் தூதரையும், பத்திரிகைகள் விளம்பரம் செய்கின்றன வெனின் இதைவிடக் கேடு பிரிதும் உண்டோ?



காட்சி யளிக்கும் **கல்யாண மஹால்** என்னும் செங்கற் கட்டடமானது காண்போரின் கருத்தையும் கவனத்தையும் ஒருங்கே ஈர்க்க வல்லது. நீண்ட சதுர வடிவில் ஓர் விசாலமான முற்றமும், அதனைச் சுற்றி நான்கு புறங்களிலும் சிறு சிறு விடுதிகளாகத் தடுக்கப் கட்டிருந்த இம் மஹாலையே பிற்காலத்திய செஞ்சிக் காவலர்கள் தமது வாசஸ்தானமாக யேற்படுத்திக்கொண் டிருந்தார்கள். இதன் ஓர் புறத்தில்—அதாவது இதன் மத்தியில் எட்டு நிலையுள்ள கோபுரம் போன்றதோர் மாளிகை யெழுப்பப்பட்டிருக்கிறது. இதற்கு **ராணியின் உத்யான** மென்று பெயர். அதன் ஒவ்வொரு அடுக்கிலும் ஓர் சிறிய அறையைச் சுற்றி விராந்தாவும், இம் மாதிரியாகவே கடைசி மாடிவரையில் ஒரே மாதிரியான கட்டட அமைப்பைத் தழுவியதாக விருக்கும்படி அதைக் கட்டி முடித்திருக்கிறார்கள்.

ராணியின் உத்யானத்தை யலங்கரித்த அந்தப்புர ஸ்திரீகளின் உபயோகத்திற்காகக் குழாய்களின் மூலமாக ஜல வசதிகள் செய்யப்பட்டிருந்தன வென்பதை நோக்கும்போது, நமக்கு ஆச்சரியம் மேலிடுகிறது. ஒரு பர்லாங்குக் கப்பாலுள்ள குளத்து நீரை மண் குழாய்களின் வழியாக இந்த மாளிகையின் ஆறாவது மாடியி லிருப்பவர்கள் உபயோகித்து வருவதற்கேற்ற ஏற்பாடுகளை யற்புதமாகச் செய்து முடித்திருக்கும் நேர்த்தியைக் கருதுகையில், அக் காலத்திய எஞ்ஜினீர்களின் மதியூகமும், நிர்மாணத் திறனும் எவ்வளவு அபாரமானதாக யிருக்கவேண்டு மென்று நமக்கு விளங்கும். பெரிதும் பின்னமடைந்திருக்கும் அக் குழாய்களின் எஞ்சிய பாகங்களை இப்பொழுதும் காணலாகும். தவிரவும் மிகவும் ஆழமான கிணறு ஒன்றும் இங்கே யிருக்கிறது. அதில்தான் முற்காலத்தில் செஞ்சித் தலைவர்களின் பொக்கிஷங்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தனவாம்! அன்றியும் பெரிய பெரிய குதிரை லாயங்களும், யானைக் கூடங்களும், ஆயுதச்சாலைகளும், வெடிமருந்துச்சாலையும், ஒரு காலத்தில் ராஜகிரியின் உச்சியிலிருந்து நூற்றுக் கணக்கான உயிர்களுக்குச் சேதத்தை விளைவித்த பீரங்கி யொன்றும் அவசியம் பார்க்கத் தகுந்தவைகளேயாம். அரசனின் ஸ்நாந கட்டிடத்தில் உபயோகித்த ஸ்நாநக் கல்லும் இவ்விடத்திலுள்ள அதிசயங்களி லொன்றும். அது 15 அடி சதுர அளவும், 4 அல்லது 5 அங்குல கனமுள்ளது. சலவைக் கல்லைப் போன்ற அவ்வளவு மழமழப்பாக யிருக்கும் அது முழுவதும் ஒரே கருங் கல்லாலாகியது.

இக் கோட்டை யாண்களின் புறமதிற் சுவர்கள் முழுவதும் பிரம்மாண்டமான கருங் கற் சக்கைகளால் கட்டப்பட்டு, இடையே

பத்திராதிபர்கள் சங்கம் ஒன்று நம் தமிழ் நாட்டிற்கு வெகு வெகு அவசியம்.

பெரிதும் சிறிதுமான கருங் கற் சக்கைகளால் பூர்த்தி செய்யப்பட்டதாகும். அதற்குப் பின் சுமார் 25 அல்லது 30 அடி கனமுள்ள பிரம்மாண்டமான மண் சுவர்கள் எழுப்பப்பட் டிருக்கின்றன. இம் மதிற் சுவற்றின் இடையிடையே ஆங்காங்கு காவல் புரிவதற்காக சிறிய காவற் கூடங்களும், விடுதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வளவு விஸ்தாரமான பிரதேசத்திற்கு மிகவும் சுலபமாகக் கிடைக்கக்கூடிய விதமாக ஜல வசதிகளை யேற்படுத்தி யிருந்தது பெரிதும் போற்றத் தகுந்தது. ராஜகிரியின் உச்சியில் கோட்டை வாயிலுக்கு வெளியே ஒன்றும், குன்றின் உச்சியில் மற்றொன்றுமாக இரண்டு சுனைகள் அல்லது நீரூற்றுகள் இருக்கின்றன. அவை ஒருநாளும் வற்றுவதில்லை யென்று கூறப்படுகிறது. குன்றினடியில் செட்டிகுளம், சக்கரகுளம் என்னும் பெயர் வாய்ந்த இரண்டு நீர் நிலைகள் இருக்கின்றன. சக்காக் குளத்திற்குத் தேவையான ஊற்று ஜலம் சங்கராபரணி யாற்றிலிருந்து கிடைப்பதால், அது வருஷம் முழுவதும் நிறைந்திருக்கக் காணப்படும். ராஜகிரியின் மேல்புறத்தில் அது செங்குத்தாகக் கிளம்பி யிருக்கும் இடத்திற்கருகே, மலைப்புறத்திலிருந்து வீழ்ந்து சிதறியோடும் கழிவு நீரனைத்தையும் தேக்கவைப்பதற்காகச் செங்கலினால் அணை யொன்றும் கட்டப்பட்டிருக்கிறது.

கட்டட அமைப்பில் மட்டுமேயன்றி உறுதியான வேலைப்பாட்டிலும் இணையற்றதாக விளங்கும் இப் பிரம்மாண்டமான வேலைகளுக்கு எந்தக் காலத்தில் ஆரம்பம் செய்யப்பட்டதென்றும் அதன் பிறகு யார் யாரால் அவை தொடர்ச்சியாக நடந்தேறி வந்ததுவென்றும், அவை யெப்பொழுது பூர்த்தி யடைந்தன வென்றும் இந் நிலையில் வரையறுத்துக் கூறுவது எளிதல்ல எனினும் ராஜகிரிக் கோட்டையையும், மலையடிவாரத்திலிருக்கும் உள் கோட்டையையும் 13-ம் நூற்றாண்டிலேயே கட்டி முடித்திருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியிலிருந்து விஜயநகர சாம்ராஜ்யத்தின் பிரதிநிதிகளாக இவ்விடத்தைக் காவல்புரிந்த நாயக்க வமிசத்து மன்னர்களாலேயே கோட்டைக்குள்ளே யிருக்கும் பிரம்மாண்டமான கட்டட வேலைகளும், ராஜகிரியைச் சுற்றிலுமுள்ள மதிற் சுவர்களும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும். தென்னிந்திய சரித்திரத்திலே பிரசித்தி பெற்ற தலைக்கோட்டை யுத்தத்திற்குப் பிறகுங்கூட செஞ்சிக்கோட்டை பெயரளவிற்கேனும் விஜயநகர ராயர்களுடைய ஆதிக்கத்திற் குட்பட்டதாகவே யிருந்து வந்தது. கி. பி. 1650-ம்

---

பத்திராதிபரின் உரிமைகளும், பத்திரிகைக்கு முதல் போடும் முதலாளிகளுக்கும், அவர்களுக்குமுள்ள தொடர்பும் முதலிய பல விஷயங்கள் முடிவு செய்யக் கிடக்கின்றன.

## பாரதியார் பாமணம்.

பண்டித ஜனாப் K. அப்துல் சுகூர் அவர்கள்.

[தேனிருக்குது தினையிருக்குது தென்பழனியிலே என்ற மெட்டு]

1. பூமணக்குது புகழ்மணக்குது புண்ணியர் பாடலிலே
   பாமணக்குது பயன்மணக்குது பாரதி பாட்டிலே.

2. இனிமை மொழி யினிசையிலங்குது இன்பப்பாடலிலே
   பனிமொழிச்சியர் கலைமணக்குது பாரதி பாட்டிலே.

---

ஆண்டில் இக் கோட்டை பீஜப்பூர் சுல்தான்களின் வசமாயிற்று. 30 வருடங்களுக்கப்பால் அதாவது கி. பி. 1677-ம் வருடத்தில் மஹாராஷ்டிர சத்ரபதி சிவாஜி மன்னன் அதை பீஜப்பூர் சுல்தான்களிடமிருந்து கைப்பற்றினார். எனினும் 22 வருஷ காலமே அது மஹாராஷ்டிரர்களின் சுவாதீனத்திலிருந்தது. ஏனெனில் முகலாய ஸர்க்கார் அதன் மீது தமது கண்ணோட்டத்தைச் செலுத்தி வருஷக்கணக்கான நீண்ட முற்றுகைக்குப் பின் 1698-ம் ஆண்டில் செஞ்சியைத் தம் வயப்படுத்திக்கொண்டார்கள் சிவாஜி மன்னன் இக் கோட்டையைப் பெரிதும் அபிவிருத்தி செய்து பற்பல மராமத்துகளைச் செய்வித்ததாகக் கூறப்படுகிறது. அவருடைய இளைய குமாரனான ராஜாராமும் செஞ்சியில் தாமதித்திருந்தகாலையில் அவ்வாறே பற்பல சீர்திருத்தங்களைச் செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. எனினும் இக் கோட்டை யரண்களைப் பெரும்பாலும் கட்டி முடித்த மகத்தான பெருமை விஜயநகரத்தின் அரசர்களாகிய ராயர்களுக்கும் அவர்களுடைய பிரதிநிதிகளாய் விளங்கிய நாயக்க மன்னர்களுக்குமே உரியதாகும். சுவல்பகாலமே இப் பிரதேசத்திற்கு உரிமை பாராட்டிய பிற்காலத்திய மன்னர்களால் இவ்வளவு விசாலமான, நீடித்த வேலைகளை யவ்வளவு சாவதானமாகவும், திறமையாகவும் நிறைவேற்றியிருக்க முடியாது. அடுத்த வியாசத்தில் செஞ்சிக் கோட்டைக்கே ஓர் மகத்தான பிராபல்யம் ஏற்படுவதற்குக் காரணஸ்தனான தேசிங்கு ராஜாவைப்பற்றியும், செஞ்சியின் பிற்கால சரித்திரத்தைப் பற்றியும் எழுதுவோம்.

---

பத்திரிகை யென்பது மக்கள் மனோ நிலை, நெஞ்சத் துடிப்பு, தேசபக்தியின் உத்வேகம் இவைகளைக் குறித்துக் காட்டும் கண்ணாடி.

3. காவியக்கனி கனிந்திருக்குது காமர்ப் பாடலிலே
பாவியலணி பார்த்திருக்குது பாரதி பாட்டிலே.

4. புண்ணியநெறி பொலிந்திருக்குது புதுமைப் பாடலிலே
பண்ணியல்களின் நடைநடக்குது பாரதி பாட்டிலே.

5. தகைமைத்தத்துவந் தவழ்ந்திருக்குது தண்ணார் பாடலிலே
பகைமைகுன்றிய வாழ்க்கைதங்குது பாரதி பாட்டிலே.

6. தேஞ்சாரம்பசுந் தேறலிருக்குது தேசப் பாடலிலே
பாஞ்சாலிநிறை படர்ந்திருக்குது பாரதி பாட்டிலே.

7. ஜெயந்தொனிக்குது திறனொலிக்குது திவ்யப் பாடலிலே
பயந்தொதுங்குது தீண்டாமைப்பேய் பாரதி பாட்டிலே.

8. சாதிக்கொடுமைகள் தகர்ந்தழியுது சங்குப் பாடலிலே
பாதகர்செயும் மோசமோடுது பாரதி பாட்டிலே.

9. சேவைமுறைகள் சேர்ந்திருக்குது தேசப் பாடலிலே
பாவையர்சுதந் தரமிலங்குது பாரதி பாட்டிலே.

10. விடுதலையெனும் வீணையொலிக்குது வித்தகப் பாடலிலே
படுபவத்தொழில் பறந்திரியுது பாரதி பாட்டிலே.

11. அச்சமென்ற சொலகன்றிருக்குது அன்புப் பாடலிலே
பச்சமென்ற சொல்பாலிநிற்குது பாரதி பாட்டிலே.

12. கொஞ்சுங்காதல் திறந்தொனிக்குது குயிலின் பாடலிலே
பஞ்சமோடிட வழியிருக்குது பாரதி பாட்டிலே.

13. அடிமையென்ற சொலகன்றிருக்குது அமுதப் பாடலிலே
படிதமலென்ற சொற்பழுதுபட்டது பாரதி பாட்டிலே.

14. முத்தமிழெனும் வெற்றிமுழங்குது முரசுப் பாடலிலே
பத்தழகுகள் பாலிநிற்குது பாரதி பாட்டிலே.

15. அண்டத்தைவெல்லும் ஆண்மைதங்குது அழகுப் பாடலிலே
பண்டைத்தமிழர் வீறிலங்குது பாரதி பாட்டிலே.

16. பாரதியென்றிட சக்திஜெனிக்குது பாப்பாப் பாடலிலே
"பாரதி"மாலிகை தன்னிலுலாவுது பாரதிபாடல்களே.

---

அன்பு எல்லாவற்றையும் செய்யவல்லது. செய்ய இயலாதனவாகும் மிகப் பெருஞ் செயல்களும் அதற்கு எளிதாயும் இனிமையாயும் தோன்றும்.

# மைந்தன் வரம்.

திரு. பெ. தூரன் அவர்கள்.

"எந்த வீட்டுக்குப் போனாலும் இதிலே சொத்தை, அதிலே சொத்தை என்கிறாயே; நாம் என்ன விலைக்கா வாங்கப் போகிறோம்? இரண்டு நாளைக்கு இருப்பதற்கு, இந்தத் துரைசாணிக்கு ஒரு பங்களா கட்டிவிடலாமா?" என்று முத்துசாமிக் கவுண்டர் கோபத்தோடு முணுமுணுத்துக்கொண்டே போனார். அவருக்கு வயது சுமார் நாற்பத்தைந்திருக்கும். மிக இள வயதிலேயே 'மைனர் தர்பார்' ஆரம்பித்துவிட்டபடியால், இதற்குள் அவர் கிழப் பருவத்தை அடைந்துவிட்டார். தலை அநேகமாக வெளுத்துப் போச்சு. முகத்தில் ஒடுக்கு விழுந்துவிட்டது.

ஆண்மை குன்றி உடல் அலுத்துப் போனவர்கள் சீக்கிரம் பொறுமையை இழந்துவிடுவது இயற்கையே. முத்துசாமிக் கவுண்டரும் இந்த விதிக்கு மாறுபட்டவரல்ல; சிறு வயதில் இவர் யாரிடமும் கோபித்துக்கொள்வதே கிடையாதாம்; ஆனால் இப்பொழுது கொஞ்சம் மனதுக்குப் பிடிக்காவிட்டாலும் எரிந்து விழுவார். அவரது இரண்டாவது மனைவி லக்ஷ்மிகூட இவரது மூர்க்கத்தனத்திற்கு இலக்காகாம லிருக்கவில்லை.

ஆனால் அவளிடம் முத்துசாமிக் கவுண்டருக்குப் பிரேமை அதிகம். முதல் மனைவி இவரது துஷ்கிருத்தியங்களின் பயனாகவே மகப்பேறுகூடப் பெறாமல் எமன் வாய்ப்பட்டாள். இரண்டாவது கல்யாணமாகி மூன்று வருஷங்க ளாகின்றன. குழந்தை யில்லாததால் முத்துசாமிக் கவுண்டர் மனைவியுடன் ஸ்தல யாத்திரை வந்திருக்கிறார்.

இவர் காட்டுப்பாளையத்தில் பெரிய பணக்காரர். பணக்காரரென்றால், "காடு வா வா" என்கிற பருவமாயிருந்தாலும், பெண் கொடுக்கப் பலர் நான் முந்தி, நீ முந்தி என்று வந்துவிடுவார்கள். அவர்களுக்குப் பெண்ணின் சுகம் பெரிதல்ல; பணமே பெரிது,

---

வேற்றுமையில் ஒற்றுமை காண்பார்கள் அறிவாளர்கள்.

லக்ஷ்மிக்குப் பதினெட்டு வயதிருக்கலாம். நல்ல அழகுள்ளவள். அவள் 'சுத்தப் பட்டிக்காடல்ல;' பவுடர் அடித்துக்கொள்ளத் தெரியும். ரொம்ப 'நாசூக்குக்காரி' என்று எல்லோரும் அவளைச் சொல்லுவார்கள்.

கிழ மாப்பிள்ளை அவளுக்கு வேண்டியதெல்லாம் வாங்கிக் கொடுப்பார். லக்ஷ்மிக்கு நாவல் படிப்பதும் பவுடர் அடித்துக் கொள்ளுவதுந்தான் வேலை. பந்துக்கள் வந்தால்கூட அவர்களிடம் அதிகமாகப் பேசமாட்டாள். அவர்களெல்லாம் நாகரீகமற்றவர்கள் என்பது அவளுடைய எண்ணம். இங்கிலீஷ் படித்தவர்கள்தான் மற்றவர்களை இப்படி நினைப்பதை நாம் கண்டிருக்கிறோம்; லக்ஷ்மி இங்கிலீஷ் படித்ததில்லை. ஏதோ சிலகாலம் தன் சிற்றப்பன் வீட்டில் ஈரோட்டி லிருந்திருக்கிறாள். லண்டன் சமூகத்தில் பழகினவர்கள் தங்களை நாகரீகத்தின் ஆணிவேர் என்று கருதுவதுபோல ஈரோட்டு வாழ்க்கை அவளைக் கருதும்படி செய்துவிட்டது.

கல்யாணமாகிக் கொஞ்ச காலம் புது வாழ்க்கையும், நாகரீக நடை உடைகளும், பணச் செருக்கும் லக்ஷ்மிக்கு இன்பம் கொடுத்துக்கொண்டிருந்தன; ஆனால் சீக்கிரம் யோசனை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது.

முத்துசாமிக் கவுண்டர் சதா தனது இளமனைவியின் பக்கத்திலேயே இருப்பார், வெல்லப் பாகில் ஈ மொய்த்துக்கொண்டு இருப்பதுபோல. தன்னைப்போன்ற இள வயதினர்களுடன் உல்லாசமாக இருக்க லக்ஷ்மி ஆசைப்படுவாள். அவருக்கு அது பிடிப்பதில்லை. கிழட்டு மோகம் என்று அதைச் சொல்லுவார்கள். அது லக்ஷ்மிக்குத் தெவிட்டிப் போய்விட்டது.

இளவயது மங்கைகளுக்கு—ஏன் இளைஞர்களுக்கே இயற்கையான கற்பனா சக்தி இவளிடம் சிறிது அதிகமாகவே தென்பட்டது. தனது சாந்துப் பொட்டுக்கும் பவுடருக்கும் பக்கத்தில் ஒரு நாகரீகமுள்ள இளைஞன் கணவனாக இருந்திருப்பானானால், அவளது மனோபீஷ்டமெல்லாம் பூர்த்தியாகி யிருந்திருக்கும்.

இவற்றைக்கொண்டு லக்ஷ்மியை யாரும் கண்டிக்க முடியாது, இளமைக்கு இவைகளெல்லாம் இயற்கையே. வயதானவர்களைத் தான் கேட்கின்றேன்; நீங்கள் சிறு வயதில் உங்களை அழகு செய்து கொள்ள விரும்பினதில்லையா? உங்கள் வாழ்க்கைத் துணை அழகும் இளமையும் பெற்றிருக்க வேண்டுமென்று மனக்கோட்டை கட்டினதில்லையா?

---

இன்பங்களைப் போலவே துன்பங்களையும் நாம் மனமகிழ்ச்சியோடு தழுவுதல் வேண்டும்.



இப்பொழுது இந்தத் தம்பதிகள் தங்குவதற்காக ஒரு வீடு தேடிக்கொண்டிருக்கின்றனர். இரண்டு மூன்று வீடுகளைப் போய்ப் பார்த்தார்கள். அவைகளெல்லாம் லக்ஷ்மிக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் கவுண்டருக்குக் கோபம் வந்துவிட்டது.

திருப்பதியில் பணம் அதிகமாகக் கொடுத்தாலும் நல்ல வீடு கிடைக்காது. சாதாரணமாகத் தரிசனத்திற்கு வருபவர்கள் யாரும் நல்ல வீட்டைத் தேடுவதே கிடையாது. சமைப்பதற்கும் துணி மணிகளை வைப்பதற்கும் ஒரு சிறு வீடோ அல்லது சத்திரத்தில் ஒரு மூலையோ கிடைத்தால் அதுவே திருப்தி. படுப்பதற்கு நல்ல வசதி வேண்டுமே, கோயில் அர்ச்சகர்களைவிட அதிகமாக மூட்டைப் பூச்சிகளும் கொசுக்களும் உயிரை வாங்குகின்றனவே யென்று அவர்கள் கவனிப்பதில்லை. "ஒரு நாள் இரண்டு நாள்; அதற்குள் என்ன கெட்டுப்போகும்? நம்ம வீடா எல்லாச் சுகங்களும் தேடிக் கொண்டிருக்க?" என்றிருந்து விடுவார்கள்.

லக்ஷ்மிக்குச் சுகாதாரத்தைப்பற்றிக் கவலை இல்லை. இத்தனை பெரிய பணக்காரி ஒரு சாதாரண வீட்டில் தங்குவாளா? அவள் பணக்காரியென்று, அங்கு அவளுக்கும், அவள் கணவனுக்கும், கூட வந்திருக்கும் சமையற்காரனுக்குந் தவிர வேறு ஒரு குஞ்சுக்குந் தெரியாது. இருந்தாலும் நாளைக்கு ஊருக்குப் போனால், அங்கு ஒரு குடிசையில் தங்கியிருந்ததாக எப்படிச் சொல்லுவது?

கடைசியாக ஒரு மெத்தை வீட்டின் கீழ்ப் பாகத்தில் ஒரு அறையும் பக்கத்தில் சமையலுக்கு ஒரு சிறு அறையும் கிடைத்தன. தானிருப்பது கீழேயானாலும் வீடு மெத்தை வீடாதலால் லக்ஷ்மி திருப்தியடைந்தாள்.

சாயங்காலமாக அவர்கள் ஆழ்வார் தீர்த்தத்திலும் பாபநாசத்திலும் சென்று முழுகிவிட்டுச் சுவாமி தரிசனத்திற்குச் சென்றனர். என்ன கவண்டா! அர்ச்சனையுண்டா? 108 அர்ச்சனைக்கு நாலணா; 1008-க்கு $1\frac{1}{2}$ ரூபாய்" என்றான் அர்ச்சகன்.

முத்துசாமிக் கவுண்டர், "1008 பண்ணுங்கோ, சாமி" என்றார்.

அர்ச்சனை வாயு வேகம் மனோவேகமாகச் சென்று தீபாராதனையில் முடிந்தது. முத்துசாமிக் கவுண்டர், "வெங்கடாசலபதி, பிள்ளைக் குறை தீர்க்கவேணும்" என்று வாய்விட்டுச் சொல்லித் துதித்

---

துன்பமடையாமல் நாம் அன்பைக் காண முடியாது.

தார். லக்ஷ்மிக்குப் பிள்ளைக் குறையைப்பற்றிக் கவலையேயில்லை; இள மாப்பிள்ளையா யிருக்கவில்லையே யென்ற குறைதான் பெருங் குறையாக விருந்தது.

தக்ஷிணை பெற்றதும் அர்ச்சகன் இன்னும் பலருக்குக் கடவுளைக் காண்பிக்கும் புண்ணிய காரியத்துக்குப் போய்விட்டான். முத்துசாமிக் கவுண்டர் காதில் துளசியைச் சொருகிக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார், லக்ஷ்மி சிந்தித்துக்கொண்டே அவர் பின்னால் நடந்துகொண்டிருந்தாள்.

ஜோராகக் கிராப் செய்துகொண்டு மேலே சலவை செய்த ஒரு ஸில்க் ஷர்ட், இடுப்பில் ஒரு கிளாஸ்கோ மல், காலில் பூட்ஸ்— இப்படி வந்தால் கிழவனென்றாலும் லக்ஷ்மி திருப்தியடைந்துவிடுவாள். இப்பொழுது முத்துசாமிக் கவுண்டரோ சலவை செய்யாத ஒரு ஷர்ட் போட்டுக்கொண்டு, முழங்கால்வரை இடுப்பு வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக்கொண்டு, காதில் துளசியை வைத்துக்கொண்டு நடக்கிறார். எந்த நாகரீகமடைந்த சிறுமிதான் அவரைக் காதலிக்க முடியும்?

முத்துசாமிக் கவுண்டர் சிறு வயதில் ஷோக் பண்ணிக்கொண்டுதான் திரிந்தார். ஆனால் வயதாக ஆகப் பழையபடி 'பட்டிக்காட்டு' வழக்கங்களே அவரிடம் தென்படலாயின.

லக்ஷ்மி பெருமூச்சு விட்டாள். அவள் படித்திருந்த நாவல்களிலெல்லாம் எழுதியிருநதபடி காதலை அவள் எதிர்பார்த்திருந்தாள். திடீரென்று ஒரு மதனன் தோன்றுவதும், கண்டதும் காதல் கொள்வதும், காதலுக்காக உயிரை விடத் தயாரா யிருத்தலும் அவள் படித்த விஷயங்கள்; கண்ட கனுக்கள். அவற்றிற்கும் இப்பொழுது இருப்பதற்கும் எங்கேயாவது சம்பந்தமிருக்கிறதா? மனோபாவமும் கற்பனு சக்தியும் மறைந்துபோன ஒரு கிழவனுடன் அவள் வாழ்க்கையின் சுகத்தைத் தேட வேண்டியிருக்கிறது.

வீடு வந்து சேர்ந்தனர். முத்துசாமிக் கவண்டர் நடந்த அலுப்பால் "உஸ் அப்பாடா" என்று உட்கார்ந்தார். லக்ஷ்மி வெளியே ஆலோசித்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தாள்.

அந்தத் தருணத்தில் மாடியிலிருந்து ஒரு இளைஞன் கீழே இறங்கி வெளியே போனன். வயது இருபத்திரண்டிருக்கும். ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு அழகுடையவனுகக் காணப்படமாட்டான். ஆனால் கிராப், ஸில்க் ஷர்ட்டு, பூட்ஸ் முதலிய 'நாகரீகச் சின்னங்கள்' மட்டும் நிரம்பியிருந்தன.

ஒருபோதும் நாம் வருந்துவதற்குப் பிரியப்படக்கூடாது.



அன்றிரவு லக்ஷ்மி வீட்டுக்காரியிடம் அந்த இளைஞனைப்பற்றி விசாரித்தாள். வீட்டுக்காரி ஒரு கிழக் கைம்பெண். அவளுக்கு அந்த வீடுதான் ஜீவாதாரம். ஒரு சிறு அறையில் தான் வசித்துக்கொண்டு மற்ற வீடுகளையெல்லாம் ஸ்தல யாத்திரை வருபவர்களுக்கு வாடகைக்குக் கொடுத்து அதில் கிடைப்பதைக்கொண்டு காலந் தள்ளி வந்தாள். அவளுக்கு ஒரு வேலையு மில்லாததால் பொழுது போவது கடினம்; அதற்காக வீட்டுக்கு வருபவருடன் ஏதாவது பேசிக்கொண் டிருப்பாள். அப்படிப் பேசுவதிலிருந்து அவர்களுடைய குடும்ப விஷயங்கள் பல அவளுக்குத் தெரிந்துவிடும்.

அந்த இளைஞன் பெயர் நடேசன். சொந்த ஊர் ஈரோடு. ஒரு வாரமாக அங்கிருக்கிறான். தாயார்தான் இருக்கிறாளாம்; தகப்பனில்லை. அதிகமாக யாருடனும் கலந்துகொள்வதில்லை.

இவ்வளவுதான் அவனைப்பற்றித் தெரியும் என்று வீட்டுக்காரி கூறினாள்.

இரவு முத்துசாமிக் கவுண்டர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். லக்ஷ்மி தன் கதியை நினைந்து மனக்கோட்டை கட்டிக்கொண் டிருந்தாள். ஒரு விஷயத்தைப் பன்னிப் பன்னி யோசிப்பதே அதைப் பிரமாதமாக்கி விடுகிறது. மேலும் அவளுக்குக் கிடைத்துள்ள கற்பனு சக்தி அவளுடைய நிலைமையை மிகவும் மோசமாகப் பெருக்கிக் காண்பித்தது. எத்தனையோ பெண்கள் இதைவிட மோசமான வாழ்க்கையை நடத்துகிறார்கள். இருந்தாலும் அவர்கள் அவ்வளவு அதிகமாக அதைப்பற்றி வருந்துவதில்லை. லக்ஷ்மியின் அதிருப்தியைக் குறட்டைச் சத்தம் அதிகப்படுத்திற்று.

அந்தச் சமயத்தில் மேல்மாடியிலிருந்து "பாஞ்சோ" வாத்தியத்தின் ஒலி கேட்டது. லக்ஷ்மி நடேசனைப்பற்றித் தன்னை அறியாமலே சிந்திக்கலானாள். காட்டுப்பாளையத்திற்கும் ஈரோட்டுக்கும் ஏழு மைலுக்கு மேலில்லை. அவ்வளவு சமீபத்திலிருக்கும் ஒரு நகரத்தில் வாழும் சிறுவன். இவர்கள் வந்த சமயத்திலேயே அங்கு வந்திருக்கிறான்; அதுவும் ஒரே வீட்டில் தங்கியிருக்கிறார்கள். இது லக்ஷ்மிக்கு முதலில் ஆச்சரியத்தைக் கொடுத்தது. நடேசனை அவள் ஒரு நிமிஷங்கூடப் பார்க்கவில்லை ஆனால் அவனுடைய 'நாகரீக' நடையுடையும், இளமையும, லக்ஷ்மியின் கற்பனு சக்தியும் சேர்ந்து அவனை லக்ஷ்மியின் எண்ணத்தில் அழகில் மன்மதனுகவே செய்துவிட்டது.

பெற்றுக்கொள்வதினும் கொடுப்பதே இனியது.

லக்ஷ்மி இரவெல்லாம் ஏதேதோ கனவுகள் கண்டாள். அடிக்கடித் தூக்கங் கலைந்து விழித்துக்கொள்வாள். அப்பொழுதெல்லாம் அவள் புருஷனின் குறட்டை அவள் மனதைப் புண்படுத்தும்.

காலையில் லக்ஷ்மி வெளியே வந்தபோது நடேசன் வீட்டுக்காரியிடம் பேசிக்கொண்டிருந்தான். முத்துசாமிக் கவண்டர் மொட்டையடித்துக்கொண்டு வருவதற்காகப் புறப்பட்டார். அவரைக் கண்டதும் நடேசன் ஒருவகையான கலவரத்தோடு லக்ஷ்மியை ஏறிட்டு நோக்கிவிட்டு வேகமாக மாடிக்குச் சென்றுவிட்டான்.

லக்ஷ்மி இவற்றையெல்லாம் நன்கு கவனித்துக்கொண்டிருந்தாள். தன் கணவனைப் பார்த்ததும் ஏன் அவன் கலவரத்தோடு செல்லவேண்டும்? பிறகு தன்னை ஆழ்ந்து நோக்கினானே? ஆஹா என்ன பார்வை! அவளுக்கு அது அன்பு ஊறும் விழிகளாகத் தோன்றின. ஒரு சமயம் அவன் தன் கதியை அறிந்து விசனப்பட்டானோ? ஆமாம், அது உண்மையாக இருக்கலாம். வீட்டுக்காரியிடம் அவன் தன்னைப்பற்றி விசாரித் தறிந்திருக்க வேண்டும்.

இளமையின் சொல்லொணாத மனோ சக்தி எதையும் எளிதில் கற்பித்துக்கொள்ளுமல்லவா? தனியாக உட்கார்ந்துகொண்டு தன் மனதைக் கற்பனை உலகில் தாராளமாகச் சஞ்சரிக்க விட்ட லக்ஷ்மி சிறிது சிறிதாக நடேசன் தன்மேல் அநுதாபமும் அன்பும் காட்டுவதாக நம்பலானாள். வர வர அந்த எண்ணம் உறுதிப்பட்டுவிட்டது.

அந்த வேளையில் முத்துசாமிக் கவுண்டர் உள்ளே நுழைந்தார். அவருடைய மொட்டைத் தலையைப் பார்க்கையிலேயே, இனிய ஆகாயக் கோட்டைகள் கட்டிக்கொண்டிருந்த லக்ஷ்மியின் கண்களில் நீர் பிதுங்கிற்று. அவளை அறியாமல் பெருமூச்சு விடலானாள்.

அன்று சாயங்காலமே ஊருக்குத் திரும்பிவிடுவதாக அவர்கள் எண்ணி வந்தனர். ஆனால் லக்ஷ்மிக்கு அன்றே புறப்பட இஷ்டமில்லை. வீடு அவளுக்குப் பெரிதும் திருப்தி அளித்தது. வெங்கடாசலபதியை இன்னும் சில நாட்களுக்குத் தரிசனம் செய்ய அவள் நினைத்தாள்; அந்த விருப்பத்தைத் தெரிவிக்கவே முத்துசாமிக் கவுண்டரும் சந்தோஷமாக இணங்கினார்.

நடேசனை அன்று முழுதும் பார்க்க முடியவில்லை. அவன் தன் அறையை விட்டு வெளிக் கிளம்பவே கிடையாது. இரவு 'பாஞ்சோ' ஒலியும் கேட்கவில்லை.

---

நீ எவ்வளவிற்கு ஏழையாகிறாயோ அவ்வளவுக்குக் கடவுள் உன்னை அதிகமாக நேசிப்பார்.



இவைகளெல்லாம் படுக்கையிற் புரளும் லக்ஷ்மிக்கு இன்னும் பல இன்பக் கற்பனைகளுக்கு ஆதாரமாக விருந்தன. அவன் ஏன் வாத்தியங்கூட வாசிக்கவில்லை? தன்னைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறானோ? இவ்வித சந்தர்ப்பங்களில் கண்டதும் காதல் ஏற்படுவதை அவள் பலமுறை படித்திருக்கிறாள். ஒருவேளை அப்படியிருக்கலாமா? தன்னை ஏறிட்டுப் பார்த்தபொழுதே அவன் தன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டு விட்டதாக அவள் நினைத்தாள். ஆமாம்; லக்ஷ்மிக்கு இனிமேல் அவனில்லாமல் வாழ்க்கை யில்லையென்று தோன்றிற்று.

லக்ஷ்மியின் கண்கள் அலுப்பில் தாமே மூடுவதற்குள் நடேசன் தன்மேற் கொண்டுள்ள காதலிலேயே ஏங்கிக்கொண் டிருப்பதாகவும் தானும் அவனை மனமாறக் காதலிப்பதாகவும் கற்பனை செய்து கொண்டாள்.

மறுநாட் காலை லக்ஷ்மி சமையலறையில் வேண்டிய வேலைகளைச் சொல்லிவிட்டு வந்தாள்.

அப்பொழுது வீட்டிற்குள் நடேசனின் குரல் கேட்டது. லக்ஷ்மியின் மெய் சிலிர்த்தது. அவள் மெதுவாகக் கதவுக்குப் பக்கமாகப் போய் நின்று கொண்டு உற்றுக் கேட்டாள்.

நடேசன் துக்கத்தோடும் ஆத்திரத்தோடும் பேசிக் கொண்டிருந்தான்.

"என்னைப்போல எத்தனை பேர் சமூகத்தில் தலை காட்ட நாணி அலைகின்றனர்? என் தாயைக் கெடுத்தது மட்டுமா? எனக்கு வாழ்நாள் முழுவதும் தீரா அவமானத்தையும் உண்டாக்கிவிட்டாயே. எனக்குச் செல்வமிருக்கிறது; படிப்பிருக்கிறது. இருந்து என்ன செய்வது? நான் ஒரு வேசி மகன்தானே."

சற்றுநேரம் யாருமே பேசவில்லை. மறுபடியும் நடேசன் குரல் கேட்டது.

"நான் எனது அவமானத்தை எல்லாம் இப்படி எங்காவது வந்து மறந்திருக்கலாமென்றிருக்க அது முடியாது போலிருக்கிறதே! இங்கு ஏன் வந்தாய்? எங்கள் வீட்டிற்கு இந்த ஐந்து வருஷங்களாக வாராததே எனக்குப் பெரிதும் ஆறுதலாகவிருந்தது.

---

கோடானு கோடி ஜனங்களுக்குக் குடிக்கக் கூழ்கூடக் கிடையாமல் வருந்தும் இத் தேசத்தில் மனிதன் சரீரத்தையும் ஆத்மாவையும் கெடுக்கும் மதுபானத்திற்காக இவ்வாறு பணத்தைத் தண்ணீர் போன்று செலவு செய்வது நியாயமாவென்று கவனியுங்கள்.

# ஹரிஜன இயக்கம்.

## (ஒரு வருஷத்தில் கண்ட பலன்.)

திரு. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள், M.A.

பூனா ஒப்பந்தம் 24—9—32-ல் ஏற்பட்டு, 26—9—32-ல் ஆங்கிலச் சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டது. அப்பொழுது 'ஹரிஜனங்களுக்கும் மற்ற எல்லாரைப்போலும் சம உரிமை கொடுக்கப்படும்' என்று மகாத்மாவும் மற்ற தேசீயத் தலைவர்களும் வாக்குறுதி செய்தார்கள். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற உடனே முயற்சிகள் செய்யப்பட்டன. இப்பொழுது சரியாக ஒரு வருஷமாகப் போகிறது. அந்த ஒரு வருஷத்தில் காரியம் எவ்வளவு தூரம் கைகூடியது, எந்த நிலைமையில் இருக்கிறது? என்று சற்று யோசித்துப் பார்ப்பது பொருத்தமானதேயாகும்.

---

"நீ உயிரோடிருக்கிறாய்; ஆனால் எனக்குத் தகப்பனில்லை. இப்படிப்பட்ட துரோகிகள் உலகில் எத்தனையோ? புத்திர வாஞ்சையாவதுண்டா? உன் குலம் விருத்தியாகுமா? ஐயோ! இப்படிப்பட்டவர்களின் குலம் அழிந்துபோவதே மேல். உனக்கும் கடவுள் கிருபை செய்வாரா?"

ஆத்திரமும் அழுகையும் அவன் நெஞ்சை அடைத்துக்கொள்வதுபோ லிருந்தது. அவன் தடாலென்று வெளியே போய்விட்டான். முத்துசாமிக் கவுண்டர் ஒன்றும் சொல்லத் தோன்றாமல் திகைத்து உட்கார்ந்திருந்தார்.

சாயங்காலம்வரை அவர் அநேகமாக வாய் திறக்கவேயில்லை. கடைசியில் ஒருவிதக் கலக்கத்தோடு அவர் தன் மனைவியை "ஊருக்குப் போகலாமா?" என்று கேட்டார். லக்ஷ்மியும் "போகலாம்" என்றாள்.

---

ஓர் மனிதனுடைய மனக் கண்ணைத் திறந்து அவன் புத்தியை விருத்தி செய்வது கல்வியே.



### மன மாற்றம்

ஹரிஜனங்களையும் ஜாதி ஹிந்துக்கள் தம்மவராகவே நினைக்க வேண்டுமென்றும், அவர்களைத் தாழ்ந்தவர்களாக எண்ணி விலங்குகளைக் காட்டிலும் கேவலமாக நடத்தும் மனப் பான்மை நீங்க வேண்டுமென்றும் மகாத்மா காந்தி அடிக்கடி வற்புறுத்தியிருக்கிறார். 'தீண்டாமை என்பது ஹிந்து மதத்தின் அடிப்படையான கொள்கையென்பதுபோய், அதன் பெருமையைக் குன்றச் செய்யும் மாசு' என்ற உண்மையை ஜாதி ஹிந்துக்கள் உணர வேண்டுமென்பதும் அவருடைய விருப்பமாகும். மாசு என்ற எண்ணமானது ஜாதி ஹிந்துக்களின் மனதை முள்போல் குத்தி, அதையகற்றியெறிய அவர்களெல்லாரும் முயலவேண்டுமென்பதற்காகவே, அவர் அடிக்கடி உபவாசத்தைக் கையாண்டிருக்கிறார்.

### ஆலயப் பிரவேசம்—மன மாற்றத்தின் உறைகல்

ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேச உரிமை அளிப்பதே 'மன மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? இல்லையா?' என்பதை அறியக்கூடிய உறைகல்லாக மகாத்மா மதிக்கிறார். 'ஹரிஜனங்களுடைய சேர்க்கையும் அருகாமையும் அசுத்த முண்டாக்குபவனவல்ல' என்பது ஹிந்து சமூகத்தின் கொள்கையானால், அவர்களை ஆலயங்களில் நுழைய அனுமதிப்பதால் ஒன்றும் முழுகிப்போய் விடாதல்லவா?

ஆகையால், ஆலயப் பிரவேச இயக்கம் அதிக மும்முரமாக நடத்தப்பட்டது. வட இந்தியாவில் அநேக ஆலயங்கள் திறக்கப்பட்டன. தெற்கிலும் சில கோவில்கள் திறக்கப்பட்டாலும், இவ்விடத்திய ஆலய காரியஸ்தர்கள் சட்ட சம்பந்தமான ஆக்ஷேபங்கள் கூறலானார்கள். எனவே, சென்னை சட்டசபையிலும் டில்லி சட்டசபையிலும் ஆலயப் பிரவேச மசோதாக்கள் கொண்டுவரப்பட்டன. சென்னையில் மசோதாவுக்கு ராஜப்பிரதிநிதியின் அனுமதி கிடைக்கவில்லை. டில்லியில் மசோதாவானது பொதுஜன அபிப்பிராயத்தையறிவதற்காக ஒத்திவைக்கப்பட்டது. ராஜாங்கத்தார் இவ் விஷயத்தில் பெருந்தடை செய்திருக்கிறார்களென்பது வெளிப்படை.

ஆனால் ஆலயப் பிரவேச இயக்கம் சட்டசபையளவில் நிற்கவில்லை. தேச முழுதும் பொதுஜனக் கூட்டங்கள் நடந்தன. அவைகளில் ஆலயப் பிரவேசத்துக்கு ஆதரவான தீர்மானங்கள் நிறைவேறின. இக் கூட்டங்களின் தொகையும், இவைகளில் ஆஜ

---

கடுந் தரித்திரத்திலிருந்து குடியானவர்கள் கொடுக்கிற வரியைச் சேர்த்துப் பெரிய சம்பளங்கள் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பது குடியானவர்கள் இரத்தத்தைக் குடிப்பதற்குச் சமானமாகும்.

ரான பொதுஜனங்களின் தொகையும் மிகவும் அதிகம். ஆனால் இதற்கு விரோதமாகப் பிற்போக்கான சநாதனிகள் கூட்டிய பொதுக் கூட்டங்களின் தொகையும், அவைகளில் ஆஜரான நபர்களின் தொகையும் மிகவும் குறைவு. இக் கூட்டங்களில் சீர்திருத்தக்காரர்களிற் சிலர் அமளிசெய்தது வருந்தத்தக்கதே; ஆனால் அவ் வமளியில் சநாதனிகளின் கூட்டம் அடிக்கடி உருப்படியில்லாமற் கலைந்து போகும். சீர்திருத்தக்காரர்களின் பொதுக்கூட்டங்களுக்கு சநாதனிகள் அதிகமாக வரவில்லை (ஹரிஜனங்கள் ஆஜராயிருந்தது இதற்குக் காரணமா யிருந்திருக்கலாம்). அப்படி அவர்கள் வந்து ஏதாவது எதிர்க் கேள்விகள் கேட்டாலும், அவைகளுக்குத் திறமையாகப் பதில்கள் அளிக்கப்பட்டன.

பொதுக் கூட்டங்களைத் தவிர, குருவாயூர், மதுரை, திருச்சி முதலான இடங்களில் ஆலயப் பிரவேசத்தைப்பற்றி ஜாதி ஹிந்துக்களின் அபிப்பிராயத்தைக் காட்டும் கணக்கு (Referendum) எடுக்கப்பட்டது. இவைகளிலெல்லாம் பெருவாரியான தொகையில் ஆலயப் பிரவேசத்துக்குச் சாதகமாக அபிப்பிராயம் கொடுக்கப்பட்டது. சநாதனிகளும் ஆலயப் பிரவேசத்துக்கு விரோதமான கணக்கு ஒன்று எடுக்கலானார்கள். ஆனால் இது குறிப்பிட்ட எந்த இடத்திலும் எடுக்கப்படவில்லை; எடுக்கப்பட்ட முறைகளிலும் பல குற்றங் குறைகள் இருந்தன. பொதுஜனங்களின் விருப்பம் ஆலயப் பிரவேசத்துக்குச் சாதகமாக இருப்பதாகச் சந்தேகமில்லாமல் நிரூபிக்கப்பட்டது.

## மன மாற்றத்தின் பலன்—ஹிந்துக்களின் தற்கால மனோநிலை

(1) **ஊழியர்கள்.** தீண்டாமை விலக்கு பதினான்கு வருஷங்களுக்கு முன்பே காங்கிரஸ் மகாசபையின் முக்கிய வேலைகளில் ஒன்றாகச் செய்யப்பட்டது. என்றாலும், மகாத்மா காந்தியையும், பெரிய பெரிய தேசீய வாதிகளையும், சிறிய ஊர்ப் பிரமுகர்களிற் சிலரையுந் தவிர, மற்றவர்களெல்லாரும் வாயளவில் தீண்டாமை விலக்குப் பிரசாரம் செய்து வந்தவர்களே யொழிய, காரியத்தில் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை. தங்களளவில் தீண்டாமையை ஒப்புக்கொள்ளவில்லை என்பதுதான் அவர்களுக்குப் பெருமையைக் கொடுக்கக்கூடிய விஷயமாக இருந்தது. ஆனால், மகாத்மாவின் உபவாசங்களாலும் உபதேசங்களாலும், பாகனுடைய அங்குசத்தால் குத்தப்பட்ட யானைகளைப்போல, இவ் வூழியர்கள்

பட்டாளத்திற்காக 55 கோடி ரூபாய் இந்திய சர்க்கார் செலவு செய்து, இந்தியர் கல்விக்காக 13 கோடி ரூபாய் செலவளிக்கிறார்கள்.



துள்ளி எழலானார்கள். எல்லா விதமான கஷ்டங்களுக்கும் தயாராக இருந்துகொண்டு வேலை செய்யலானார்கள். தேச முழுதும், ஏக காலத்தில், மும்முரமான முயற்சிகள் ஆரம்பமாயின.

(2) **பிற்போக்காளர்கள்.** இந்த ஊழியர்களின் வேலை உரமுள்ளது என்பதைப் பிற்போக்காளர்களின் மனப்பான்மையிலிருந்தும் தெரிந்துகொள்ளலாம். இதுவரை சும்மா இருந்தவர்கள், தூக்கத்திலிருந்து விழித்துக்கொள்பவர்கள்போல, எழலானார்கள். சீர்திருத்தக்காரர்களுடைய பெருமுயற்சிகளைக் கண்டு பிரமித்துப் போனார்கள். எல்லாரும் ஒன்று சேர்ந்து தங்களாலான முயற்சிகளை யெல்லாம் எடுத்துக்கொள்ளலானார்கள். ஆலயப் பிரவேச விஷயத்தில் அவர் சாதித்ததைப்பற்றி ஏற்கனவே எழுதியிருக்கிறேன். அவர்களுடைய இன்னொரு அலுவல் ஹரிஜன ஊழியர்களைப் பகிஷ்கரிக்க முயல்வதாகும். சில இடங்களில், இந்தக் கிளர்ச்சியின் காரணமாக ஹரிஜனங்கள் முன்னைவிட அதிகமாகத் துன்புறுத்தப்பட்டிருக்கிறார்கள். சீர்திருத்தப் போரில் இவைகளெல்லாம் எதிர்பார்க்கக் கூடியவைகளே. தங்களாலானவரை செய்துவிட்டுப் பலனற்றுப் போனபிறகே, பிற்போக்காளர்கள் வழிக்கு வருவார்கள். அதற்கு முன் அவர்களும் ஒரு கை பார்த்தே தீர்வார்கள். ஆனால், தேசத்தில் ஏற்பட்ட பொதுஜன அபிப்பிராயத்தின் வேகம், ஹரிஜன ஊழியர்களின் தைரியம், முயற்சி முதலானவைகள், மகாத்மாவின் பரிசுத்த உபவாசங்கள், பத்திரிகைகளின் பிரசாரம், உலக அபிப்பிராயத்தின் பேராதரவு—இவைகளெல்லாவற்றிற்கும் முன்பாகக் கோபம், பயம், பீதி, முன் பின் சொல்வன செய்வனவற்றின் முரண்பாடு—இவைகளால் பலவீனப்பட்டுப்போன பிற்போக்காளர்கள் பிறரால் சிறுமையாக நினைக்கப்படும் நிலைமைக்கு வந்துவிட்டார்கள். எனவே, விசேஷ மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது; சீர்திருத்தம் வெற்றி மார்க்கத்தில் விளங்கிக்கொண்டிருக்கிறது என்பது புலப்படுகிறதல்லவா?

(3) **பொதுஜனங்கள்.** ஹரிஜன இயக்கங்களில் தங்களுக்கு விசேஷ ஆதரவிருப்பதாகப் பொதுஜனங்கள் பல சமயங்களில் காட்டியிருக்கிறார்கள். மகாத்மா காந்தியின் உபவாசங்கள் அவர்களுடைய மனச்சாட்சியைக் குத்தி எழுப்பிவிட்டன. அவர் நீடூழி வாழவேண்டுமென்று பிரார்த்தனை செய்யாதார் சநாதனிகளிற் சில

தமிழ் பாஷையே கச்சேரி உயர்தரப் பாடசாலை முதலியவற்றிற்கும் அரசியல் காரியங்களுக்கும் பிரதான பாஷையாகும்படித் தீவிரமாய் விடாது முயற்சி செய்யுங்கள்.

னைத் தவிர வேறு ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். ஆலயப் பிரவேச இயக்கத்தில் தங்களுடைய பேராதரவைக் காட்டிய விஷயம் முன்பே கூறியிருக்கிறேன். 18—12—32, 30—4—33 இவ்விரு நாட்களும் ஹரிஜன தினங்களாகக் கொண்டாடப்பட்டன. அந்தத் தினங்களிலும், மகாத்மாவின் மே மாத உபவாச காலத்திலும் பொதுஜனங்கள் தங்கள் அனுதாபத்தை வெளியிட்டிருக்கிறார்கள். பொதுக்கூட்டங்களில் செய்யப்பட்ட தீர்மானங்கள் ஹரிஜன சேவைக்குப் பண உதவி; அவர்களைத் தங்கள் வீடுகளில் வரவேற்றல்; அவர்கள் இருக்கும் இடங்களுக்குச் சென்று சேவை செய்தல்; அவர்களுடன் சமபந்தி போஜனம் செய்தல்; ஊர்வலங்களிலும் பொதுக்கூட்டங்களிலும் அவர்களுடன் பேதமின்றிப் புழங்குதல் முதலான காரியங்களால் பொதுஜனங்கள் தங்கள் ஆதரவை வெளிக்காட்டியிருக்கிறார்கள். 'பிற்போக்காளருக்கு இனிக் காலமில்லை' என்ற நிலைமையுண்டானது முக்கியமாகப் பொதுஜனங்களின் மனப்பான்மையால்தான். என்றாலும், 'மகாத்மா திருப்தியடையும் அளவுக்குப் பொதுஜனங்கள் முன்வந்து உதவவில்லை' என்றுதான் சொல்லவேண்டும். பூரண வெற்றியடைய வேண்டுமானால், சநாதனிகள் சகிதம் ஹரிஜனங்களுக்குச் சம உரிமையைச் சந்தோஷமாகக் கொடுக்கவேண்டியிருக்கும்.

## சீர்திருத்தத்தின் ஸ்தூல சின்னங்கள்

ஜனங்களுக்குள் மன மாற்றம் ஏற்பட்டதன் சின்னங்களை ஆலயப் பிரவேச இயக்கத்தில் தவிர, இன்னும் பலவிதங்களில் காண்கிறோம்.

## ராஜீயத் துறையில்

பூனா ஒப்பந்தம் ஏற்பட்டு, அதனால் வரப்போகும் சட்டசபைகளில் ஹரிஜனங்களுக்கு ஏராளமான ஸ்தானங்கள் கொடுக்க ஏற்பாடாயிருக்கிறது. ஆனால் அச் சட்டசபைகள் இன்னும் அமைக்கப்படவில்லையாகையால், இந்த ஒப்பந்தம் இன்னும் அமுலுக்கு வரவில்லை. இதனால் ஹரிஜனங்களுக்குள் ஏற்பட்ட நம்பிக்கையுள்ள மனப்பான்மைதான் இப்பொழுது கைகண்ட பலனாகும்.

ஸ்தல ஸ்தாபனங்களில் ஹரிஜனங்களுக்கு விசேஷ சலுகை காட்டவேண்டுமென்ற முயற்சிகள் சிலவிடங்களில் செய்யப்பட்டன. ஆனால் இதனால் அவ்வளவு முக்கியமான பலன் ஏற்படவில்லை.

---

சும்மா இருந்து வீண் நேரம் போக்கும் காலங்களில், அதற்குப் பதிலாக ஏன் நூல் நூற்க அல்லது நெசவு செய்ய முடியாது? நம்முடைய தேசத்தில் கோடிக் கணக்கான ஜனங்கள் வீண் நேரம் போக்குகிறார்கள்.



## ஹரிஜன சேவா சங்கம்

பூனா ஒப்பந்தம் ஏற்பட்டபின், காலதாமதமின்றி 'ஹரிஜன சேவா சங்கம்' ஸ்தாபிக்கப்பட்டது. இந்தியா முழுவதிலும் நடக்கும் வேலையைக் கவனித்து, அதன் போக்கை நிர்ணயம் செய்யக்கூடிய அகில இந்திய சங்கமும், மாகாணத்து வேலையைக் கவனித்துக்கொள்ள மாகாண சபைகளும், ஜில்லாக்களில் எப்பொழுதும் பிரசாரம் செய்துகொண்டு, ஆங்காங்கே ஏற்படும் நிலைமைகளையும் சிறு சிறு விஷயங்களையும் கவனித்துக்கொண்டு, சதா ஹரிஜனங்களின் நன்மையையே கோரக்கூடிய ஜில்லா சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன. ஒவ்வொரு ஜில்லாவிலும் இரண்டு பிரசாரகர்கள் இருக்கிறார்கள். 'அவர்கள் உயிருடனிருந்து சுற்றித் திரிவதே ஹரிஜன சமத்வத்தைப் பொதுஜனங்களுக்கு இடைவிடாமல் ஞாபகமூட்டும் பிரசாரமாக இருக்கவேண்டும்' என்பது சேவா சங்கத்தின் முக்கியமான கொள்கையாகும். இந்தக் கொள்கையின்படி ஒவ்வொரு ஜில்லாவிலும் இவ்விரண்டு பிரசாரகர்களைத் தவிர இன்னும் பலர் வாழ்கிறார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை.

## இதர சங்கங்கள்

ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண மிஷன் முதலான ஸ்தாபனங்களும், சபரீ ஆஸ்ரமம், கிருபாஸ்ரம் முதலான ஆஸ்ரமங்களும் விசேஷமான பிரசாரத்தைச் செய்துவருகின்றன. ஹரிஜனங்களுக்குப் படிப்பு, கிணறு, குடியிருக்க ஒழுங்காக அமைக்கப்பட்ட வீடுகள் முதலான வசதிகள் செய்துவருகின்றன. தனிப்பட்ட நபர்களும் ஆங்காங்கே வேலை செய்து வருகிறார்கள். சில இடங்களில் சநாதனிகள்கூட ஹரிஜனங்களுக்கு இம் மாதிரியான நன்மைகள் செய்துவருவது போற்றத் தக்கது.

## சர்க்காரும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிகளும்

கிணறுகள் வெட்டிக்கொடுப்பது, பள்ளிக்கூடங்களிற் சம்பளமின்றி ஹரிஜனச் சிறுவர்களைச் சேர்த்துக்கொள்வது முதலான விஷயங்களில் உதவி செய்து வருகின்றனர்.

## ஹரிஜனங்களின் நிலைமை

'இந்த ஒரு வருஷத்தில் நடந்த பல சம்பவங்களால் ஹரிஜனங்களுக்குள் ஒரு விசேஷமான எழுச்சி உண்டாயிருக்கிறது' என்பது

---

கதர் உடுத்துதல் ஒருவன் தன்னை ஏழைகளோடு ஐக்கியப்படுத்திக் கொள்வதற்கு ஓர் சிறந்த அறிகுறி.

அவர்களுக்குள் வேலை செய்தவர்களுக்கு நன்கு புலப்படும். தங்களைக் கவனிப்பவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணமே அவர்களுக்கு விசேஷ நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறது. வாடி வதங்கும் மக்கள் அனைவருக்குள்ளும், ஸ்வல்ப காலத்தில், இப்பேர்ப்பட்ட மனப்பான்மை ஏற்பட்டது எவ்வளவு பெரிய காரியமென்பதை இந்திய மக்கள்கூட நன்றாய் உணரவில்லை என்றுதான் சொல்லவேண்டும். வாழ்க்கையில் நம்பிக்கையும் தைரியமுங் கொள்வதுடன், தங்களுடைய சுய முயற்சியால் முன்னுக்கு வரும் வழியைப் பார்க்கவேண்டும் என்று மகாத்மா அடிக்கடி அவர்களுக்குச் சொல்லிக்கொண்டே வருகிறார். மதுவிலக்கு, கைத்தொழில், பரிசுத்த வாழ்வு, மாமிசத்தை வெறுத்தல், கல்வி கற்றல் முதலான நோக்கங்களில் அவர்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும்' என்று அடிக்கடி வற்புறுத்தப்படுகிறது.

ஹரிஜனங்கள் ஏழைகள்; இந்தியா ஓரடிமைத் தேசம்; பணமுடையும் வியாபார மந்தமும் நாட்டை வாட்டிவருகின்றன. இந்த நிலைமையில், இவ்வளவு சீக்கிரத்தில், இத்தனை காரியங்களைச் சாதித்தது மகாத்மாவின் ஆத்ம சக்தியின் பெருமையல்லவா?

## பண்டித ஜவஹர் லாலின் அபிப்பிராயம்

என்றாலும், பண்டித ஜவஹர் லால் நேரு போன்றவர்கள் இதைப்பற்றிப் பிரமாதமாக நினைக்கிறதில்லை. சுப எல்லா விருப்பங்களும் பூர்த்தியானபின் என்ன காணப்போகிறோம்? ஹிந்து மதத்தின் மாசு நீங்கியது ஒன்று; ஹரிஜனங்கள் ஏழைகளான ஜாதி ஹிந்துக்களின் நிலைமைக்குக் கொண்டுவரப்படுவது இரண்டு; இந்த முயற்சிகளால் அதிகரிக்கப்பட்ட ஆத்ம சக்தி மூன்று; இவ்வளவுதானே? இவைகளெல்லாம் பெரிய விஷயங்களென்றாலும், அவசியம் செய்ய வேண்டுமென்றாலும், தேசத்தின் ஏழ்மை நிலை அப்படியேதானிருக்குமல்லவா? பொதுவுடமைக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ராஜாங்கம் ஏற்படும்வரையில், தேசத்தின் நிலைமை கேவலமாகத்தானே இருக்கும்? இதுதான் பண்டித ஜவஹர் லால், ஸ்ரீமான் சந்தானம் முதலானோர் வற்புறுத்திக் கூறுவது. 'இவர்களுடைய அபிப்பிராயத்தில் மற்றவர்கள் நினைப்பதைக் காட்டிலும் அதிக உண்மை இருக்கிறது' என்பதை நாம் உணரவேண்டும்.

---

கல்வியின் முக்கிய நோக்கம் வயிற்றுப் பிழைப்பல்ல; நம்முடைய மானிட தத்துவம் பூரண விருத்தி யடைந்து, சர்வ நற்குணங்களிலும், தெய்வ பக்தியிலும், பொது அறிவிலும் நாம் முன்னேறுவதே மெய்க் கல்வியின் நோக்கம்.

# கற்பின் கண்ணியம் அல்லது அமா விநாயகர்

(மகாகவி ரவீந்திரநாதர் எழுதியதைத் தழுவி வரையப்பெற்றது.)

ஸ்ரீவை. திரு. குஞ்சு அவர்கள்.

நேரம்:— இரவு. இடம்:— யுத்தகளம்.

[அமா, தன் தந்தையான விநாயகரைச் சந்திக்கிறாள்.]

அமா:—அப்பா!

விநாயகர்:—வெட்கங்கெட்ட காமுகி. ஒரு மகமதிய கணவனிடமிருந்து அபவாதத்திற்குப் பயந்து பின்னிடாத நீ, என்னைத் தந்தையென்று அழைக்கிறாய்!

அமா:—எனது கணவரை நீங்கள் துரோகஞ் செய்து கொன்றுவிட்டீர்கள்; ஆனாலும் நீங்கள் எனது தந்தைதான். நான் ஒரு கைம்பெண்ணின் கண்ணீரை யடக்கிக் கொள்கிறேன். இல்லாவிட்டால் அது தெய்வ சாபத்தை உங்களுக்குக் கொண்டு வந்துவிடும். அநேகம் வருஷங்கள் பிரிந்திருந்த பிறகு, இந்த யுத்தகளத்தில் சந்திக்கிறோம். உங்கள் திருவடிகளில் விழுந்து வணங்கி எனது கடைசியான விடையைப் பெற்றுக்கொள்கிறேன்.

விநாயகர்:—எங்கு நீ செல்லப்போகிறாய், அமா? தெய்வநிந்தையாகிற கூட்டை, நீ எந்த மரத்தின் மீது கட்டினாயோ, அது இன்று வெட்டுண்டு விழுந்திருக்கிறது. எங்கு நீ புகலிடங் கொள்ளப்போகிறாய்?

அமா:—எனக்குப் புதல்வன் இருக்கிறான்.

விநாயகர்:—அவனைத் துறந்துவிடு! இரத்தத்தால் பிராயச்சித்தஞ் செய்யப்பட்ட துரோகத்தின் விளைவின் மீது, உன் அன்பு பொருந்திய பார்வையைச் செலுத்தாதே! யோசனை செய் எங்கே போவதென்று!

அமா:—மரணத்தின் திறந்த கதவுகள், ஒரு தந்தையின் அன்பைவிட அகன்றது!

---

மதுபானத்தால் சர்க்காருக்கு வரும்படி 25 கோடி ரூபாய். சென்னை ராஜதானியில் மாத்திரம் மதுபானத்திற்காகச் செலவாகிற பணம் $16\frac{3}{4}$ கோடி ரூபாய். சென்னைச் சர்க்காருக்கு இதில் வரும்படி 5 கோடி ரூபாய்.

கடல் விழுங்குவது போல பழிபாவங்களையும் விழுங்கிவிடுகின்றது. ஆனால் நீ இன்றாவது அல்லது இவ்விடத்திலாவது அழிந்துபோக மாட்டாய். அவமானப்படுத்தப்பட்ட சுற்றத்தாரிடமிருந்தும், அயலாரிடமிருந்தும் வெகு தூரத்திலுள்ள தூய்மை பொருந்திய ஏதாவது ஏகாந்தமான சிவ க்ஷேத்திரத்தைத் தேடிச் செல்; புண்ணிய கங்கையில் தினமும் மூன்று தடவைகள் நீராடு; இறைவனின் திருநாமங்களைப் பாடும்பொழுது மாலை நேர வணக்கத்திற்காக அடிக்கும் கடைசி மணி யோசையைக் கேள். தூங்குகின்ற குழந்தையை கண்ணீரால் நனைந்திருக்கின்ற விழிகளோடு இப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கும் தந்தையைப் போன்று மரணதேவன் உருக்கமாக உன்னைப் பார்க்கட்டும். விழுந்த மலரைக் கடலுக்குத் தகுந்த பரிசாகச் செய்து தருவதற்கு அதன் ஒவ்வொரு மாசையும் போக்கிவிட்டு தனது நீரோட்டத்தால் சுமந்து செல்லும் கங்கையைப் போன்று அவன் உன்னை மிருதுவாகத் தனது அகண்ட அமைதிக்கு எடுத்துச் செல்லட்டும்.

அமா:—ஆனால் எனது மைந்தன்.

விநாயகர்:—மறுபடியும் எச்சரிக்கின்றேன். அவனைப் பற்றிப் பேசாதே. உனது மற்றொரு அன்னையாகிய மறதி யென்ற கருப்பத்திலிருந்து புதிதாகத் தோன்றிய குழந்தையைப் போன்று உனது தகப்பனாரின் கைகளுக்கு வந்துவிடு.

அமா:—எனக்கு இந்த உலகம் வெறும் பிரதிபிம்பமாகிவிட்டது. தங்கள் சொற்களை நான் கேட்கின்றேன். ஆனால் ஹிருதயத்தில் எடுத்துக்கொள்ள முடியவில்லை. என்னை விட்டு விடுங்கள், தந்தையே; தனியாக விட்டுவிடுங்கள். தங்களது அன்பால் என்னைக் கட்டிவிட முயலாதீர்கள். ஏனென்றால் அதன் சம்பந்தம் எனது கணவரின் இரத்தத்தால் சிவந்திருக்கின்றது.

விநாயகர்:—ஐயோ! ஒரு மலரும் ஈன்ற கொம்பிலிருந்து விழுந்த பிறகு திரும்புவதில்லையே! தெய்வீகமாக சம்மந்தஞ் செய்து கொண்ட ஜீவாஜீயினிடமிருந்து உன்னைப் பலாத்காரமாகக் கவர்ந்து கொண்ட ஒருவனை நீ எவ்வாறு கணவனென் றழைக்கலாம்? அந்த இரவை ஒருபொழுதும் மறந்துவிட மாட்டேன். மணமாளிகையில் நாம் மாப்பிள்ளையின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஏனென்றால் நல்ல நேரம் நெருங்கிக் கொண்டே வந்தது. அப்பொழுது தூரத்தில் தீப்பந்தங்களின் ஜோதி தென்பட்டது.

மனிதர் கடவுளுக்கு மலர்கள் அல்லவா? நாம் நமது அன்பென்னும் நறுமணத்தை எங்கும் பரவச் செய்வது நமது கடமையாகும்.



விவாகத்திற்கு அடுத்த துன்பங்கள் காற்றில் மிதந்து வந்தது. நாம் சந்தோஷத்தால் ஆரவாரித்தோம்; பெண்கள் சங்குகொண்டு ஊதினார்கள். பல்லக்குகளின் ஊர்வலமொன்று ஒய்யார வாசலுக்குள் நுழைந்தது. எங்கே ஜீவாஜீ? என்று கேட்டுக்கொண்டிருந்தோம். அப்பொழுது ஆயுதந் தரித்த மனிதர்கள் பல்லக்குகளினின்றும் வெளிக்கிளம்பி என்ன சம்பவித்ததென்று அறிவதற்குள் உன்னை யெடுத்துச் சென்று விட்டார்கள். சிறிது நேரங்கழித்துதான் விஜயபூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த முஸ்லீம் பிரபுவால் கொள்ளையிடப்பட்டுக் கவரப்பட்டுவிட்டதாக ஜீவாஜீ யெங்களிடம் சொல்ல வந்தான். அதே யிரவில் ஜீவாஜியும் நானும் கல்யாண நெருப்பைத் தீண்டி அக்கொடியவனுக்கு இரத்தமயமான மரண மிழைப்பதென சபதங் கொண்டோம். நெடுங் காலங் காத்திருந்த பிறகு எங்கள் சபதத்தினின்றும் விடுபட்டோம். யுத்தத்தில் உயிரைக் கொடுத்த ஜீவாஜியின் ஆன்மாவானது சட்டரீதியாக உன்னை மனைவி யென்று உரிமை பாராட்டுகின்றது.

அமா:—அப்பா! நான் உங்கள் கிருஹத்தின் மத சம்பந்தமான காரியங்களை அவமதித்திருக்கலாம். ஆனால் எனது ஒழுக்கம் மாசுமறுவற்றது. நான் யாரிடம் ஒரு மைந்தனைப் பெற்றேனோ அவரைக் காதலித்தேன். நான் இரண்டு செய்திகளைப் பெற்ற அந்த இரவை ஞாபகப்படுத்திக் கொண்டுவிட்டேன். ஒன்று உங்களிடமிருந்து, மற்றது என் அன்னையிடமிருந்து உங்கள் செய்தி கூறிற்று: "நான் உனக்குக் கத்தி யனுப்பியிருக்கிறேன் அவனைக் கொன்றுவிடு." எனது அன்னையினதோ: "நான் உனக்கு விஷத்தை யனுப்பியிருக்கிறேன். உன் உயிரை முடித்துக்கொள்." ஏதாவது அசுத்தமான சக்தி என்னை அவமதித்திருக்குமானால், உங்களுடைய இரு கட்டளைகளும் நடந்தேயிருக்கும். ஆனால் எனது சரீரமானது காதலுக்காகக் கொடுக்கப்பட்ட பிறகே இணங்கிற்று. முழுதும் பெருமை வாய்ந்த காதல்—மிகவும் தெளிவான காதல், பாரம்பரியமாகச் சுற்றிவந்த நம் வம்சத்தை ஒரு மகம்மதியன் மூலமாக வென்றுவிட்டது!

[அமாவின் அன்னை ரமா வருகிறாள்.]

அமா:—அம்மா! உங்களை நான் மறுபடியும் காணமுடியும் என்று எதிர்பார்த்தேனில்லை. உங்கள் பாதங்களை வணங்குகிறேன்.

ரமா:—சீ! என்னை உன் அசுத்தமான கைகளால் தொடாதே!

அமா:—நான் உங்களைப்போன்று, அவ்வளவு சுத்தமானவள்.

மனத் தூய்மை, ஜீவிய சுத்தம், தெய்வ பக்தி, தேசத் தொண்டருக்கு இன்றியமையா அவசியம்

ரமா:—யாரிடம் உன் மரியாதையை ஒப்புவித்திருக்கின்றாய்?

அமா:—என் கணவரிடம்.

ரமா:—கணவனிடம்? ஒரு முஸ்லிம், ஒரு பிராமண மாதின் கணவன்!

அமா:—நான் அந்த நிந்தனைக்கு அருகதையல்ல. எனது கணவர் முகம்மதியரேயானாலும், நான் அவரை இகழ்ந்து தள்ளிவிடவில்லை. உங்களுடைய பதிபக்திக்காக மோக்ஷலோகம் உங்களுக்குச் சன்மானஞ் செய்யுமானால், அதே மோக்ஷலோகம். உண்மை மனைவியாகிய உங்களுடைய புத்திரிக்காகவும் காத்துக்கொண் டிருக்கிறது.

ரமா:—நீ உண்மையில் கறபுடையவளா?

அமா:—ஆம்.

ரமா:—கூசாது மரணமடையும் மார்க்கத்தை யறிவாயா?

அமா:—ஆம். அறிவேன்.

ரமா.—உனக்காக மரண நெருப்பு மூட்டப்படும். அதோ பார்; உன் கணவனின் உடல் படுத்துக் கிடப்பதை!

அமா:—ஜீவாஜியா?

ரமா.—ஆம். ஜீவாஜிதான். அவரே கண்யமான உண்மைக் கணவர். திருமண தெய்வத்தின் வீணுக்கப்பட்ட நெருப்பானது, சினந்து உபவாசங் கிடக்கும் மரண அக்கினியாகிவிட்டது. நிறுத்தப்பட்ட கல்யாணம் இப்பொழுது முடிவுபெறட்டும்.

விநாயகர்:—அதை கவனிக்காதே குழந்தாய்! நீ உன் மைந்தனிடத்திற்கு. கவலையால் இருண்டு கிடக்கும் உனது சொந்த இடத்திற்குப் போ. எனது கடமையானது அதன் தீவிர முடிவுவரை செய்யப்பட்டுவிட்டது உனக்காகச் செய்யவேண்டியவை ஒன்றும் பாக்கியில்லை.

[மனைவியைப் பார்த்து]

கண்ணே! உனது கவலை பயனற்றது. நமது விருக்ஷத்தினின்று பலாத்காரமாகப் பிடுங்கப்பட்டுவிட்ட கொப்பு, பசுமையற்றுவிட்டதென்றால், அதை நெருப்பி லிட்டுவிடுகின்றேன். ஆனால் அது ஜீவ வேர்களைப் புது மண்ணிற் செலுத்தி, மலர்களோடும் கனிகளோடும் விளங்குகின்றது. அவள் யாரைக் காதலித்தாளோ அக் கூட்டத்திலுள்ளவர்களின் ஆசாரங்களுக்குக் கட்டுப்படும்படி சிறிதும் வருந்தாமல் அநுமதித்து விடு. கண்ணே! வா! நாம் உலக பந்தத்தை யெல்லாம் அறுத்துக்கொண்டு மிஞ்சின நாட்களை ஏதாவது ஒதுக்கமாயுள்ள அமைதியான யாத்ரா க்ஷேத்திரத்தில் கழிப்போம்.

ரமா:—நான் தயாரா யிருக்கிறேன். நமது வாழ்க்கைச் சேற்றில் கிளம்பிய ஒவ்வொரு பாவ வெட்க முளைகளையும், காலடியில் மிதித்து நூறி மண்ணாக்கிவிட வேண்டும். ஒரு பெண்ணின் அபகீர்த்தி அவள் தாயின் மானத்தைக் களங்கப்படுத்துகின்றது. அந்த பயங்கரமான அவமானம் இன்று மின்னும் நெருப்பிற்கு உணவாகிவிடட்டும். ஒரு கற்புடைய மனைவியின் ஞாபகச் சின்னத்தை என் புத்திரியின் சாம்பரின் மீது எழுப்பட்டும்.

அமா:—அம்மா! பலாத்காரமாக நீங்கள் என்னை, என் கணவனல்லாத ஒருவரோடு மரணத்தில் சேர்த்து வைப்பீர்களானால் மரண தேவனின் ஸ்தலத்தை மாசுபடுத்திய சாபத்தை உங்கள் தலையிலேயே போட்டுக்கொள்கிறீர்கள்,

ரமா:—வீரர்களே! நெருப்பை மூட்டுங்கள். இந்த ஸ்திரீயை வளைத்துக்கொள்ளுங்கள்.

அமா:—அப்பா!

விநாயகர்:—பயப்படாதே! ஐயோ குழந்தாய்! உன் அம்மாவின் கைகளினின்றும் காப்பாற்றிக்கொள்ள நீ யெப்பொழுதும் உன் தந்தையை அழைக்கவேண்டி யிருக்கிறது.

அமா:—அப்பா!

விநாயகர்:—அருகில் வா, செல்வக் குழந்தாய்! வெறும் பகட்டு, இந்த மனிதர் செய்த சட்டங்கள். மோக்ஷத்தின் அவசரச் சட்ட

---

அயல் நாடுகளில் குப்பை வண்டி ஓட்டுகிறவன்கூடத் தினசரிப் பத்திரிகைகளை வாசித்துப் பல தேச காரியங்களில் உற்சாகத்தோடு பங்கெடுத்துக்கொள்ளுகிறான். நம் நாட்டில் படித்தவர்களிலும் அநேகர் பத்திரிகைகளைப் படிக்க விரும்புவதில்லை.

இந்தியாவில் வருஷம் ஒன்றுக்கு மதுபானத்தினாலே மாத்திரம் போகிற பணம் 70 கோடி ரூபாய் அல்லது 7000 ஆயிரம் லட்சம் ரூபாய். இந்த ரூபாய்களை வரிசையாய் ஒன்றன்பின் ஒன்றாய் நெடுக வைத்தால் 13,257 மைல் தூரம் நீளமாகும். ஒன்றுக்குமே லொன்றாக அடுக்கினால் 7,900 மைல் உயரமாக உச்சியைப் பார்க்கக்கூடாத வண்ணமாக ஆகாயத்தை அளாவ உயரும்.

மென்ற பாறை மீது தெளிக்கும் நுரையைப் போன்றது இவைகள். உன் மகளை இங்கு கொண்டுவா அமா, நாம் சேர்ந்து வாழ்வோம். ஒரு தந்தையின் அன்பு கடவுளின் மழையைப் போன்று நிதானிக்கப் படுவதில்லை. ஆனால் செழிப்பா யிருக்கும் ஊற்றிலிருந்து கொட்டப்படுகிறது.

ரமா:—நீ எங்கே போகிறாய்? திரும்பு! வீரர்களே, உங்கள் எஜமானர் ஜீவாஜியின் பக்தியில் உறுதியா யிருங்கள். உங்களது கடைசியான பரிசுத்தமான கடமைகளை அவருக்குச் செய்யுங்கள்!

அமா:—அப்பா!

விநாயகர்.—அவளைவிட்டு விடுங்கள்; வீரர்களே, அவள் என் புத்திரி.

வீரர்கள்:—அவள் எங்கள் எஜமானரின் கைம்பெண்.

விநாயகர்:—அவள் கணவன் முகம்மதியனானும்; கொள்கையில் தீவிரமாகவிருந்தான்.

ரமா:—அடக்குங்கள், இக் கிழவரை.

அமா:—உனக்குக் கீழ்ப்படியேன் அம்மா!— வீரர்களே, உங்களுக்கும் பணியமாட்டேன்!— மரணத்தாலும், அன்பாலும் என் சுதந்திரத்தை அடைந்து விடுகிறேன்.

---


சிலோனில் கீழ் குறிப்பிட்டவரிடம்

நமது பத்திரிகையும் பிரசுரங்களும் கிடைக்கும்.

**K. N. Sankaran Pillai,**

**No. 281, 2nd Division,**

**Maradana,**

**COLOMBO.**


---

சென்னை ராஜதானியில் ஏறக்குறைய 20,000 பேருக்கு ஒரு டாக்டர்தானிருக்கிறார். இந்த ராஜதானியில் 4½ கோடி ஜனங்களுக்காக வைத்தியம் சுகாதாரத்திற்கென்று சர்க்கார் வருடம் 1-க்கு 1½ கோடி ரூபாய் செலவு செய்கிறது.

# ஆசிரியக் குறிப்புகள்.

## ஸ்ரீமதி கிருஷ்ணா நேருவின் மணம்

ஸ்ரீமான் ஹதீசிங் என்பவர் ஆமதாபாத்தில் பிரபல ஜெயின குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆமதாபாத் மில்காரர் ஸ்ரீமான் கஸ்தூரி பாய் லால் பாயின் சகோதரியின் புதல்வராவர். கடந்த வருஷம் ஆக்ஸ்போர்டிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்து இப்பொழுது பம்பாயில் பாரிஸ்டராக விருக்கின்றார். இவருக்கும் பண்டித நேரு அவர்களது இளைய குமாரியும் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களது சகோதரியுமான ஸ்ரீமதி கிருஷ்ணா நேரு அம்மைக்கும் மணம் அலகாபாத் ஆனந்த பவனத்தில் எவ்வித ஆடம்பரமுமின்றி சமீபத்தில் நடந்தது. இது காதல் கலப்பு மணமாகும். ஸ்ரீமதி கிருஷ்ணா நேரு காஷ்மீர பிராமண குலத்தைச் சேர்ந்தவர். மாப்பிள்ளையோ ஜைன மதத்தைச் சேர்ந்தவர். இருவரும் வெவ்வேறு மாகாணத்தார்கள். இவர்களிடையில் பொங்கிப் புறப்பட்ட தெய்வீகத் திருக்காதல் வெள்ளம் சாதி சமயம் முதலிய அணைத்தையும் ஒன்றுபடுத்தி இரு உள்ளத்தை ஐக்கியமாக்கி விட்டது. இத் தம்பதிகளுக்குப் பல்லாண்டுகள் கூறுகிறோம். இக் குடும்பத்தாரைப் போற்றுகிறோம்.

பட்டினங்களில் அதுவும் கற்றோரிடையிலும் பணக்காரரிடையிலும் இம்மாதிரியான கலப்பு மணங்கள் எங்கோ நடைபெறுகின்றன. கிராமங்களில் இம் மாதிரி நடப்பதென்றால் சாமான்யமன்று. சமூக பகிஷ்காரத்திற்காக எத்தனையோ யுவர்கள் பயந்துகொண்டிருக்கிறார்கள். ஆண் பெண் காதலுற்றும் ஜாதிக்காகப் பயந்து தங்கள் காதலில் வெற்றி பெறாது வாழ்வை வெறுத்து எப்படியோ நடத்துகிறார்கள் அநேக வாலிபர்கள்.

ஜாதி பேதத்தாலும் மத பேதத்தாலும் நைந்துபோயிருக்கும் நமது இந்தியா, கலப்புக் காதல் மணங்களால் ஒற்றுமையடைய வேண்டியிருக்கிறது. இந்த வுணர்ச்சி நமது நாட்டில் வளர்ந்துகொண்டு வருகிறது. காதல் மணமே பண்டைத் தமிழர்கள் மணமாகும். பெயரளவில் இக் காலத்தில் தமிழர்களா யிருக்கிறார்கள்.

---

ஐரோப்பியர் மாதிரி உடுத்தி யிருப்பவர்களை மரியாதை செய்து சுதேச வஸ்திரம் தரிக்கவர்களை இகழ்ச்சியாய் எண்ணுவது கெட்ட வழக்கம்.

## தமிழ் அன்பர் மகாநாடு

இம் மகாநாட்டின் வேலைகளைப் பற்றிச் சென்ற மாதத்தில் எழுதியிருக்கிறோம். தமிழ் அபிவிருத்தியை நாடி உழைக்க முன்வந்திருக்கும் **தமிழ் அன்பர் மகாநாடு,** சென்னை பச்சையப்ப முதலியார் கலாசாலை மண்டபத்தில் வருகிற டிசம்பர்மீ 23, 24-ம் தேதிகளில் நடைபெறும். திவான் பகதூர் டாக்டர் ராஜா ஸர். அண்ணாமலை செட்டியாரவர்கள் மகாநாட்டை திறந்துவைக்கவும், சென்னை கல்வி மந்திரியான கௌரவம் பொருந்திய திவான் பஹதூர் ஸ்ரீமான் S. குமாரசாமி செட்டியா ரவர்கள் தலைமை வகிக்கவும் அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இம் மகாநாட்டிற்குத் தீர்மானங்கள் கொண்டுவர விரும்புபவர்கள், டிசம்பர்மீ 10உக்குள் அவைகளை மகாநாட்டின் கார்யாலயத்திற்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தமிழ் அபிமானிகள் அனைவரும் இம் மகாநாட்டில் கலந்துகொள்ளுமாறு நாம் வேண்டுகிறோம்.

---

## அடையாறு ஔவையார்

திடமான சரீரத்தையும், தளரா ஊக்கத்தையும், மிகுந்த தைரியத்தையும், விடா முயற்சியையும், இணையற்ற நா வன்மையையும் உயர் உயிர் எழுத்தாற்றலையும் பெற்று விளங்கிய அன்னி பெசண்ட் அம்மையாரா மாண்டார்? தனது 46-ம் வயதில் இந்தியாவின் மண்ணை முதல் முதலாவதாக 1893-ஆஸல் மிதித்து இந்தியாவைத் தன்னது அபிமானத் தாய்நாடாகக் கொண்டு சிறிது காலத்திற்கு முன் வரையில் "ஊழியமே உயிர்" என்று கருதி உழை உழையென்று உழைத்த நமது அடையாறு ஔவையாரா மாண்டார்? பத்திரிகைகளுக்கு மேல் பத்திரிகைகளுக்கும் மாசிகைகளுக்கு மேல் மாசிகைகைகளுக்கும் கட்டுரைகள் எழுதி வந்ததுமன்றி, 400-புஸ்தகங்களுக்கு அதிகமாக எழுதிய அடையாற்றின் ராணியா மாண்டுவிட்டார்? ஆண்டில் முதியவரா யிருப்பினும், உணர்ச்சியில் இளமையுற்ற தலைவியா பிரிந்தார்? ஐயோ! இதை நம்பமுடியவில்லை, அவர் நமக்குச் செய்த தொண்டுகள் அவரை நம்மில் மறக்காது செய்திருக்கின்றன. உண்மையாக அம்மையவர்கள் பூத உடம்பிலிருந்து விடுபட்டு அப்பாலுக்கு அப்பால் அகன்று ஆண்டவன் அடியிணை அடைந்து விட்டார். அன்னிபெசண்ட் அம்மையார் நம்மிடமிருந்து நீங்கி விட்ட இத்துக்க செய்தியைக் கேட்டு அவரது பெயரையும் அவரது

---

இந்தியாவுக்குள் மெய்யான ஐக்கியமுண்டாக வேண்டுமானால், சாதாரண ஜனங்கள் கல்வி கற்று முன்னேற்றமடைவதினால்தான் மெய்யான ஐக்கியமுண்டாகும்.



செய்கைகளையு மறிந்த சகல தேச ஜனங்களும் மிக மிகத் துக்கப்பட்டார்கள்.

ஐரிஷ் பெற்றோர்களுக்கு மகளாய்த் தோன்றி, மனமற்ற மணத்தால் ஏற்பட்ட துன்பங்களைத் தாங்க முடியாது ஒரு சமயம் தற்கொலை செய்யும் நோக்கத்துடன் நஞ்சைச் சாப்பிட எண்ணியதுமன்றி தனது குழந்தையை விட்டு விட்டு வெளியேறி விட்டார். பெற்ற பிள்ளையின் மீது கொண்ட பாசத்தை மாற்றும் பொருட்டு, உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளையும் தனது சொந்தக் குழந்தைகள் போல் கருதினார். இப்படிப் பட்ட இந்த அம்மையாரது வாழ்க்கை வரலாறு ஆச்சர்யமாயிருக்கும்.

பார்லிமெண்டு அங்கத்தினரான பிராட்லா என்பவரோடு கூடி நட்பு பூண்டு அக் காலத்தில் பொது ஜன சேவை செய்தார். "உலகமே எனது தேசம்; நன்மை செய்வதே எனது மதம்" என்பதைக் கடைப்பிடித்து, 1879-ஆஸல் ஆப்கானியர்கள் உரிமைகளுக்காகவும், 1881-ல் திரான்ஸ்வால் இந்தியர் உரிமைகளுக்காகவும், 1882-ல் ஐரிஷ்காரர்களது உரிமைகளுக்காகவும், 1885-ஆஸல் சௌடான் மக்களுக்காகவும் அம்மையார் உழைத்ததை உலகமறியும். மாடம் பிளவட்ஸ்கி அம்மாளது நூற்களைப் படித்து, அவரை வியந்து, அவருடன் பழக்க மிகக் கொண்டு நேசராகிக் கடைசியில் அவருக்குச் சீடருமானார். நாஸ்தீகராயிருந்த அம்மணியார் ஆஸ்தீகராய் மாறி, சமயத்திற்காக அரிய தொண்டு செய்தது ஆச்சர்யமே. அம்மை பிளவட்ஸ்கியின் ஆணையின்படி இந்தியாவில் பிர்ம ஞான சங்கத்தின் கிளையை ஸ்தாபிப்பதற்காகவே 1893-ம் ஆஸல் இந்தியாவிற்கு வந்து சேர்ந்தது முதல் மதம், சமூகம், அரசியல், பொருளாதாரம், கல்வி முதலிய பல துறைகளில் உழைத்து, இத்தேசத்தின் அபிவிருத்திக்கு அரும்பாடுபட்டார். அடையாற்றில் பிர்மஞான சங்கத்தின் கிளையொன்று ஸ்தாபித்து அவரது அபார உழைப்பால், அது அகில மெங்கும் பேர் பெற்று விளங்கியது. சமூகம், சமயம், வகுப்பு முதலிய வேற்றுமைகளின்றி சர்வமத சமரசக் கொள்கையுடன் சகோதர வாற்சல்யத்துடன் எல்லாரும் வாழும்படி தனது பிர்ம ஞான சங்கத்தின் மூலம் உழைத்துச் செய்த தனிப் பெரும் பெருமை டாக்டர் பெசண்டு அம்மையாருக்கே உரியது. இச் சங்கத்தின் மூலமாக பாதகண்டத்தின் கலைகளுக்கும் ஹிந்து மதத்திற்கும் ஒருவித ஆத

---

ஆங்கில பாஷையின் மூலமாய்க் கல்வி கற்று நிறத்திலும் இரத்தத்திலும் இந்தியர்களா யிருந்தாலும், நினைவிலும் உணர்ச்சியிலும், பேச்சிலும் ஆசாபாசங்களிலும் "கருத்த ஆங்கிலேயர்" ஆக நம்மில் சிலர் ஆகியிருக்கிறார்கள்.

ரவை உண்டாக்கி ஹிந்துக்களை விழிக்கச் செய்ததை எவரும் மறக்க முடியாது.

தேசீய முறையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்பதை அநேக ஆண்டுகளுக்கு முன்னரே உணர்ந்து இந்த இயக்கத்தில் தீவிரமாக உழைத்தும், நாட்டின் போதிய ஆதரவின்மையால் இவரது இம் முயற்சி கைவிடப்பட்டது. அம்மையார் காசியில் முதலில் ஸ்தாபித்த சென்ட்ரல் ஹிந்து காலேஜ் இப்பொழுது பண்டித மாளவியாவின் அரும் பெரும் முயற்சியால், காசி ஹிந்து சர்வகலாசாலையாக நூதன உருப்பெற்று கலா கிரணங்களை நாலுபக்கங்களுக்கும் பரப்பிப் பிரகாசித்துக்கொண் டிருக்கிறது. மதனபள்ளியிலிருக்கும் காலேஜும் அவராலே ஏற்பட்டதாகும். மதனபள்ளிக்குச் சமீபத்தில் ரிஷி வாலி (Rishi Valley) என்ற பெயருடன் அவரால் ஸ்தாபிக்கப்பெற்ற தேசீயப் பள்ளி நல்லதொரு குருகுலமாக ஜ்வலிக்கிறது. தேசீய சர்வகலாசாலை (National University) என்பது மறைந்துவிட்டாலும், அதன் பெயர் இன்னும் மறக்கப்படவில்லை. அம்மையார் எழுதி வெளியிட்ட தேசீயக் கல்வியைப் பற்றிய புஸ்தகங்கள் நமக்கு நாட்டுக் கல்வியில் புத்துயிர் அளித்துக் கொண்டிருக்கின்றன. அம்மையாரின் பண உதவி பெற்றுப் படித்து முன்னுக்கு வந்தவர்கள் முக்கியமாக இம் மாகாணத்திலும் இந்தியாவின் பல பாகங்களிலும் இன்று அம்மையாரின் உதார குணத்திற்காகச் சாட்சிகளாக நிற்கிறார்கள்.

மாதர் முன்னேற்றத்திற்காக அவர் செய்த வேலைகள் கொஞ்சமல்ல. படித்த மாதர்களுக்கு ஒரு நூதன எழுச்சியை உண்டாக்கியவர் அவரே. இத் தலைமுறையில் உலகப் பெண்மக்களில் டாக்டர் அன்னி பெசண்டு அம்மையாரே முதன்மையான ஸ்தானம் வகித்தார் என்பதை எவரும் மறுக்க முடியாது. தொழிலாளர்களுக்கும் அம்மையார் அதிகமாய் உழைத்திருக்கிறார்.

1913-ம் வருஷத்தில் பெசண்டு அம்மாள் மிக மிக ஊக்கத்துடன் இந்திய அரசியல் கிளர்ச்சியில் ஈடுபட்டார். 1905-ம் ஆண்டில் கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் தாதாபாய் நௌரோஜிப் பெரியார் கூறிய "சுயாட்சி நமது பிறப்புரிமை" என்ற தேசாபிமான மந்திரத்தை நமது நாடெங்கும் ஓதி "ஹோம் ரூல்" இயக்கத்தை ஆரம்பித்து, தேச மஹாஜனங்கள் மனதில் தேசாபிமானப் பயிரை வேரூன்றும்

$6\frac{1}{4}$ கோடி ஜனங்களுக்கு மேல் முற்றிலும் தடுக்கக்கூடிய நோய்களினால் நமது தேசத்தில் 10 வருடத்தில் ஜனங்கள் மாண்டுபோயிருக்கிறார்கள். இது பரிதாபம்.



படி செய்தவர் யாரென்றால் டாக்டர் பெசண்டு அம்மையார் என்றே பதில் கிடைக்கும். அவர் ஆரம்பித்த "நியூ இந்தியா" என்ற ஆங்கில தினசரிப் பத்திரிகையும் நாட்டிற்கு நல்ல சமயத்தில் நல்ல தொண்டு புரிந்தது. அப் பத்திரிகைக்கு அப்பொழுதிருந்து வந்த செல்வாக்கு வேறெந்த இந்தியப் பத்திரிகைகளுக்கும் இதன் முன்னிருந்ததில்லை யென்று தைரியமாய்ச் சொல்லலாம். அரசியற் பேச்சுக்களிலும் வாதங்களிலும் பத்திரிகைகளிலும் அச்சத்தை அகற்றுவதற்கு அடி கோலியவர்களில் அவரே முதல்வராவர். இந்திய ராஜீய விஷயத்தில் அம்மையார் பிரவேசித்த பொழுது, ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பமாயிற்று. இந்தியாவில் சுதந்திர உணர்ச்சி வலுப்பெற்று வருவதை அறிந்து அச்சங் கொண்டு அதை அடக்கும் பொருட்டு பம்பாய், மத்திய மாகாணம் ஆகிய இரு மாகாணங்களின் எல்லைகளுக்குள் அம்மையார் பிரவேசிக்கக் கூடாதென் தடை செய்யப்பட்டார் மற்ற கவர்ன்மெண்டாரைக் காட்டிலும் ஒருபடி முன்சென்று, சென்னைக் கவர்னர் லார்ட் பென்ட்லண்ட், அம்மையாரையும்அவரது சகாக்களான ஸ்ரீமான்கள் அருண்டேல், வாடியா ஆகிய இருவர்களையும் பாதுகாப்பில் வைத்தார். இதனால் நாடெங்கும் கிளர்ச்சி யுண்டாகவே, சர்க்கார் தங்கள் கொள்கைகளை மாற்றி, அவர்களை விடுதலை செய்தார்கள். இந்தியர்கள் தங்கள் நன்றியறிதலை அவருக்குக் காட்டும் பொருட்டு, அந்த வருடத்தில்அதாவது 1917-ம் ஞூல் கல்கத்தாவில் நடைபெற்ற இந்திய தேசீய மஹா சபையின் அரியாசனமாம் பொன்னாசனத்தில் அக்ராசனராக அவரை அமர்த்தி அபார அன்பைக் காட்டிக் களித்தார்கள். அக் காலத்தில் அவருக்கிருந்த அபாரச் செல்வாக்குச் சிறப்பைச் சொல்லிமுடியாது. அந்நிய நாட்டில் பிறந்தவரா யிருப்பினும், சத்தியத்திற்காகவும் நியாயத்திற்காகவும் பாடுபட்ட படியால், இந்தியர்கள் அவரை வானளவு தூக்கி மகிழ்ந்து, புகழ்ந்து கௌரவித்தார்கள். 1908-ம் ஞூலிருந்து இந்திய தேசீய காங்கிரஸ் மகா சபையில் உண்டாயிருந்த வேற்றுமைகளை நீக்கி, ஐக்கியப் படுத்தி ஹிந்து முஸ்லீம் மாற்சல்லியங்களையும் மாற்றி ஒற்றுமை உண்டாக்கி "அகில இந்திய ஹோம் ரூல் லீக்" என்ற பெயருடன் ஒரு சங்கத்தை ஏற்படுத்தி இந்தியத் தலைவர்களனைவரையும் சேர்த்து இந்தியா முற்றிலும் செய்த சுத்த சுதந்திர வேலையைப் பற்றி இந்தியா விடுதலை சரித்திரம் எழுதப்படுங்கால், பொன்னெழுத்துக்களால் எழுதப்பெறும்.

இந்தியாவின் 35 கோடி மக்களின் பூரண மதிப்பையும் ஆதரவையும் தனது விடா முயற்சியாலும் அபார உழைப்பாலும் மிக

நமது நாட்டில் பிறந்திருக்கிற குழந்தைகளில் மூன்றில் ஒரு பங்கு ஒரு வயதுக்குள்ளே மாண்டுபோகின்றன.

விரைவாகப் பெற்றுக்கொண்ட அன்னை பெசண்டு அம்மையார் அவ்வளவு செல்வாக்கினையும் தனது போக்கால் மிகவும் விரைவில் இழந்துவிட்டது வருந்தத்தக்கதே யாகும். மகாத்மா காந்தி அவர்களால் ஆரம்பிக்கப் பெற்ற ஒத்துழையாமை இயக்கம் இந்திய ஜனங்களின் மனதைக் கவர்ந்துவிட்டதின் காரணமாக அவருடைய செல்வாக்குக் குறைய ஆரம்பித்தது. இன்னும் மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் வெளிவந்தவுடன் டாக்டர். அம்மையாரின் எண்ணம் எக் காரணத்தாலோ மாற்றம் அடைந்துவிட்டது. அந்த இரட்டை ஆட்சியை தேச மக்கள் பகிஷ்கரிக்க வேண்டு மென்பதைத் தாக்கினார். சட்டமறுப்பு வந்தவுடன் காங்கிரஸிலிருந்து விலகிக்கொண்டார். தேச மக்களின் மனோ நிலையை அறிந்து அதற்குத் தகுந்தபடி தனது போக்கை மாற்றிக்கொள்ளாது "உத்திரவு செய்வதே தலைவர் கடமை" என்று சொல்லிக்கொண்டு உடும்புப் பிடிவாதமா யிருந்ததால், அவருக்குக் கிட்டியிருந்த மகோன்னத செல்வாக்கை இழந்து காந்தியின் கதிர்களால் மறைக்கப்பட்டார்.

எப்படியிருந்தாலும் இருக்கட்டும். 10,000 கணக்கான மக்கள் கூடியிருக்கும் கூட்டங்களில் உணர்ச்சியுடன் உள்ளம் உருகப் பேசினதை இந்தியா ஒருநாளும் மறக்காது. அவருடைய வாழ்க்கையில் நாம் அநேக பாடங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவர்களா யிருக்கிறோம். விருந்தினர்களை உபசரிப்பதில் அவருக்கு இணை அவர்தான். அவரைப் போன்று பற்பல நூற்களை எழுதியவர் உலகில் வேறு பலர் இருப்பார்களா வென்று சந்தேகிக்கிறோம். சோம்பலென்பது அவரிடம் சிறிதும் குடிகொள்ள இடமே யில்லை. "உணர்ச்சியின் எரிமலை" என்று அவருக்குச் சொன்னாலும் தகும். அவருடைய நிர்மாண சக்தி வியக்கத் தகுந்தது. அவருடைய கட்டுப்பாடான வேலைகளும் அபாரப் பிரச்சாரமும் சேர்ந்துதான் அசையா ஆங்கில அரசாங்கத்தை ஆட்டிவிட்டது. அவருடைய அறிவின் ஆற்றலை விளக்குவதற்கு இன்று பல சான்றுகள் மலிந்துகிடக்கின்றன. அவர் பல துறைகளில் பிரவேசித்து உழைத்ததால், அவருக்கு அநேக பகைவர்கள் இருக்கக்கூடும். எனினும் அவரது எதிராளிகளும் கண்டு வியந்து போற்றக் கூடிய அநேக உயரிய நற்குணங்கள் சக்திகள் அம்மையாரிடம் அமைந்துகிடந்தன. அவர் தெய்வாம்சம் பொருந்தியவர் என்றே சொல்லல் வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உலகப் பெரியார்களில் அவரும் ஒருவர் என்பதை எல்லாரும் அங்கீகாரம் செய்வார்கள்.

---

நமது நாட்டில் கட்டாய பொதுஜனக் கல்வி இல்லாமலிருக்கும் வரையில் தேசாபி விருத்தி யென்பது பகற் கனவே யாகும்.



படுத்த படுக்கையில் பல நாளிருந்து 20—9—1933-ல் புதன் கிழமை மாலை 4-மணிக்குத் தனது 86-வது வயதில் சமாதி யடைந்தார். தேச பக்தர் சென்குப்தா அவர்கள் இறந்த துக்கம் இனியும் நமக்கு மாறுமலிருக்கும் பொழுதே, அம்மையாரும் அதே வழிசென்றார். விதி வலிது. என் செய்வோம்! நமக்கும் அதுவே வழி. மேலான தேச பக்தி, மனோதைரியம், தியாக வீர உணர்ச்சி, விரிந்த நோக்கம், மதிநுட்பம், சர்வமத சகோதர உணர்ச்சி, நிர்மாண சக்தி, நாவன்மை, எழுதும் சாமர்த்தியம், கம்பீரம், சீர்திருத்த உணர்ச்சி ஆகிய இவை போன்ற அநேக அருங்குணங்கள் அமையப்பெற்ற விலை மதிக்கொணா மணியை இனி என்று காண்போம்! இவரது பிரிவால் ஏற்பட்ட நஷ்டத்தை உலகமாதா எவ்வாறு ஈடுசெய்யப் போகின்றாளோ? அறியோம்! அம்மையாரின் ஆத்மாவுக்கு சாந்தி, சாந்தி!

---

## காந்தி மகாத்மாவின் ஜயந்தி

"உலகமே எனது தேசம்; சத்தியமே எனது மதம்" என்பதைப் பின்பற்றி நடக்கும் காந்தி யடிகளது 65-வது பிறந்த தினத்தை சாதி, சமயம், கட்சி முதலிய வித்தியாசமின்றி, இந்திய மக்கள் அனைவரும் கொண்டாடினார்கள். கடல்கள் கடந்து அயல் நாடுகளில் வாழும் நமது இந்தியச் சகோதரர்களும், அயல் நாடுகளில் வசிக்கும் இந்தியா அனுதாபிகளும் சுதந்திரப் பிரியர்களும், சுதந்திர வீரர்களும், காந்தி பக்தர்களும், அறிஞர்களும் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள். அவரது ஜீவிய வரலாற்றை எல்லாரும் நன்கு அறிவார்களாகையால், அதை இங்கு சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவரது வாழ்வில் அவர் செய்ததெல்லாம் ஆராய்ச்சிகளே. ஆகையால் அவரது ஜீவிய சரித்திரத்திற்குச் "சத்திய சோதனை" என்று பெயர்.

மகாத்மா காந்தி ஓர் அவதார புருடர்—அஹிம்ஸா தர்மத்தை உபதேசம் செய்யும் தர்மமூர்த்தி—சத்தியத்தைப் போதிக்கும் சற்குரு—தீனபந்து—சத்தியாக்கிரகத் தளகர்த்தர்—தொண்டர் தொண்டன் ஆக விளங்குகிறார். யேசுநாதரின் அன்பும்—முகம்மது நபியின் சமத்துவமும்—புத்தபிரானின் ஜீவகாருண்யமும்—கண்ணபிரானது ராஜ தந்திரமும்—சங்கரனின் மூளை வன்மையும்—ஜனகரது பற்றின்மையும்—மகரிஷிகளது துறவும் கொண்ட பெரியார் நமது அடிகள். சத்தியத்தையே கடவுளாகக் கருதி வணங்கும் ஞானி. உழைப்பில்

---

நம் தேசத்தில் ஏராளமான ஜனங்கள் பேசும் ஹிந்தி பாஷையை நமது நாட்டின் பொது பாஷையாக்க நாம் உழைக்க வேண்டும்.

ஒரு பெரிய கர்மயோகி. பல வருடங்களாக பாதிப் பட்டினியாய் வறுமையால் வாட்டப்படும் ஏழை இந்திய மக்களுக்கு ராட்டின மந்திரத்தை உபதேசித்ததின் பெருமையைப்பற்றி எவ்வாறு கேவலம் எழுத்துகளால் அவரைப் போற்றுவது? கெட்ட செயலை வெறுத்து ஆளை நேசிக்கும் இம் மேலான தூய குணத்தை இவரிடத்தில் தவிர்த்து, வேறு எவரிடத்தில் உலகத்தில் காண முடியும்? பாஞ்சால நன்னாட்டில் படுகொலை செய்யும்படி தூண்டின டையரையும் அவர் நேசிக்கிறாரென்றால், அவரது வையமளாவிய அன்பை எவ்வாறு கூறுவது? இவரது போக்கில் மாறுபட்டவர்களும் இவரது தூய குணங்களைக் கண்டு போற்றி வணக்கம் செலுத்துகிறார்களென்றால், இவரைப்பற்றி அதிகம் என்ன எழுதுவது?

“இந்தியாவின் லட்சியத்திற்கு மகாத்மா காந்தி ஒரு அறிகுறியாக விளங்குகிறார். வெற்றி யேற்படும் வரையில் பணிய முடியாது என்பது இந்தியாவின் லட்சியம். அந்த லட்சியத்தையே காந்தி பின்பற்றி நடக்கிறார். ஊழியமே அவரது உயிர். வானம் இடிந்து விழினும் அஞ்சா நெஞ்சர். ஆகையால் அவரை ஒரு உத்தமர் என உலகம் மதித்துப் போற்றுகின்றது” என்று பேர்போன பத்திரிகா நிருபர் பிரேயில்ஸ் போர்டு கூறுகிறார். புத்தபகவான், கிறிஸ்துநாதர், முகம்மது நபிநாயகம், ஹிந்து மகரிஷிகள் ஆகிய பெரியார்கள் போதித்த உண்மைகளையே அடிகளும் போதித்து வருகிறார். இதற்கென்ன சந்தேகம்?

நமது தேசம் அடிமையுற்று வருந்துவதைக் கண்டு வருந்தி, சத்தியத்தின் மூலமாய் அதை விடுவிக்க வேலை செய்துகொண்டிருக்கிறார். கஷ்டப்படும் உலக மக்கள் அனைவருக்காகவும் வருந்துகிறார். “இவர் இந்தியப் பெரியாரன்று; உலக மக்கள் அனைவரையும் உய்விக்க வந்த அவதார புருஷர்” என ரோமெயின் ரோலண்டு என்னும் பிரான்ஸ் அறிஞர் கூறுகிறார். அடிகளால் ஆற்றிய அருந்தியாகம்—தொண்டு உலகத்தார்களது மனதைக் கவர்ந்துவிட்டது. உலக உத்தாரணத்தின் பொருட்டுத் தோன்றிய 2-வது கிறிஸ்து என்று இவரை ஏன் சொல்லக்கூடாது?

இவர் சிறப்பாக இந்தியாவுக்கும் பொதுவாக உலகத்திற்கும் ஆற்றிய தொண்டுகள் பலப்பல இவரால் உலகத்திற்கு ஒரு புதிய சகாப்தம் ஏற்பட்டிருக்கிறது, “யுத்த மேகம் குவிந்து நிற்கும் இக் காலத்தில், மனிதன் தன் சகோதர மனிதனை நசுக்கக் கங்கணம் கட்டி நிற்கும் இக் காலத்தில், நசுக்குண்டவர்கள் பலாத்காரமே

---

நம் கிராமங்களில் ஐக்கியமின்மையால் கட்சிகள் வளர்ந்துகொண்டு வருகின்றன.



உற்ற வழியென்று கருதி, அதனைக் கைக்கொண்டு விடுதலை பெற முயற்சிக்கும் இக் காலத்தில், மகாத்மாஜீ! தர்ம தேவதையின் முன்னர் அன்பு மயமாய் விளங்கும் தாங்கள் செய்யும் தியாகம் அபூர்வமாகும்” என உலகப் பெரியார் ரோலண்டு அவர்கள் அடிகளுக்கு எழுதியது கவனிக்கத்தக்கதாகும். அரசியல் சுதந்திரத்தைக் காட்டிலும் அஹிம்ஸா தர்மத்திலிருந்து பிறழாதிருத்தலே மேலானது என்று அடிகளார் எண்ணுகிறார்.

ராஜீய, சமூக, பொருளாதார, சமூக சீர்திருத்த முதலிய எல்லா விஷயங்களுக்கும் எவ்வித வித்தியாசமின்றி உழைத்தார், உழைக்கிறார் மகாத்மா. கொஞ்சகாலமாகத் தீண்டாமையில் பிரத்தியேகக் கவனம் செலுத்தி வருகின்றார். ஹரிஜனங்களுக்காக உண்ணா நோன்பிருந்து, கடைசியில் சர்வசங்கப்பரித் தியாகம் செய்துவிட்டார். இதற்காக உயிரைக்கூட விடத் தயாராயிருக்கிறார். இதனால் ஒடுக்கப்பட்ட சகோதரர்கள் மீது நம்மவர்கள் அதிகக் கவனம் செலுத்த ஆரம்பித்திருக்கிறார்கள், சிலர் அவர்களுக்குச் சமத்துவம் கொடுத்து அன்பு காட்ட முன் வந்திருக்கிறார்கள். சபர்மதி முனிவரது ஆழ்ந்த உழைப்பால் தீண்டாமையென்னும் மாசு நமது நாட்டை விட்டு அகன்றுவிடுமென்று நம்புகிறோம்.

அயல் நாட்டினர்களும் அடிகளாரை அதிகமாய் மரியாதை செய்யும்பொழுது, அவர் பிறந்த நாடாகிய நமது தேசத்தவர்கள் அவரை முற்றிலும் அனுஷ்டானத்தில் பின்பற்றாதது வருந்தத்தக்கதாகும். அவருக்கு கிடைத்த பெருமை வேறு எந்தத் தலைவருக்கும் எப்பொழுதேனும் அவர்கள் வாழ்நாட்களில் ஏற்படவில்லை. தேசாபிவிருத்திக்காக அல்லும் பகலும் அனவரதமும் உழைத்துக்கொண்டிருப்பவருக்குக் கைம்மாறாக நாம் கதர் உடுத்தல், மதுவிலக்கு, தீண்டாமை விலக்குப் பிரச்சாரங்கள் செய்தல் ஆகிய இவைகளையாவது குறைந்தது செய்யக்கூடாதா? கோடிக் கணக்கான நமது சகோதரர்கள் உண்ண உணவின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, பல கோடி ரூபாய்கள் துணிக்காக நமது நாட்டைவிட்டு வெளி நாடுகளுக்குப் போய்க்கொண்டிருக்கும்பொழுது, நமது நாட்டுத் தொழிலாம் நெசவுத் தொழில் நாசமடைந்துகொண்டு வரும்பொழுது, நாட்டில் சுதேசியம் குறைந்துகொண்டிருக்கும்பொழுது, தேச பக்தியுள்ள எந்த இந்தியராவது அயல்நாட்டுத் துணிகளை வாங்குவாரா? நம் நாட்டுப் பொருள்களை வாங்கவேண்டுமென்று சுதேசி விரதத்தை நாம் ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும். வெறும் வாய்ப் பேச்

---

நமது தேசத்தில் செய்யப்படும் பொருள்களை வாங்குங்கள். சுதேசி விரதம் பூண்டு சுதேசியத்தை வளருங்கள்.

சால்—மேடைப் பிரசங்கங்களால் மட்டும் தேசாபிமானத்தைக் காட்டாது ஒவ்வொரு வரும் செயலில் காட்டவேண்டும். ஆயுதபாணிகளான சர்க்காரை நிராயுதபாணிகளாகிய நாம் வெல்லலாமென்று நமக்கு தைரியத்தை உண்டுபண்ணினார். இது பேராச்சிரியம். ஆனதால் நமது விடுதலைப் போராட்டத்தை உலகமே கவனித்து வருகிறது. நாம் காந்தி அடிகள் போதனைகளின்படி நடந்து நமது சுயராஜ்யத்திற்குத் தடைகளா யிருப்பவைகளைத் தகர்த்தெறிவது நம்மில் ஒவ்வொருவரது கடமையாகும் என்பதை நாம் ஒருக்காலும் மறக்கவே கூடாது.

கதர் கட்டுங்கள்; கட்டும்படி செய்யுங்கள்! தீண்டாமை விலக்குங்கள்; தீண்டாமையை விலக்கும்படி செய்யுங்கள்! சுதேசி விரதத்தை அனுஷ்டியுங்கள்; சுதேசி விரதத்தை அனுஷ்டிக்கும்படி செய்யுங்கள்! தேசாபிவிருத்திக்கான எல்லா வழிகளிலும் உழையுங்கள்; மற்றவர்களையும் தேசாபிவிருத்திக்காக எல்லா வழிகளிலும் உழைக்கும்படி செய்யுங்கள்! இப்படிச் செய்வதே காந்தி அடிகளின் ஜயந்தியை உண்மையில் கொண்டாடுவதாகும்.

செயற்கரிய செயலைச் செய்யும் பெரியாரான காந்தி அடிகள் இனியும் பல ஆண்டுகள் சுகமுடன் வாழ்ந்து, நமது நாட்டிற்கும் உலகத்திற்கும் பற்பல துறைகளில் அநேக தொண்டுகள் புரியும்படி அருளுமாறு எல்லாம் வல்ல கடவுளைப் பிரார்த்திக்கிறோம்.

காந்தி வாழ்க வாழ்க! காந்தீயம் வளர்க வளர்க!

## தலைவர் படேல் மறைந்தார்

கேட்கவும் மனம் பதைபதைக்கின்றது! மனம் கொல்லனுலைபோல் கொதிக்கிறது! நாடிகள் தளர்ந்து போகின்றன! கண்கள் பஞ்சடைகின்றன! எழுதவும் கை நடுங்குகிறது! என்ன எழுதுவதென்று தெரியவில்லை! எழுதுகோல் அசைய மாட்டேன் என்கிறது! ஆ! அகில பாரத நாடும் ஓவோவென்று கதறித் திகிலடைந்து, பதறி, நடுக்குற்று ஐரோப்பாக் கண்டத்தில், ஆஸ்திரியா நாட்டின் வீயன்னா நகரத் திக்கை நோக்கி நிற்கிறது. நமது அருமைத் தலைவர், உலகம் போற்றும் உத்தம நியாயவாதி, பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே மெச்சும் சட்டசபைத் தலைவர், கவர்னர் ஜெனரல் போன்றவர்களுக்கும் சற்றும் அஞ்சா நெஞ்சு படைத்த வீராதி வீரர், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர், திருமிகு வித்தல்பாய் படேல் அவர்கள் விண்ணுற்றார்! அந்தோ! 36 கோடி பாரத மக்களையும் தவிக்கவிட்டு எங்கு சென்றிருக்கிறார்! தலைவர்களான தாதாபாய் நௌரோஜி,

அடிமைச் சிந்தனையினால் தோன்றும் பயத்தைத் தொலைத்துவிடுங்கள்.



கோகலே, திலகர், தாசர், நேரு முதலியோர்களுடன் ஏதேனும் நாட்டுக்குரிய புதிய திட்டத்தைப்பற்றி கலந்து ஆலோசித்து வருவதற்கு சென்றிருக்கிறாரோ! படேல், படேல் என்று உலகப் பத்திரிகைகளெல்லாம் பரிதவித்துப் பறக்கின்றனவே! ஐயோ ஐயோ! சட்டசபைப் படேல் இறந்தார்! அதிகாரத்திற்குச் சற்றும் அஞ்சா நியாயாதிபதி மறைந்தார் என்று உலகமே வாடுகின்றது! பாரத நாடு ஒரு உண்மைக்குப் புதல்வரை இழந்து வருந்துகிறது! குஜராத் ஒரு தவக் குமாரரை பறி கொடுத்துப் பரிதவிக்கின்றது! 100 வருடங்களுக்கு முன்பு இங்கிலாந்தில் நமது நூதன இந்தியாவின் தவத் தந்தையாம் ராஜாராம் மோகன் ராய் மரித்தார்! இரண்டாவதாக மௌலானா முகம்மதலி லண்டனில் மாண்டார். மூன்றாவதாக நமது தலைவர் வீயன்னா நகரில் மறைந்தார். இவ்வாண்டில் தேசீய வீரமணிகளான ஹாசன் இமாம், அலி இமாம் என்ற இரு சோதரர்களைப் பறி கொடுத்தோம்! வங்க ரத்தினம் சென்குப்தாவையும் இழந்த துயரம் இனியும் மாறவில்லை! இதற்குள் பெசண்டு அம்மையார் நம்மைவிட்டுப் பிரிந்தார்! இவ்விரு துக்கங்களும் தீருவதற்கு முன்னரே இப்பொழுது நமது அரிய பிரிய தலைவர் வித்தல்பாய் படேல் 22—10—1933ல் அந்தோ, நம்மைவிட்டு அகன்றார்!

அவர் சரிதையைச் சுருக்கமாகக் கேளுங்கள். குஜராத்தில் பிறந்தவர். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்து சென்று பயின்று பாரிஸ்டர் பட்டம் பெற்றவர். பம்பாய் ஹை கோர்ட்டிலே தனது தொழிலை வெற்றியுடன் செய்து வந்தவர். லோகமான்ய திலகருடன் தேசீய விஷயத்தில் ஒத்துழைத்தவர். ஹிந்துக்களுக்குள் கலப்பு மணத்திற்கு ஆதரவு வேண்டும் என்பதற்கு ஒரு மசோதா கொண்டுவந்து நிறைவேற்றிய அவ்வளவு சீர்திருத்தவாதி. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியா யிருந்தவர். அவ்வருடத்தில் (1919) காங்கிரஸ் தூதுக் கூட்டத்துடன் இங்கிலாந்து சென்று அரும் பாடுபட்டவர் மாண்ட்போர்டு சீர்திருத்தங்களுக்குப் பிறகே சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து உழைத்தவர். 1924-ம் ஸால் பம்பாயின் நகரசபைத் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பெற்றவர். அப்பொழுது அங்கு அவர் காட்டிய நிர்வாக ஆற்றலும் தைரியமும் போற்றற்குரியது. லார்டு ரீடிங் வைஸ்ராயா யிருந்தபொழுது, ஒரு உபசாரப் பத்திரம் வைஸ்ராய்க்குப் படித்துக்கொடுக்க வேண்டுமெனத் தீர்மானம் பம்பாய் கார்ப்பரேஷன் செய்தது. தலைவர்தான் இந்த வேலையைச் செய்வது வழக்கம். தன்னால் படித்துக் கொடுக்க முடியாதென்று மறுக்கவே, கண்டனத் தீர்மானம் நிறைவேற்றியதால், படேல் தனது தலைமைப் பதவியை ராஜிநாமா செய்துவிடவே, திரும்பவும் அவரே, தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டு வந்தார்.

என்னே இவரின் தீரம்! தேச பக்தி! இந்திய சட்டசபைக்குத் தெரிந்தெடுக்கப்பெற்ற தலைவர் முதல் முதலாவது படேல் அவர்களே யாகும். இரு முறை அத் தலைமைப் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பெற்றால், இவரது செல்வாக்கைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? திருமிகு படேல் சட்டசபையில் தான் தலைவராயிருந்த பொழுது, கட்சி பேதத்தையும் பற்றினையும் முற்றிலும் மறந்து, எந்த விஷயத்திலும் நடுநிலை பிறழாது, நியாயம் வழங்கி, அந்த இந்திய சட்டசபைத் தலைவர் ஸ்தானத்திற்கு அளவற்ற புகழும் கௌரவமும் சம்பாதித்துக் கொடுத்த தனிப்பெரும் உயர் பெருமை படேல் அவர்களுக்கே உரியது. அப்பொழுது இந்திய சர்க்காரை நியாயத்தால் ஆட்டி ஆட்டி அவதிப்படுத்திவிட்டார். லார்டு இர்வினிடம் அவருக்கு அதிகம் செல்வாக்குண்டு.

மீரத் சதிவழக்குக் கோர்ட்டில் நடக்கும் பொழுது, போல்ஷ்விக் பிரச்சாரத்தைத் தடுக்கும் பொருட்டு ஒரு மசோதாவை (The Dreaded Public Safety Bill) சர்க்கார் கொண்டுவரவே, அந்த விஷயத்தைக் குறித்துச் சட்டசபையில் வாதம் செய்தால், கோர்ட்டிலிருக்கும் அவ் விஷயத்தைக் குறிக்கும் வழக்கிற்குப் பாதகம் உண்டாகுமென்று கூறி, அந்த மசோதாவைத் தள்ளிவிட்டார். இதுவன்றோ சட்ட ஞானம்! இந்திய சட்டசபை அதிகாரம் சட்ட இலாகாவின் ஆதீனத்திலிருந்ததைத் தலைவரின் நேரான அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது இவரே. அரசியல் புரட்சி வாலிபர்கள் சட்டசபைக் கூட்டத்தில் வெடிகுண்டெறிந்ததற்குப் பிறகு கூடிய சட்டசபைக் கூட்டத்தில், டில்லி போலீஷ் கமிஷனர் சட்டசபைத் தலைவரின் அனுமதியின்றிச் சட்டசபையில் போலீஸ்காரர்களை நிரப்பிக் காவல் புரியுமாறு செய்தார். அப்பொழுது அவர் அங்கத்தினரல்லாத அனைவரையும் ஹாலைவிட்டு வெளியே போகும்படி உத்திரவு செய்து, போலீஷ் கமிஷனர் எதேச்சாதிகாரத்தை அடக்கித் தலைவரின் கௌரவத்தை நிலைநாட்டினார். தனது உத்திரவின்றி ஒரு படத்தைத் திறந்துவைக்க வைஸ்ராய் அங்கு சென்றபொழுது, தலைவர் படேல் அவரையும் தடுத்துவிட்டாரென்றால், அவருடைய தீரமே தீரம். ஏற்பட்டபடி விண்ணப்பம் தலைவருக்கு அனுப்பாது, சட்டசபை நடவடிக்கைகளைப் பார்க்கச் சென்ற சைமன் கமிஷன் அங்கத்தினர்களையும் அனுமதிக்கவில்லை. அப்பால் சைமன் கமிஷன் மெம்பர்கள் வழக்கம்போல் தலைவருக்கு விண்ணப்பம் செய்து, அனுமதி பெற்று அங்கு சென்றார்கள். இந்திய சட்டசபா மண்டபத்திலுள் அதன் தலைவருக்கே எல்லா உரிமைகளும் அதிகாரமும் உண்டாகும்படி படேல் செய்ததை எவரும் போற்றாமலிருக்க முடியாது. பழைய ரிசர்வ்பாங்க் மசோதா வாதத்திலிருக்கும் காலத்தில் புது ரிசர்வ்பாங்க்



மசோதாவைப் பிரேரிப்பது சரியல்லவென்று தலைவர் படேல் தடுத்து விட்டார். இது இந்திய சர்க்காரைத் திடுக்கிடும்படி செய்தது. சேனாதிபதி தனாதிமந்திரி முதலிய நிர்வாகிகள், தங்கள் தங்கள் இலாகாவைச் சேர்ந்த விஷயங்கள் வாதிக்கப்படும் பொழுது, அவைகளைச் சம்பந்தப்பட்டவர்கள் சட்டசபையில் ஆஜராயிருக்க வேண்டியதவஸியம். அவர்கள் இவ்விதமாக நடக்காததால், அவர்களைக் கண்டித்ததுமன்றி அவர்களையும் மன்னிப்புக் கேட்கும்படி செய்தார். இவர் செய்த தீர்ப்புக்களெல்லாம் நியாயமானவைகளே. அரசியல் ஞானத்திலும் ராஜ தந்திரத்திலும் பெரிய சபைகளை நடத்தும் சாமர்த்தியத்திலும் படேலுக்குச் சமானமானவர்கள் எங்கோ சிலர் இருக்கலாம். இவர் தலைவராயிருந்து செய்த தீர்ப்புக்களை அயல் நாட்டுப் பார்லிமெண்டுகளின் தலைவர்களும் அங்கத்தினர்களும் பிரிட்டிஷ் பார்லிமெண்டு மெம்பர்களும், பால்டுவின், சர்ச்சில் போன்ற ராஜதந்திரிகளும் ஆவலுடன் படித்து மகிழ்வதுண்டு.

திரு. படேல் மெம்பராய் இருப்பதைக் காட்டிலும், தலைவராய் இருப்பதால் அதிக ஆபத்தில்லையென்று சர்க்கார் நம்பியது. கர்ச்சனை செய்துகொண்டிருக்கும் சிங்கம் தலைவர் என்னும் கூண்டில் அடைக்கப்பட்டது. ஒரு மிருகேந்திரன் அடைக்கப்படலாம்; ஆனால் அதன் வீர கர்ஜனையை அடைக்கவோ அடக்கவோ முடியாது. அடைபட்ட சிங்கத்தின் முழக்கமும் திகிலை அதிகமாய் உண்டுபண்ணும். அவர் அங்கத்தினராயிருந்ததைக் காட்டிலும் தலைவராயிருக்கும் பொழுது சர்க்காருக்கு அதிக இடைஞ்சலாய் இருந்தார். அவர் உண்மையாகவே சேனா வீரர். எப்பொழுது சண்டை செய்ய வேண்டும், எப்பொழுது சமாதானமாயிருக்க வேண்டும் என்று அவருக்கு நன்கு தெரியும். எப்பொழுது கீழ்ப்படிவது, எப்பொழுது அதிகாரம் செலுத்துவது என்பதையும் அவர் அதிகமாய் அறிவார். அவர் போற்றப்பட்டார், கண்டனம் செய்யப்பட்டார், மறுபடியும் போற்றப்பட்டார். இவை ஒன்றையும் அவர் கவனிக்க மாட்டார். காரியமே அவருக்குப் பெரிது. வெறும் பேச்சுக்காரரல்ல. பொது மக்கள் மனதை உள்ளபடி அவர் அறிவார். அவர் வாழ்வு முற்றிலும் தொடர்ச்சியான போராட்டங்களே. அவர் விரைவில் நினைத்து, விரைவில் ஆலோசித்து, விரைவில் தாக்குவார் அல்லது ஆதரிப்பார். எதிராளி ஒரு யுக்தியைக் காணுவதற்கு முன் தான் ஒரு புத்தம் புதிய யுக்தியைக் கண்டுபிடித்துத் தயாராயிருப்பார். 1930-ம் வரு மார்ச்சு மாதத்தில் பொது மக்கள் அவருடைய ராஜிநாமாவை எதிர்பார்த்தார்கள். அப்பொழுது அவர் அப்படிச் செய்யவில்லை. ஒருக்காலும் அவர் ராஜிநாமா செய்ய மாட்டாரென்று ஜனங்கள் எப்பொழுது நினைத்தார்களோ, அப்பொழுது அவர் ராஜிநாமாச் செய்தார்.

ஜெயிலை வேண்டினார். சிறையிலும் சர்க்காருக்குத் தொந்திரவாகவேயிருந்தார் அவரை விடுதலை செய்யும்படியாகச் சர்க்காருக்கு நிலை ஏற்படும்படி செய்தவர் அவரே. யுத்த வீரத்தனமும் ராஜ தந்திர ஞானமும் ஒருங்கே அமைந்த தலைவர் தலைவன் அவரே. இம்மாதிரியாக ஒருவருக்கு அமைவது அரிது அரிது.

தனது மகோன்னத பதவியும் கவனிக்காது லார்டு இர்வின் காந்தி மகாத்மாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டதற்குக் காரணம் படேல் செய்த கிளர்ச்சியே யாகும். அலி சகோதரர்கள் எவ்வாறு தளகர்த்தர்களாய் காந்தி அடிகளுக்கு விளங்கினார்களோ, அவ்வாறே படேல் சகோதரர்கள் இருவரும் அடிகளுக்கு இரு கைகள். இவர்கள் தேச பக்தியைப் பற்றி எழுதி முடியாது. மகாத்மாவின் சில கொள்கைகளில் தலைவர் படேல் மாறுபட்டிருப்பினும், அவரையே தலைவராக நம்பி நடப்பவர். தான் சட்டசபைத் தலைமை வகிக்கும் பொழுது, தனது செலவிற்காக தனது சம்பளத்தில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு, மீதி எல்லாப் பணத்தையும் தேச சேவைக்காகவே மகாத்மாவுக்கு அனுப்பிவிடுவார். சட்டமறுப்பு 1930-ல் ஆரம்பமானவுடன், ஏப்ரல்மீ தனது பதவியை ராஜிநாமாச் செய்து, சட்டமறுப்பில் ஈடுபட்டு, 6மீ தண்டனை யடைந்தார். ராஜீயப் போராட்டத்தில் அதிகமாக ஈடுபட்டுச் சிறை சென்றமையால், அவரது உடல்நலம் சீர் கெட்டுப் போயிற்று. ஜெயிலிலிருந்து விடுதலை பெற்றார். 1931-ம் வருஷத்தில் ஐரோப்பா சென்று அங்கிருந்து மறுபடியும் இங்குற்றார். சட்டமறுப்பு மறுபடியும் ஆரம்பிக்கவே, அவர் கைது செய்யப்பட்டு சிறையில் வைத்திருக்கவே, மீண்டும் சுகவீனமான பொழுது, அவரது தேக நிலையை உத்தேசித்து அவரை விடுதலை செய்து ஐரோப்பாவுக்குப் போக விடை கொடுத்தார்கள் சர்க்கார். ஆஸ்திரியா சென்று சிகிச்சை பெற்றுச் சிறிது குணம் பெறவே, இந்தியாவைப்பற்றிய விரோதப் பிரசாரத்தின் விஷயத்தை அகற்றும் பொருட்டு அமெரிக்காச் சென்று, பிரசங்கங்கள் புரிந்துகொண்டு சுற்றுப் பிரயாணம் செய்தார். இதனால் உடல்நலம் மீண்டும் குறையவே மறுபடியும் ஐரோப்பாவுக்குத் திரும்பி வந்து, நோயுற்று வீயன்னா நகரில் 22—9—1933ல் ஆண்டவனில் ஐக்கியமடைந்தார்! அருகிலிருந்து அவருக்கு அன்புடன் சேவை செய்த சுபாஸ் போஸுக்கு எமது வணக்கம்.

அமெரிக்காவில் இந்தியாவைப் பற்றிப் பிரச்சாரம் செய்து அமெரிக்கரது அனுதாபத்தைப் பெற்று இந்தியரின் அந்தஸ்தை அங்கு உயரச் செய்த பெருமை கவிச்சக்ரவர்த்தி தாகூர், இந்தியக்கோகிலம் சரோஜினி தேவி, தலைவர் படேல் ஆகிய மூவர்களுக்கே உரித்தான தென்று





அன்னி பெசண்ட் அம்மையார்.

“குமார விகடன்” உதவியது.

[illegible]ும், தலைவர் படேலுக்கே முதற் ஸ்தானம் கொடுக்கப்படும் என்று கூறுகிறார் அறிஞர் சண்டர்லெண்டு. ஐரோப்பாவிலிருந்த பொழுது டாக்டர்கள் அவரை அமெரிக்காவுக்குப் போக வேண்டாமெனத் தடுத்தும், இந்தியாவின் மீது அவர் கொண்ட அளவற்ற அன்பே அவரை அமெரிக்காவிற்குத் தள்ளிக் கொண்டு போனது. அவருடைய கடைசி எண்ணம் பாரத மாதாவைப் பற்றியே. அவருடைய முதல் ஆசை யென்ன? இந்தியாவின் விடுதலையே. இரண்டாவது ஆசை யென்ன? இந்தியாவின் விடுதலையே. கடைசி ஆசை யென்ன? இந்தியாவின் விடுதலையே. அவர் உயிர் விடுவதற்கு முன்பு அவர் கூறியதாவது:—"எனது தேச மக்கள் அனைவருக்கும் உலகத்தின் மற்ற பாகங்களிலிருக்கும் எனது நாட்டாரின் நண்பர்களுக்கும் எனது ஆசீர்வாதங்களைத் தெரிவியுங்கள். இந்தியா கூடிய விரைவில் விடுதலை அடைய வேண்டுமென்று எனது உயிர் பிரியுமுன் நான் பிரார்த்தனை செய்கிறேன்." அவரது அந்திய காலத்தில் கூறிய பொன்னுரைகளை இந்தியா என்றுமே மறக்காது. இவ் வுருக்க மிக்க பிரார்த்தனை ஒவ்வொரு இந்தியருக்கும் மின்சார வேகத்தில் தேச பக்தியை உண்டாக்குமென்று நம்புகிறோம்.

படேல் வயது சென்றவரா யிருப்பினும், மரணத்தை எதிர் பார்த்து நின்றவரா யிருப்பினும், அவர் இந்தியாவைப் பற்றியே எண்ணி எண்ணி, உழைத்து உழைத்து மாண்டார். உண்டு உண்டு உடுத்துப் பற்பல களியாட்டங்களில் காலம் கழிக்கும் மனிதர்கள் போல் அவர் வாழவில்லை. அவர் வாழ்வு வீர வாழ்வு, தியாக வாழ்வு, சேவா வாழ்வு. தேச பக்தி, வீரம், தீரம், சத்தியம், நியாயம், நடுநிலை வழுவாமை, அன்பு, தியாகம், விசால ஹிருதயம், சீர்திருத்த மனம் முதலியவைகளால் ஆக்கப்பெற்ற இணையற்ற இந்திய மாமணியை நாம் இனி என்று காண்போம்! தேசபக்தி யற்ற ஒவ்வொரு இந்தியருக்கு அவரது வாழ்வு ஒரு பெரும் போதனையாக இருக்கிறது. படேல் என்ற வாக்கு நமக்கு தேசாபிமான மந்திரமா யிருக்கிறது. இந்தியா என்ற பெயர் உள்ளளவும் படேல் என்ற பெயர் பிரகாசித்துக் கொண்டே யிருக்கும். அவருடைய குடும்பத்தார்களுக்கும் அவர் தம் சோதரர் சர்தார் படேலுக்கும் நம் அனுதாபத்தை வணக்கத்துடன் அறிவிக்கிறோம். அவருடைய ஆத்மா சாந்தி அடைவதாக!

பொறுப்பாசிரியர் ரா. சுப்ரமண்யம் அவர்களால்,
தமது உத்தமபாளையம் ஆனந்தா பிரசில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

ஈழ கேசரி.

வட இலங்கையிலிருந்து
ஞாயிற்றுக்கிழமை தோறும்
12 பக்கங்களுடன் வெளிவருவதோர்
சிறந்த வாரப் பத்திரிகை.

(நான்காவதாண்டு)

இலங்கை, இந்தியா, பர்மா, மலாய்நாடு
முதலிய விடங்களில் ஏராளமான
சந்தாதாரர்களையுடையது

சிறந்த போறிஞர்களால் எழுதப்பெறும் இலக்கண இலக்கிய சம்பந்தமான அரிய கட்டுரைகளும், வரலாற்று ஆராய்ச்சி, அரசியல், பொருளாதார நிலை, சமயம், கல்வி, மாதர் பகுதி, சிறுவர் பகுதி, சமூக முன்னேற்றம் முதலிய பொது விஷயங்களும், வர்த்தமானங்களும் சிறப்பாக வெளிவருகின்றன.

தமிழன்பர்கள் யாவரையும் சந்தாதாரர்களாய்ச் சேர்ந்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்.

ஆண்டுச் சந்தா:

இலங்கை, இந்தியா, பர்மா ரூபா 4.
மலாய் நாட்டுக்கு வெள்ளி 4.

மாதிரிப் பிரதி இனம்! உடனே எழுதுங்கள்!!

விலாசம்:
"ஈழ கேசரி" அன்பர்,
சுன்னாகம், இலங்கை.

# குமார விகடன்.

ஹாஸ்ய ரசம் ததும்பும் அற்புதப் பத்திரிகை.

வேடிக்கை! விநோதம்! விசித்திரம்! விகடம்!
**வீரமான வேடிப்புரைகள்! காரமான கட்டுரைகள்!**
சாரமான பேச்சு! சத்தியத்தின் வாள் வீச்சு!
கதை, கவிதை, கலை, களிப்பு, கண்டனம், புகழ்
யாவும் பொதிந்து, அழகிய பல சித்திரப் படங்களோடு
மாதா மாதம் வெளியிடப்பெறும் ஓர்

## விகடப் பத்திரிகை.

தூக்கத்தில் ஆழ்ந்துள்ள தமிழருக்குப் பெரும் ஊக்கம்
கொடுத்து, உயர்வடையச் செய்யவேண்டும் என்னும்
உயர்ந்த நோக்கத்தோடுதான் நமது பத்திரிகை
வெளியிடப்படுகிறது.

**சந்தா விவரம்.**

| | |
|---|---|
| உள் நாடு ... ... | ரூ. 1—4—0 |
| வெளி நாடு ... ... | ரூ. 2—0—0 |

தனிப் பிரதிகள் எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகளிடம்
கிடைக்கும். விலை அணு 0—2—0.

விலாசம்:

**"குமார விகடன்,"**

காஞ்சீபுரம்.

17?893

நமது புதிய பிரசுரங்கள்

வெளிவந்துவிட்டன! வெளிவந்துவிட்டன!!

# சோவியத் ருஷியா.

பண்டித ஜவஹர் லால் நேரு எழுதிய ஆங்கில நூலின்
நேரான தமிழ் மொழிபெயர்ப்பு.

“தமிழ் நாடு” ஆசிரியர்

**டாக்டர் P. வரதராஜுலு நாயுடு அவர்களின்**

முகவுரையுடன் கூடியது.

*தோட்டியும் தொண்டமானும் பிச்சைக்காரனும் பிரபுவும்*

*ஏற்றத் தாழ்வில்லாமல் குபேர வாழ்வு வாழுகின்ற*

**சோவியத் ருஷியாவை அறிய இதுவே முதல் சந்தர்ப்பம்.**

*விஷயத்தை விளக்க கண்ணைக் கவரும் 21 ஹாப்டோன்*
*படங்களுடன் கூடியது*

ஆர்ட் & கிளேஸ் பதிப்பு விலை ரூ. **1—4—0.**

தபாற் செலவு வேறு

---

# ராட்டூர்-வீரன்- துர்க்கா தாஸ்.

(சரித்திர சம்பந்தமான ஓர் தேசீய நாடகம்)

வங்காள மஹாகவி பாபு துவிஜேந்திர லால் ராய்
எழுதியது.

அநேக நாடகங்க ளெத்தனையினும்

**இத் துர்க்கா தாஸே முதன்மையானது.**

---

ஆரம்ப முதல் இறுதி வரை
அற்புதம்! ஆச்சர்யம்!! ஆனந்தம்!!!
தேசபக்தி ததும்புகிறது! சத்தியம் ஒளிர்கிறது!!
ஆவேச நடை! அலங்கார பாஷை!!
மயிர் சிலிர்க்குஞ் செயல்கள்!!!

கிரௌன் 1/8 சைஸ்

**380 பக்கங்கொண்ட புத்தகம் 1-க்கு விலை ரூ. 1—4—0.**

தபாற் செலவு வேறு.

பாரதிப் புத்தகாலயம், உத்தமபாளையம்.